விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 021 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 01, வியாழக்கிழமை 17.12.2015

மகிழ்ந்து மனம் நத்தாரை நேசிக்குது
கோடி வெல்ல வேண்டுமென்று ஆசிக்குது
மஹஜன சம்பத
நீங்களும் இன்றே வாங்குங்கள்
www.nlb.lk
தேசிய லொத்தர் சபை
NLB அதிர்ஷ்டத்தின் ஒரே பெயர்

# மனித உரிமை-ஜனநாயகம்-நீதிக்கான மதிப்பை இலங்கையிடம் எதிர்பார்க்கின்றது அமெரிக்கா

## தோமஸ் ஷனோன் நேற்றுக் கொழும்பில் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.17
மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஜனநாயகத்தை நிலை நாட்டுதல், நீதியை ஊக்குவித்தல் மற்றும் சர்வதேசச் சட்டங்களை நிலை நிறுத்த உதவுதல் போன்றவற்றில் சர்வதேச சமூகத்தின் ஒரு தலைமையாக -வலுவான இலங்கையைப் பார்க்க அமெரிக்கா விரும்புகிறது.
இவ்வாறு அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலராக நியமனம் பெறவுள்ள தோமஸ் ஷனோன் கொழும்பில் வைத்துத் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுக் காலை லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில், நிகழ்த்திய உரையின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உலகப் பொருளாதாரத்துக்குப் பங்களித்தல், பக். 23


## 993 பேர் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.17
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் சாட்சியமளிக்க, கடந்த 6 நாள்களில் ஆயிரத்து 262 பேர் வருகை தந்தபோதும் 993 பேரின் சாட்சியங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன.
குறித்த மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு, கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் தனது விசாரணைகளை ஆரம்பித்திருந்தது. தொடர்ச்சியாக ஆறு நாள்கள் ஆணைக்குழுவின் விசாரணைகள் நடைபெற்றன.
யாழ். மாவட்ட செயலகத்தில் இரண்டு நாள்களும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இரண்டு நாள்களும், சங்கானை மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலகங்களில் தலா ஒரு நாளுமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.
யாழ்.மாவட்ட செயலகத்துக்குக் கடந்த வெள்ளிக்கிழமை 235 பேர் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.
அவர்களில் பக். 23

# சரணடைந்தோருக்கு ராணுவமே பொறுப்பு

## விசாரணையின்போது தெரிவித்தார் ஆணைக்குழுவின் தலைவர் பரணகம

யாழ்ப்பாணம், டிசெம்பர் 17
இராணுவத்திடம் சரணடைந்து காணாமற்போனவர்களுக்கு இராணுவத்தினரே பொறுப்புக் கூறவேண்டும் என்று தெரிவித்தார் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம.
தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற காணாமற்போனோர் தொடர்பான விசாரணையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம் பெற்ற அமர்வில் சாட்சியம் அளிப்பதற்காக வந்த காணாமற் பக். 24



நேற்று ஆணைக்குழு முன் கதறியழுது சாட்சியமளித்த தாய்

### பாலச்சந்திரனுடன் நின்ற மகனைக் காணவில்லை

யாழ்ப்பாணம், டிசெ.17
வன்னியில் 2009ஆம் ஆண்டு இறுதிப் போர் நடைபெற்றபோது எனது மகன் ஐங்கரன், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனுடன் நின்றார் எனவும், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி பாலச்சந்திரனுடன்
அவரை பக். 24

## அரசியல் கைதிகளின் வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17
வழமைக்கு மாறாக அதிக எண்ணிக்கையான சிறை உத்தியோகத்தர்களின் பாதுகாப்புடன் அரசியல் கைதிகள் 12 பேர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். எனினும் நேற்றுப் பதில் நீதிவான் கடமையாற்றியமையால் விசாரணைகள் எதுவுமின்றி குறித்த வழக்கு ஒத்திவைக்கப் பக். 24

## கைதிகள் விவகாரம் குறித்து நாளை பேச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 17
அரசியல் கைதிகளது விவகாரம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் நாளை வெள்ளிக்கிழமை பேச்சு இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனால் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில்
ஈடுபட்டிருந்த பக். 06

## வடக்குப் பேரிடர் தணிப்பு தினமாகியது டிசெம்பர் 26

*மாகாண சபையில் நேற்றுப் பிரகடனம்*

யாழ்ப்பாணம், டிசெ. 17
வடக்கு மாகாண சபையினால், வடக்கு மாகாண இயற்கைப் பேரிடர் தணிப்பு தினம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. சுனாமிப் பேரலையினால், மக்கள் காவு கொள்ளப்பட்ட டிசெம்பர் 26 ஆம் திகதியை, வடக்கு மாகாண இயற்கைப் பேரிடர் தணிப்பு தினமாகப் பிரகடனப் படுத்தியுள்ள பக். 25



அப்ப கட்டாயம் பொறுப்புச் சொல்லுவினமோ....

## ஐரோப்பிய ஒன்றியத் தூதருடன் கூட்டமைப்பினர் நேற்றுப் பேச்சு

கொழும்பு, டிசெ.17
ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டேவிட் டெலி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினரை நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள எதிர்க் கட்சித் பக். 25



## வடக்கு முதலமைச்சரின் 2016-வேலைத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 17
வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதம் நேற்று இடம்பெற்றது. இதன்போது அடுத்த ஆண்டுக்கு முதலமைச்சரின் அமைச்சினூடாக மேற்கொள்ளப்பட வுள்ள வேலைத் பக். 24

## எமது விடுதலைக்காக மீண்டும் போராடுங்கள்

அரசியல் கைதிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 17
தமது விடுதலையை வலியுறுத்தித் தாயகத்திலும் புலத்திலும் போராட்டங்களை முன்னெடுங்கள் என்று வலியுறுத்தியுள்ள அரசியல் கைதிகள், தமது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஐ.நா சபையின் செயலாளர், பக். 23

## வடக்கு மாகாண சபைக்கு வழங்கிய போத்தல் தண்ணீரில் மலத்தொற்று

பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குப்பதிவு

சாவகச்சேரி, டிசெ. 17
வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட போத்தல் குடிதண்ணீரில் மலத்தொற்றுக் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகச் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நேற்றுச் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்துள்ளது.
இதுதொடர்பில்ஹொரணையில் உள்ள குறித்த போத்தல் தண்ணீர் பக். 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையோ 32,000 மில். ரூபா ஒதுக்கியதோ 300 மில். ரூபா

## கொழும்பு அரசைச் சாடுகின்றார் வடக்கு போக்குவரத்து அமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ. 17
வடக்கு மாகாணத்தின் வீதி அபிவிருத்திக்கு 32 ஆயிரம் மில்லியன் ரூபா தேவையாக இருக்கையில், கொழும்பு அரசு 300 மில்லியன் ரூபாவையே ஒதுக்கீடு செய்துள்ளது. - இவ்வாறு குற்றம் சுமத்தினார் வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்டத்தின் கொள்கை விளக்க உரை மீது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எனது போக்குவரத்து அமைச்சுக்குரிய நியதிச் சட்டம் நீண்ட காலமாக இழுபடுகின்றது. அந்த நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால், போக்குவரத்துத் திணைக்களம் அமைக்கப்பட்டிருக்கும். அதனூடாக 150 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கும்.

வடக்கு மாகாணத்திலுள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு சொந்தமான வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 32 ஆயிரம் மில்லியன் ரூபா வரையில் தேவையாக இருக்கின்றது. ஆனால் மத்திய அரசினால் 300 மில்லியன் ரூபாவே வழங் கப்பட்டிருக்கின்றது. இருப்பினும் அந்த நிதியில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 5 மில்லியன் ஒதுக்கியுள்ளேன். அவர்கள் தமது பிரதேசத்திலுள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான வீதிகளை இனங்கண்டு பிரேரிக்க வேண்டும். இதனூடாக ஒவ்வொரு பிரதேசத்திலும் குறிப்பிட்டளவான வீதிகளையாவது திருத்த முடியும் - என்றார்.

கொள்கை விளக்க உரையில் கருத்து தெரிவித்த மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினரான திருமதி அனந்தி சசிதரன், போர்ப் பிரதேசம் என்று சொல்லி முல்லைத்தீவு - கிளிநொச்சிக்கு மாத்திரம் உதவிகளை வழங்க முடியாது. ஏனென்றால் போரின் போது வடக்கின் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும், இடம்பெயர்ந்து இந்த இரண்டு மாவட்டங்களில் இருந்தார்கள். தற்போது போர் முடிவின் பின்னர் பல மக்கள் மன்னார் - வவுனியா - யாழ்ப்பாணத்துக்குத் திரும்பியுள்ளனர்.

எனவே போர்ப் பிரதேசம் என்று கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவை மாத்திரம் குறிப்பிட்டால், போரால் பாதிக்கப்பட்ட ஏனைய மூன்று மாவட்டங்களிலும் உள்ள மக்கள் பாதிக்கப்படுவார்கள் - என்றார்.
(ற-5,ரி5)



## மீள் குடியமர்வு ஏற்பாடுகள் வலி.வடக்கில் நடக்கின்றன

### கனடா தூதுவருக்கு யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17
வலி.வடக்கில் விரைவில் மீள் குடிமர்வு மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று கனடா தூதுவர் செலி வைற்றிங்கிடம் தெரிவித்தார் யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன்.

யாழ்.மாவட்டத்துக்கு வந்திருந்த கனடா தூதுவர் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கடந்த மார்ச் மாதம் 1000 ஏக்கர் காணிகளில்மக்கள்மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். அதேவேளை, விரைவில் மீள் குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. - என்று தெரிவித்தார்.

இளைஞர்களின் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் பல்வேறு பிரச்சினைகளையும் கனடா தூதுவருக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் எடுத்துரைத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-106)

## மகேஸ்வரி நிதிய விவகாரத்தை இழுத்தடிக்கின்றது அரச தரப்பு

*பாதிக்கப்பட்டவர்கள் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், டிசெ. 17
யாழ்.மாவட்ட பாரவூர்திச் சங்கத்துக்கு மகேஸ்வரி நிதியம் சுமார் ஒரு கோடி ரூபா பணம் வழங்க வேண்டியுள்ள விடயம் தொடர்பில் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவும் பொலிஸாரும் அக்கறையின்றி இழுத்தடிப்புச் செய்துவருகின்றனர் என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

அது தொடர்பில் முறைப்பாடு செய்து சில மாதங்கள் ஆகிவிட்டபோதும் ஆணைக்குழுவும், பொலிஸாரும் அது குறித்த விசாரணைகளைத் துரிதப்படுத்தவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் நாடாளுமன்றில் பிரஸ்தாபிக்கப்பட்ட பின்னரே கோப்பாய் பொலி ஸார் விசாரணையை மீண்டும் முன்னெடுத்துள்ளனர் என்று சங்கத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மகேஸ்வரி நிதியம் தமக்குத் தரவேண்டிய பணத்தை தரமறுப்பதாக கூறி லஞ்ச ஊழல் ஆணைக் குழுவிடம் முறையிட்டிருந்ததுடன், அதனை வழங்கக் கோரி பல ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் பாரவூர்திச் சங்கத்தினர் நடத்தியிருந்தனர்.

கடந்த வரவு செலவு விவாதத்தின்போது நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் இது சம்பந்தமாக உரையாற்றியிருந்தனர். அதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-4,86)



*மீசாலை வடக்கு தட்டான்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகே 8 அடி நீளமான வெங்கணாந்திப் பாம்பு மக்களால் அடித்துக் கொல்லப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. முயல் ஒன்றைத் துரத்திச் சென்ற நாயைக் குறித்த பாம்பு மடக்கிப் பிடித்துச் சுற்றியுள்ளது. நாயின் அவலக் குரல் கேட்டு வீட்டு உரிமையாளர் சென்று பற்றைக்குள் பார்த்தபோது நாயைச் சுற்றியவாறு பாம்பு காணப்பட்டுள்ளது. அதையடுத்து ஊர் மக்கள் கூடிப் பாம்பை அடித்துக் கொன்றுள்ளனர். ஆயினும் நாயைக் காப்பற்ற முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)*

## பன்றித்தலைச்சி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ.17
மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

இன்று இரவு 9.00 மணிக்கு சங்கீத கதாப்பிரசங்க வித்வான் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா 'பக்த கௌரி' பற்றி பக்கவாத்திய சகிதம் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார் என கோயில் அறங்காவலர் அறிவித்துள்ளார்.
(ற-ரி6)

# முதலமைச்சர் நிதியத்துக்கு அனுமதி வழங்கப்படாதுவிட்டால் போராட்டம்

## வடமாகாண உறுப்பினர் சிவாஜிலிங்கம் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், டிசெ. 17
எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண முதலமைச்சர் நிதியத்துக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். அவ்வாறு அனுமதி வழங்கப்படா விட்டால், ஜனாதிபதி செயலகத்தின் முன்பாகவும் - நாடாளுமன்றத்தின் முன்பாகவும் நாங்கள் போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்படும். 13 ஆவது திருத்தத்தினுள் வைத்து கழுத்தறுப்பதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நிலையில் சர்வதேச சமூகத்துக்கு எமது நிலைப்பாட்டைச் சொல்ல வேண்டிய நேரம் தற்போது வந்துள்ளது. - இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்ட கொள்கை விளக்க உரை மீது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

மத்திய அரசு போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு எந்த உதவிகளையும் செய்யப் போவதில்லை. வேலை வாய்ப்புக்களையும் அவர்கள் தரப் போவதில்லை. இவ்வாறானதொரு நிலையில், இங்கு முதலீடு செய்வதற்கு பெருமளவிலானோர் வரத் தயங்குகின்றனர். வந்த சிலரது முதலீட்டு முயற்சிகளும் மத்திய அரசின் நடவடிக்கைகளால் தோல்வியில் முடிவடைந்துள்ளது. மாகாண அரசின் சில நடவடிக்கைகளும் அந்தத் தோல்விக்கு காரணமாகியுள்ளன.

நாங்கள் முதலீட்டாளர்களை அழைக்க வேண்டும். அதற்கான பகிரங்க அழைப்பை விடுக்க வேண்டும். முதலீட்டின் ஊடாகத்தான் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். பிரச்சினை தீர்ந்த பின்னர்தான் இதைச் செய்யலாம் என்றால் அதற்குள் நாங்கள் தீர்ந்து விடுவோம்.

மத்திய அரசு வழங்கிய இந்த நிதியை வைத்துக்கொண்டு நாம் எதுவும் செய்ய முடியாது. எங்களது மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, நீங்கள் ஏன் ஒன்றும் செய்யவில்லை என்று கேட்பதில்லை. அவர்கள் எங்களைப் பார்த்துத்தான் கேட்கின்றார்கள். மாகாணசபையினரான நீங்கள் என்ன ஒன்றும் செய்யவில்லை என்று கேட்கின்றார்கள். நாங்கள் இதனை வாயைமூடிக் கேட்க வேண்டிய நிலை இருக்கின்றது. இதிலிருந்து நாங்கள் எவரும் தப்பிக்க முடியாது.

முதலமைச்சர் நிதியம் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும். அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி கிடைக்கப் பெறாவிட்டால், ஜனாதிபதி செயலகத்தின் முன்பாகவும் - நாடாளுமன்றத்தின் முன்பாகவும் நாங்கள் போராட்டம் நடத்த வேண்டும் - என்றார். (ற-5,ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்கள் வினைத்திறனாக இல்லை

## வடமாகாண சபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 17

உள்ளூராட்சி மன்றங்கள் வினைத்திறனாக இயங்கவில்லை, வீடமைப்பில் புள்ளியிடலினால் பெரும்பாலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன, வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக இலவச மின்சார இணைப்பு மீளவும் வழங்கப்பட வேண்டும், சுற்றுலாத்துறை நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அது சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்று பல்வேறு விடயங்களை ஆளுங்கட்சி – எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றுச் சுட்டிக்காட்டினர்.

வடக்கு மாகாண வரவு – செலவுத் திட்டத்தில் முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதம் நேற்று இடம்பெற்றது. இதில் 28 உறுப்பினர்கள் முழுநேரமும் உரையாற்றினர்.

சகல உறுப்பினர்களும் உள்ளூராட்சி மன்றங்கள் வினைத் திறனுடன் செயற்படவில்லை என்று குற்றம் சுமத்தினர். அத்துடன் திண்மக் கழிவகற்றல் பெரும் சவாலாக எழுந்து வருவதாகவும் தெரிவித்தனர். உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், மேலிடத்திலிருந்து வரும் உத்தரவுகளை செயற்படுத்தாமல் இருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

அதேபோன்று, வீடமைப்புத் திட்டங்களில் புள்ளியிடலினால் பெருமளவான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர். எனவே இந்த நடைமுறையில் மாற்றம் வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். அதேபோன்று மின்சார விடயத்தில், வடக்கின் வசந்தம் திட்டத்தில் கடந்த காலங்களில் வழங்கப்பட்டதைப்போன்று இலவச மின்னிணைப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தனர்.

அத்துடன் சகல உறுப்பினர்களும், வடக்கின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தனர். இதனூடாக பலருக்கு வேலை வாய்ப்பு வழங்க முடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறு முதலமைச்சரின் அமைச்சு மீதான விடயத்தில் உறுப்பினர்கள் பல்வேறு விடயங்களை முன்னிறுத்திப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(து-5-ரி5)

# சும்மா இருக்கும் இராணுவம் மூலம் வடிகால்களை துப்புரவு செய்யலாம்

## வடக்கு முதலமைச்சர் கருத்து



யாழ்ப்பாணம், டிசெ. 17

இராணுவத்தினர் இங்கு சும்மா தானே இருக்கின்றனர். எனவே அவர்களைக் கொண்டு, அவர்கள் அடைத்த வெள்ளவாய்க்கால்களையும் – கான்களையும் சுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம். இது தொடர்பில் அவர்களுடன் பேச வேண்டும் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் அமைச்சு மீதான விவாதம் நேற்று இடம்பெற்றது. இதன் போது இறுதியில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விவாதத்தின் போது ஆளுங்கட்சி உறுப்பினர் க.விந்தன், யாழ். நகரில் கடந்த காலங்களில் இராணுவத்தினர் சுற்றிவளைத்து முகாம்களை அமைத்திருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் கடலினால் வந்து, கால்வாய்கள் ஊடாக ஊடுருவித் தாக்குதல் நடத்துவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக, இராணுவத்தினர் கால்வாய்களை மூடிவிட்டனர். இதனாலேயே, யாழ்.நகரின் கழிவுநீர் வெளியேற்றம் – வெள்ளம் வடிந்தோடலில் பிரச்சினை என்பன ஏற்படுகின்றது என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர், இறுதியில் பதிலளித்து உரையாற்றிய முதலமைச்சர், இராணுவத்தினர் போட்ட தடைகளை அவர்களைக் கொண்டே செய்விக்கலாம். அவர்கள் இங்கு சும்மாதானே இருந்து கொண்டிருக்கின்றனர் என்று குறிப்பிட்டார். அத்துடன் இது தொடர்பில் அவர்களுடன் பேச வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும், இராணுவத்தினர் இங்கு தொடர்ந்து நிலை கொண்டிருப்பதனாலேயே இங்கு குடியேற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டிய முதலமைச்சர், இதனை இன்றைய தினம் (நேற்று) தன்னைச் சந்தித்த கனேடியத் தூதுவரிடமும் சுட்டிக்காட்டியதாகத் தெரிவித்தார்.

அரசுடன் இணைந்து செயற்படலாம்தானே என்று கனேடியத் தூதுவர் தன்னிடம் கேள்வி எழுப்பியதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார். வெளிநாடுகள் பல எங்களின் குறைகளைக் கண்டுகொள்கின்றார்கள் இல்லை. அவர்கள் மத்திய – கொழும்பு அரசிற்காகவே பரிந்து பேசுகின்றார்கள் என்றார் முதலமைச்சர்.

(து-5-ரி5)

# குமுழமுனையில் காடழிப்பு இடம்பெறுவது உண்மையே

## மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

ஒதியமலையில் தமிழ் மக்களின் காணிகளை வனபரிபாலன திணைக்களம் திருப்பிக் கொடுத்ததற்கும், குமுழமுனையில் காடழிப்பு இடம்பெறுவதற்கும் இடையில் எந்தச் சம்பந்தமும் இல்லை. குமுழமுனையில் காடழிப்பு இடம்பெறுகின்றதுதான் என்று ஆணித்தரமாக கூறுவதாக, வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

ஆளுங்கட்சியின் சக உறுப்பினர் அஸ்மின், முஸ்லிம்கள் என்ற காரணத்தினாலா 79 முஸ்லிம் குடும்பங்களைக் குமுழமுனையில் குடியமர்வதற்கு எதிர்க்கின்றீர்கள் என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலடியாகவே, உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் உரையாற்றிய உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒதியமலைப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் முன்னர் பூர்வீகமாக வாழ்ந்த இடங்களில் – வாழ்ந்தமைக்கான எச்சங்கள் – ஆதாரங்கள் உள்ள இடங்களை வனபரிபாலனத் திணைக்களத்தினர் அத்துமீறி எல்லை போட்டு வருகின்றனர் என்று கடந்த அமர்வில் குற்றம் சுமத்தியிருந்தேன். இதன் பின்னர் வனபரிபாலனத் திணைக்களத்தினர், ஒட்டுசுட்டான் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் ஊடாகத் தொடர்பு கொண்டனர். தற்போது அந்தப் பிரதேசம் வனபரிபாலன திணைக்களத்தினரின் எல்லைகள் அகற்றப்பட்டு உரியவர்களுக்கு – 301 ஏக்கர் காணி வழங்கப்படவுள்ளது. இதற்கு நாம் நன்றி சொல்லவில்லை. நடக்க வேண்டிய விடயம் நடந்திருக்கின்றது – என்றார்.

இதன் பின்னர் இதே அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றிய ஆளுங்கட்சி உறுப்பினர் அஸ்மின், ஒதியமலையில் 301 குடும்பங்களுக்கு காடழிப்பை செய்து அவர்களை குடியேற்றுவதற்கு வனஇலாக திணைக்களம் அனுமதியளித்திருக்கின்றது. அது வரவேற்கதக்க விடயம். அதே சந்தர்ப்பத்தில் குமிழமுனையில், ஏற்கனவே தங்களின் காணி உரித்துடைய 79 குடும்பங்களை குடியேற்றுவதற்கு – முஸ்லிம் குடும்பங்கள் என்ற காரணத்தினாலா அதற்கு எதிர்ப்பு எழுந்தது என்ற கேள்வி இருக்கின்றது – என்றார்.

இதன் பின்னர் பதிலளித்த ஆளுங்கட்சி உறுப்பினர் து.ரவிகரன், ஒதியமலையில் வனபரிபாலன திணைக்களம் காடழித்து மக்களை குடியேற்றுவதாக நான் சொல்லவில்லை. தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை வனபரிபாலனத் திணைக்களம் வழங்கியிருக்கின்றது என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன். குமுழமுனையில் காடழிப்புத்தான் என்று மீண்டும் ஆணித்தரமாகக் குறிப்பிடுவதாக அவர் தெரிவித்தார்.

(து-5-ரி5)

# மைத்திரிபால நாடு திரும்பியவேளை விமான நிலையத்தில் துப்பாக்கிதாரி

## அது வதந்தி என்கிறது பொலிஸ்

கொழும்பு, டிசெ. 17

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விமான நிலைய விருந்தினர் பகுதியினூடாக வரும் போது கைத்துப்பாக்கியுடன் ஜனாதிபதியை ஒருவர் நெருங்கியதாகச் செய்திகள் வெளியாகியுள்ளபோதும், அந்தச் செய்தியில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கிறது.

எனினும், பாதுகாப்புக்குச் சென்ற தமது நிறுவன ஊழியர் ஒருவரை பொலிஸார் கைது செய்து விடுதலை செய்துள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி வத்திக்கானில் இருந்து நேற்று நாடு திரும்பிய போது இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் விமானம் தரையிறங்கியவேளை முக்கிய விருந்தினர்கள் வரும் பகுதியில் பொலிஸார் சோதனை செய்துள்ளனர். இதன்போது சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிக்கொண்டிருந்த ஒருவரை விமான நிலையப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவரது கால் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 9 மில்லி மீற்றர் ரகத் கைத்துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவுடன் தொடர்பு கொண்டபோதே, அந்தச் செய்தியில் உண்மைத் தன்மை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெறும் பட்சத்தில் எமக்கு உடனடியாக அறிவிக்கப்படும். எனினும், குறிப்பிடுவது போன்று பொலிஸார் எவரையும் கைது செய்யவில்லை. இது வதந்தியாக இருக்கலாம் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இதேவேளை, துப்பாக்கி வைத்திருந்த சந்தேகநபர் சிவில் விமான சேவை அதிகாரி என்று தெரியவந்துள்ளதாகவும், அவரை விசாரணை இன்றி விடுதலை செய்யுமாறு சிவில் விமான சேவை உயர் பீடத்திலிருந்து பொலிஸாருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் மற்றொரு செய்தி வெளியாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)



உ
சிவமயம்
ஈழத்து சிதம்பரம் காரைநகர்
திருவெம்பாவை இரண்டாம் திருவிழா விஞ்ஞாபனம்
18.12.2015 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு
சிவன் ஐயனார் சுவாமி அபிஷேகம், பூசை,
திருவெம்பாவை பாட்டு ஓதல் அதனைத் தொடர்ந்து
மறைந்தும் மறையாத தவில் மாமேதை
N.R. சின்னராஜா அவர்களின் புதல்வர்
N.R.S. ரவீந்திரன் உடன் அணிசெய் தவில் நாதஸ்வர
வித்துவான்களின் விசேட மேளக்கச்சேரியுடன் சுவாமி
வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.
"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"
2ஆம் நாள் திருவிழா உபயகாரர்
பாலகணேசன் கனஞ்சியம்.
225, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

NEW SCIENCE WORLD
Navalar Road- Brown Road Junction, Jaffna.
CHEMISTRY
A/L 2017 Batch
வாயுக்கள்
சனி. ஞாயிறு 9.30 - 11.30 am
ஆரம்பம்: 19.12.2015 சனி
By.Mr.K.T. SHIVAKUMAR
(B.Sc, PGDE)

Combined Mathematics
இணைந்த கணிதம்
புதிய அலகுகள் ஆரம்பம் 19.12.2015 சனி.
2016 Batch 7.30 - 9.30a.m
தொகையீட்டின் பிரயோகம்
2017 Batch 11.30 - 01.30p.m
ஒருதள விசைகள்
S.S.Senthilraj B.Sc, PGDE
NEW SCIENCE WORLD
Navalar Road - Brown Road Junction
Jaffna
VICTORY MUST

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தெற்கு,தமிழ் பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2015

கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைக்குள் 05 வருடங்கள் வசித்தமையை வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)
5. தொழில்நுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்ட தகைமைகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப் பதாரி நேர்முகப் பரீட்சையின் விதிக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா (113/= N.B.T,VAT வரி உள்ளடங்கலாக) செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப் படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு ஒரே விண்ணப் படிவத்தில் விண்ணப்பித்தல் தவிர்க்கப்பட வேண்டும். அத்தகைய விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு "செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா, என்ற முகவரிக்கு 2015.12.30 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
5. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாக எழுதப்படவேண்டும்.
6. ஆள்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப் பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் பின்னராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரிய வரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

**பதவிகள் பற்றிய விவரம்**

| பதவி இல. | பதவிகள் |
|---|---|
| 01 | திருத்துநர் (Machanic) - தரம் III |

சம்பள அளவுத்திட்டம் - PL – 2-2006A (12210-10x130-10x145-10x160 -12x170-18600)
அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்.

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**

1. கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இர்ண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி இறுதி திகதியன்று தேசிய தொழில்நுட்ப தகைமைச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அதாவது N.V.Q தரம் II (Level II) தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.
3. இப்பதவியில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| பதவி இல | பதவிகள் |
|---|---|
| 02 | காரியாலய காரிய சகாயர் - தரம் III |
| 03 | வேலை / வெளிக்கள தொழிலாளர் - தரம் III |

சம்பள அளவுத்திட்டம் - PL – 1-2006A (11730-10x120-10x130-10x145-12x160-17600)
அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்.

**கல்வித் தகைமை**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (5) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-** மேற்குறிப்பிட்ட கல்வித்தகைமைகளுடன் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் தரம் 8/ஆண்டு 9 சித்தி கவனத்தில் கொள்ளப்படும்.

சுகந்தி கிஷோர்
செயலாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

(சி.15814) (13.15.17)




"பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவ தாக அனைவருக்கும் கூறிவிட்டு, அதிலுள்ள பயங்கரமான சரத்து களை ஏன் சாதாரண சட்டத் துக்குள் உள்ளீர்க்கப் பார்க்கின்றீர்கள்."

# மீண்டும் அடக்குமுறை; முயற்சிக்கின்றது அரசு

## நாடாளுமன்றில் ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 17
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவ தாக ஜெனிவாவில் கூறிய அரசு, அந்தச் சட்டத்திலுள்ள பயங்கரமான சரத்துகளை சாதாரண சட்டத்துக்குள் உள்ளீர்த்து மீண்டும் அடக்குமுறையை உருவாக்க முயற்சிக்கின்றது எனக் குற்றஞ்சாட்டிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், இந்த நிலைமையானது பயங்கரவாதத் தடைச்சட்டத்தைவிடவும் ஆபத் தானது என்றும் எச்சரிக்கை விடுத்தார்.
இந்தச் சட்டதிருத்தம் தொடர்பில் நீதிமன் றத்தை நாடுவதற்கும் வரையறுக்கப்பட்ட காலமே உள்ளதால், இது குறித்து நாடாளு மன்றத்துக்கு அரசு தெளிவுபடுத்தவேண் டும் என்றும் வலியுறுத்தினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம், கைத் தொழில் மற்றும் வணிக அலுவல்கள், அரசு தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரை யாற்றியபோதே மேற்கண்ட விடயங் களைக் குறிப்பிட்ட அவர், மேலும் குறிப் பிடுகையில்,
கடந்த சனிக்கிழமை இந்தச் சபையில் குற்றவியல் சட்டக்கோவை திருத்தம் அவ சரமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பயங்கர வாத தடைச்சட்டத்திலுள்ள பயங்கரமான சரத்துகள் இந்த சாதாரண சட்டமான குற்ற வியல் சட்டக் கோவைக்குள் உள்ளீர்க்கப் படுவதாக அந்தத் திருத்தம் அமைந்துள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன் படுத்தித்தான் அன்று ஊடகவியலாளர் திஸ்ஸநாயக்க கைதுசெய்யப்பட்டார். ஊடக வியலாளர்களைக் கைது செய்ய அந்தக் சட்டத்திலுள்ள பயங்கரமான சரத்துகளைப் பயன்படுத்தினார்கள். இப்போது பயங் கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாகக் கூறியுள்ளீர்கள். அது நீக்கப்படுகின்றதா எனப் பார்ப்போம். ஆனால், அந்தச் சட் டத்திலுள்ள பயங்கரமான சரத்துக்கள் சாதாரண சட்டமான குற்றவியல் சட்டக் கோவைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவ தாக நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும், ஜெனிவாவுக்கும், உலகுக்கும் கூறிவிட்டு அதிலுள்ள பயங்கரமான சரத்துகளை ஏன் சாதாரண சட்டத்துக்குள் உள்ளீர்க்கப் பார்க்கின்றீர்கள். அந்தச் சரத்துக்களை வேறு சட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்த முயற்சிப்பது அதைவிட (பயங்கரவாதத் தடைச்சட்டத்தை) ஆபத்தானது.
ஏனெனில், பயங்கரவாதத் தடைச் சட்டத் தின்கீழ் ஒருவரைக் கைதுசெய்வது இலகு வானதல்ல. அதற்குச் சிக்கலான நடை முறைகள் உள்ளன. ஆனால், நீங்கள் அதி லுள்ள பயங்கரமான சரத்துகளை சாதா ரண சட்டத்துக்குள் உள்ளீர்த்து மீண்டும் அடக்குமுறையை ஏற்படுத்த முயற்சிக் கின்றீர்கள்.
இந்தச் சட்டமூலம் ஜனவரி மாதம் விவா தத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். எதிர் வரும் வெள்ளிக்கிழமை நீதிமன்றங் களுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றத்தை நாடவும் வரையறுக்கப்பட்ட காலமே உள் ளது. எனவே, இது தொடர்பாக இந்த நாடாளுமன்றத்துக்கு அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்றார். (த-சி)

# அமெ.-இலங்கை பேச்சு பெப்ரவரியில் ஆரம்பம்

## அமெ. உயர் அதிகாரி தோமஸ் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 17
இலங்கை அமெரிக்கா அரசுகளுக்கு இடையி லான இருதரப்பு கூட்டுப் பேச்சு அடுத்த வருடம் பெப்ரவரியில் வாஷிங்ட னில் ஆரம்பமாகவுள்ளது என்று அமெரிக்க இரா ஜாங்கத்திணைக்களத்தின் ஆலோசகர் தோமஸ் ஷனோன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கை யில்,
இலங்கைவாய்ப்புகள் நிறைந்த சுபீட்சத்தை நோக்கிய பயணம் செய்து கொண்டுள்ள நேரத்தில், நான் இலங் கைக்குப் பயணம்மேற் கொண்டுள்ளமையா னது மகிழ்ச்சியளிக்கின் றது. இலங்கை சுபீட்சத் துடன் சந்தர்ப்பங்களுடன் முன்னோக்கிச் செல்கின்ற நேரத்திலேயே நான் எனது முதலாவது பயணத்தை இலங்கைக்கு மேற்கொண் டுள்ளேன்.
இலங்கையில் நீண்ட கால சமாதானத்துக்கும் சுபீட்சத் துக்கும் இட்டுச் செல்வதற் கான பாதையை நாட்டின் தலைவர்களும், மக்களும் இணைந்து செயலாற்றி வருகின்றமையை வர வேற்கின்றோம்.
இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமர வீரவுடன் நான் ஆக்கபூர்வ மான பேச்சுகளில் ஈடுபட் டேன். அமெரிக்கா இரா ஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி குறிப்பிட்டது போன்று இலங்கையுடன் அமெ ரிக்கா இணைந்து நிற்பதற் குத் தேவையான வழிவகை களையும் ஆராய்ந்தோம்.
எமது கைகோர்ப்பை மேலும் மேம்படுத்துவதற் காக உறுதிமிக்க நடவடிக் கைகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராய்ந் தோம்.
இலங்கை–அமெரிக்கா இரு நாடுகளுக்கும் இடையே வரலாற்று ரீதியாகக் காணப் படும் பரிமாற்றங்களை வலுப்படுத்துவது, எமக் கிடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவது, ஒத்துழைப்புக்களை தீவிரப்படுத்துவது குறித்து இரு அரசு களுக் கும் இடையில் கூட்டுப் பேச்சை ஆரம்பிப்பது தொடர் பாக கடந்த மே மாதம் அமெரிக்க இராஜாங் கச் செயலாளர் ஜோன் கெரி இலங்கை வெளி விவகார அமைச்சர் மங் கள சமரவீரவிடம் அறிவித்திருந்தார்.



அதற்கமைய, இரு நாடு களுக்கும் இடையிலான முதலாவது கூட்டுப் பேச்சு எதிர்வரும் 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வாஷிங்டனில் ஆரம்பமாக வுள்ளது என்பதனை உத்தி யோகபூர்வமாக அறிவிக் கின்றேன் என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிலைய ஒழுங்கமைப்பை இறுக்கமாக நடைமுறையாக்க வேண்டும்

## கல்வி நிலைய நிர்வாகிகளுடனான கலந்துரையாடலில் அரச அதிபர், கல்வி அமைச்சின் செயலாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ்.மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்களினது ஒழுங்கமைப்புத் தொடர்பாக ஏற்கனவே எடுக்கப்பட்ட இணக்கப்பாட்டுடனான தீர்மானம் தொடர்பான நடைமுறைகள் கூடுதலான ஒருங்கிணைப்புடன் இறுக்கமாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். - இவ்வாறு யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளுடனான கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் ஆகியோர் அறிவுறுத்தினர்.

தனியார் கல்வி நிறுவனங்கள் சமூகப்பொறுப்புடன் செயற்பட வேண்டும். சாதாரண தரப்பரீட்சை முடிந்தவுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது மற்றும் உழைப்புக்காக மாத்திரம் நடத்துவது கல்விக்கு செய்யும்துரோகமாகக் கருதுகிறோம். -என்று வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் குறிப்பிட்டார்.

தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலை செயற்பாட்டை இடையூறு செய்யும் வகையில் வகுப்புக்களை நடத்தக் கூடாது. குறிப்பாக உயர்தர வகுப்புக்களுக்கு பரீட்சைக்கான தயார்படுத்தல் வகுப்புக்களை நடத்தும் போது மாணவர்களை தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரை கல்வி நிறுவனங்களுக்கு செல்லுகின்றனர் என்று ஆசிரியர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் பாடசாலைக் கல்விச் செயற்பாடு பெரும் பின்னடைவை எதிர்நோக்குகின்றது. - என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது-

அனைத்துப்பாடசாலைகளுக்கும் மாணவரது கட்டாய வரவு தொடர்பாக சுற்றறிக்கை அனுப்பியுள்ளோம். தனியார் கல்வி நிறுவனங்கள் பூரணமான ஒத்துழைப்பு வழங்காவிடின் நீதிமன்றங்கள் மூலமாக மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

தரம் 9 வரையான வகுப்புக்கள் வெள்ளிக்கிழமைகளில் மாலையும், ஞாயிற்றுக்கிழமைகளில் நண்பகல் 12மணி வரையும் நடத்தப்படக் கூடாது. மாணவர்கள் அறநெறி, சமயம் சார்ந்த கல்வி, ஓய்வு, உடல் உள சுகாதாரம் பேணும் வகையில் ஆன்மிக சிந்தனையுடன் வளர ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தனியார் நிறுவனங்களில் அடிப்படை வசதிகள், பாதுகாப்பு காணப்படுவதில்லை.150 பேர் ஒரு வகுப்பில் அனுமதிக்கின்றனர். 50 பேருக்கு மேல் வகுப்பில் மாணவர்களை வைத்திருக்க முடியாது. சுகாதாரம், குடிதண்ணீர் மற்றும் மலசல கூட வசதிகள் தொடர்பாக நிர்வாகிகள் கூடுதல் கவனம் செலுத்தி உறுதிப்படுத்த வேண்டும்.- என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அரச அதிபர் வேதநாயகன் தெரிவித்ததாவது -

மாணவர்கள் ஆன்மிக சிந்தனையுடனான சிறந்த பண்புடனான கல்வி அறிவைப்பெற்றுக்கொள்ள வேண்டும். மாணவர்களின் பாதுகாப்பு முக்கியமானது. கலாசார உடைகளை உறுதிப்படுத்த வேண்டும். மாலை 6 மணிக்கு முன்னர் வகுப்புக்கள் முடிக்கப்பட வேண்டும். அனைத்து கல்வி நிறுவனங்களும்பதிவுசெய்யப்படவேண்டும். சமூக மட்டத்தில் உள்ள அனைவரும் கூடுதலான சமூக சிந்தனையுடன் செயற்பட வேண்டும்.- என்றார்.

கலந்துரையாடல் குறித்துக் கருத்துத் தெரிவித்த தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள் தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் பணத்துக்காக இலாபத்துக்காக செயற்படுகின்றன என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. தீர்மானிக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கத்தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ் மாவட்ட பிரதேசசெயலர்கள், திணைக்களத்தலைவர்கள், மதத் தலைவர்கள், தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் கலந்து கொண்டனர். (ற-ரி6)

# விதை உருளைக்கிழங்கு கொள்வனவு செய்ய நிதி

அச்சுவேலி, டிசெ.17

வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த விவசாயிகள் 87 பேருக்கு விதை உருளைக் கிழங்கு கொள்வனவு செய்வதற்கு தொழில் முயற்சி நிவாரணமாக தலா 30 ஆயிரம் ரூபா வீதம் 26 லட்சத்து 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளன.

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளாகவுள்ள விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கைக் கொள்வனவு செய்து, நடுகை செய்வதற்கு வசதியாக இந்த தொழில் முயற்சிக்கான நிவாரண உதவி வழங்கப்படுகின்றது.

இந்த நிதியின் ஊடாக விவசாயிகள் 125 கிலோ கிராம் விதை உருளைக்கிழங்கைக் கொள்வனவு செய்ய வேண்டும். மேலதிகக் கொடுப்பனவை விவசாயிகள் வழங்க வேண்டும். இதனடிப்படையில் பயனாளிகளுக்கு கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் வைத்து விதை உருளைக் கிழங்கு வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-11)

# திறந்த பல்கலைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ,17

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தால் விசேட தேவைகள் சார் பட்ட மேல் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தின் 2015-2016 ஆம் கல்வி ஆண்டுக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் இளமாணிப் பட்டம் பெற்ற பட்டதாரியாக இருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் சேவையிலுள்ள ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய ஆலோசகராக, ஆசிரிய கல்வியாளராக இருத்தல் வேண்டும். இந்தக் கற்கை நெறிக்கான தமிழ் மொழி மூல வகுப்புக்கள் யாழ் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படவுள்ளது. மேலதிக விவரங்களை பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ற-ரி6)

வீடு விற்பனைக்கு
தொடர்பு: 021 492 1162, 077 711 0085
இல.14/1 புதியவீதி கொய்யாத்தோட்டம்.
சுண்டுக்குளியில் இருக்கும் நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட வீடு விற்பனைக்கு உண்டு
(66904) (14,15)

பெயர்மாற்றம்
உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டைச்சேர்ந்த
கோகுலதீபம் சின்னப்பிள்ளை
ஆகிய நான் எனது பெயரை
கோகுலதீபம் சற்குணதேவி
எனமாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.
கோ. சற்குணதேவி

# ஒளிமயமான நகரத் திட்டம்: 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## சாவகச்சேரி நகர சபை நடவடிக்கை

சாவகச்சேரி, டிசெ.17

சாவகச்சேரி நகரசபையின் 'ஒளிமயமான நகரம்' எனும் திட்டத் தின் கீழ் அனைத்து ஒழுங்கைகள் மற்றும் வீதிகளில் வீதி விளக்குப் பொருத்தப்படவுள்ளன. இதற்கென சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்துக்காகச் சபையின் எல்லைக்குட்பட்ட இதுவரை தெரு விளக்குப் பொருத்தப்படாத, அனைத்து வீதிகள், ஒழுங்கைகள் ஆகியவற்றின் விவரங்கள் திரட்டப்பட்டு தேவையான தெரு விளக்குகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன என சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்துள்ளார்.

தற்போது சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் 600க்கும் மேற்பட்ட வீதி விளக்குகளுடன், அனைத்துப் பகுதிகளிலும் வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-16)

# காட்டுக்குள் விறகு சேகரித்தவருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ.17

வன பாதுகாப்பு திணைக்களத்துக்குரிய காட்டுக்குள் அத்துமீறி நுழைந்து விறகுகள் சேகரித்தவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் பருத்தித்துறை நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

மணல் காட்டுப் பகுதியில் உள்ள வனப் பாதுகாப்பு திணைக்களத்துக்குரிய காட்டுக்குள் விறகுகள் பொறுக்கினார் என்ற குற்றச்சாட்டில் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைதான நபருக்கு எதிராக பருத்தித்துறைப் பொலிஸாரால் குற்றப்பத்திரம் மன்றில் வாசிக்கப்பட்டது. இதன் போது 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த பதில் நீதிவான், அபராதத் தொகையைக் கட்டத் தவறின் 3 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு தீர்ப்பளித்தார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவரின் பொருளாதார நிலைமையைக் கவனத்தில் கொண்ட நீதிமன்ற சமுதாய சீர்திருத்த அதிகாரி பொறுப்பேற்றுக் கொண்டதற்கு இணங்க வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது அவரை 3 மாத காலங்கள் சமூதாய சீர்திருத்தக் கட்டளைக்கு உட்படுத்துமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ற-ஜ-107)

# கஞ்சா விற்றவருக்கு 6 மாதங்கள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம்,டிசெ.17

சுன்னாகம், தாவடிப் பகுதியில் ஓட்டோ ஒன்றில் கஞ்சா வைத்திருந்து விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு 6 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை மல்லாகம் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

கஞ்சா வியாபாரம் முடிந்து ஒருவர் ஓட்டோவில் செல்வதாக சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, ஓட்டோவை மறித்துச் சோதனையிட்ட போது, 2 கிராம் கஞ்சாவைப் பொலிஸார் மீட்டனர். அதையடுத்து குறித்த நபரைக் கைது செய்ததுடன் ஓட்டோவையும் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றனர்.

சந்தேகநபரை கடந்த திங்கட் கிழமை நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டார். இதன் போது நீதிவான் 6 மாதங்கள் சிறைத் தண்டனைவிதித்துத் தீர்ப்பளித்தார். கைப்பற்றப்பட்ட ஓட்டோவை நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-107)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
ஷாளினி ஜெயபாலச்சந்திரன்
(LL.B), சட்டத்தரணி
11.12.2015 அன்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக உறுதிப் பிரமாணம் செய்த ஷாளினி ஜெயபாலச்சந்திரனை பாராட்டி வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்:
வை.சங்கர்ராஜ் குடும்பத்தினர்.
ந.துளசிதாசன் குடும்பத்தினர் (அளவெட்டி)
செ.செல்வராசா குடும்பத்தினர் (திருநெல்வேலி)
(66900) (13,15,17)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
யாழ்.மானிப்பாயைச் சேர்ந்த முன்னாள் பிரபல சட்டத்தரணியும், சமூகஜோதியுமான
உயர்திரு சிவா இராஜேந்திரன்
அவர்களின் பேர்த்தியும், ஓய்வுபெற்ற நீதிபதியும், பிரபல சட்டத் தரணியுமான
இரா - வசந்தசேனனின்
புதல்வியுமான
செல்வி சிவாணி வசந்தசேனன்
11.12.2015 இல் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு நாங்கள் அவரை வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்:
சித்தப்பா, சித்தி, தம்பி, மாமாமார், மாமிமார், மச்சான்மார், பெரியப்பா, பெரியம்மா.



# திருவெம்பாவைப் பூசை

யாழ்ப்பாணம், டிசெ. 17

புலோலி வடமேற்கு வில்லிபாதி முருகன் ஆலயத்தில் உதயத்தின் முன் திருவெம்பாவை பூசை இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். தினமும் காலை 6 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசை இடம்பெற்று திருவெம்பாவை பாடல்கள் ஓதப்படும். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாடு ட்ரக்குடன் மோதியதில் ஒருவர் சாவு

முல்லைத்தீவு, டிசெ. 17
மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் விபத்துக்குள்ளானதில் ஒருவர் சாவடைந்துள்ளார்.
நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் புதுக்குடியிருப்பில் இருந்து முல்லைத்தீவு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த போது முள்ளிவாய்க்காலுக்கும் வட்டுவாகலுக்கும் இடைப்பட்ட பகுதியில் மாட்டுடன் மோதிப் பின்னர் எதிரே வந்த ட்ரக்குடன் அடிபட்ட நிலையில் ஒருவர் சாவுடைந்துள்ளார்.
மாஞ்சோலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
திருகோணமலையைச் சேர்ந்தவரும் புதுக்குடியிருப்பில் வசித்தவருமான முன்று பிள்ளைகளின் தந்தையான ஈழப்பிரியன் என்பவரே சாவடைந்துள்ளார்.
(த-102)

## விபத்தில் படுகாயமுற்றவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

மன்னார்–தலைமன்னார் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் கடந்த திங்கள்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.
மன்னார்–தலைமன்னார் பிரதான வீதியில் மதுபானச்சாலைக்கு முன்பாக இடம் பெற்ற விபத்தில் படுகாயமடைந்த பேசாலை 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரான செபமாலை தோமஸ் குரூஸ் (வயது- 54) என்பவரே நேற்றுமுன்தினம் இரவு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
கடந்த வெள்ளிக்கிழமை காலை நேரம் வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் மோதியதால் இந்த விபத்து இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.
(த-56)

## கைதிகள்

அரசியல் கைதிகள் இருவரும் நேற்று மதியம் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.
கடந்த மாதம் 20 ஆம் திகதியிலிருந்து அரசியல் கைதிகளில் 20 பேர் முதற்கட்டமாக விடுவிக்கப்படுவர் என்று அமைச்சர்களால் கூறப்பட்டிருந்தது. ஆனால் அவர்களில் புலிகள் அமைப்புடன் தொடர்புடையதாகக் குற்றச்சாட்டப்பட்டிருந்த 6 பேரும், ஏனை யோர் வெளிநாடு செல்ல முற்பட்டுத் திரும்பிவந்தபோது கைது செய்யப்பட்டிருந்தவர்கள் என்று கூறப்பட்டது.
அரசியல் கைதிகளாக உள்ள ஏனையோர் தொடர்பில் எவ்வித கரிசனையும் இன்றி அரசு உள்ளது என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.
அவர்களில் யாழ்.மேல்நீதிமன்றில் உள்ள ஒருவருக்கு எதிரான வழக்கில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் 6 வருடங்களாக நீதிமன்றுக்குச் சமுகமளிக்காது இருந்து வருகின்றார். ஜெனிபன் என்ற அந்தக் கைதியும், கோமகன் என்ற கைதியும் சில நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.
அவர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சித்தார்த்தன், வியாழேந்திரன் ஆகியோர் நேற்றுச் சென்று பார்வையிட்டனர். இதன்போது குறித்த கைதிகளது நிலைமை தொடர்பில் அமைச்சர் சுவாமிநாதனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடினர். இதன்போதே சட்டமா அதிபர் திணைக்களத்தில் நாளை கைதிகள் விடயம் பற்றிய பேச்சு நடைபெறவுள்ளது என்றும், அதில் குறித்த விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
(த-4)

## வடக்கு மாகாண

உற்பத்தி நிறுவனத்திற்கும் சுன்னாகத்தில் உள்ள அதன் விநியோகத்தருக்கும் எதிராகவே இவ்வாறு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-
கைதடியில் உள்ள வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்தின் பாவனைக்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த குடிதண்ணீர்ப் போத்தல்களில் துர்நாற்றம் காணப்படுவதாகப் பேரவையினால் கடந்த ஒக்ரோபர் மாதம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் குறித்த போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரின் மாதிரிகள் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதன் பிரகாரம் கிடைத்த பரிசோதனை அறிக்கையில், குடிதண்ணீரில் மலத்தொற்று நீர் கலந் திருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.
இதனையடுத்து, வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தினால் கொள்வனவுசெய்யப்பட்டிருந்த 20 லீற்றர் கொள்ளளவுகொண்ட 50 குடிதண்ணீர்ப் போத் தல்களைக் கைப்பற்றிய பொதுச் சுகாதாரப் பிரிவினர், நேற்றுச் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஒப்படைத்துள்ளனர்.
அத்துடன் இது தொடர்பில் கிடைக்கப் பெற்ற பரிசோதனை அறிக்கையையும் சமர்ப்பித்த பொதுச்சுகாதாரப் பிரிவினர், குறித்த போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரை உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கும் அதனை யாழ்ப்பாணத்தில் விநியோகம் செய்யும் விநியோகஸ்தருக் கும் எதிராக வழக்குப் பதிவு செய்தனர்.
இதனையடுத்து குற்றம்சாட்டப்பட்ட தரப்பினருக்கு நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றினால் அழைப்பாணைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
(த-வ-9)


### 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் நவரத்தினசாமி
கணபதிப்பிள்ளை
தோற்றம்
22.04.1942
மறைவு
18.11.2015

கடந்த 18.11.2015 புதன்கிழமை இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவர் அமரர் நவரத்தினசாமி கணபதிப்பிள்ளை அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (18.12.2015) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பெரிய கடற்கரை,
தொண்டமானாறு. (62222) (13.15)
குடும்பத்தினர்.
077 914 1962

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



அமரர்
கந்தையா
கணேசலிங்கம்
(ஓய்வு பெற்ற பொதுமுகாமையாளர் - தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ சங்கம், பளை பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ சங்கம்)
தோற்றம்
28.01.1939
மறைவு
19.11.2015

கடந்த 19.11.2015 சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் (17.12.2015) இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 19.12.2015 சனிக்கிழமை சபிண்டீகரணக் கிரியைகள் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடைக்குறிச்சி, வரணி (c15801) (14,15)
குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
08 . 04 . 1939
மறைவு
28 . 12 . 2014

அமரர் கந்தையா நவரத்தினம்
(ஓய்வு பெற்ற அதிபரும் ஆசிரியரும்)
திதி:- 17.12.2015 பூர்வபக்க ஸப்தமி

அனைவரையும் அரவணைத்த எம் அன்புத் தந்தையே
கண்மூடித் திறக்கும் நேரத்தில் எங்களைத் தவிக்கவிட்டு
நிரந்தரமாய்ப் பிரிந்தீர்களே!
உங்களுக்கு நிகர் இனி எங்களுக்கு யார்
ஆண்டு ஒன்று ஆனாலும்
அணையாதே உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

"நவஜீவனம்"
கச்சாய் வடக்கு,கொடிகாமம். (67957) (12.15)
குடும்பத்தினர்.

### நினைவுகளில் ஆண்டு 19.......



அமரர்
வி.எஸ். குணசிங்கம்
திதி: 17.12.2015

நினைவுகளின் சேமிப்பில்
நீக்கமற நிறைந்து நிற்கும்
உங்களின் உயிர்ப்பான பதிவுகள்.....
எங்களோடு நீங்கள் வாழ்ந்த
வாழ்வு தந்த அனுபவங்கள்- இவை
தடுமாறாமல் நாம் தடம் பதிக்க
எம்மை உந்திச் செல்லும்.....
உங்கள் ஆத்மசாந்திக்காய்
பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
இல.3, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

தோற்றம்
05.02.1931
மறைவு
16.12.1996

### 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
24 . 05 . 1972
மறைவு
03 . 11 . 2015



அமரர் பூபாலசிங்கம் பரமேஸ்வரன்

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்கள்
கண்ணிமைக்கும் காலத்தில்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்.........

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். மேலும் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
[illegible] வீதி,
திருநெல்வேலி.
077 234 7682
077 174 4025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சியமளிக்கவே பயமாகவுள்ளது

## விஜிதரனின் மனைவி நேற்றுமுன்தினம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.17
இங்கு வந்து சாட்சியமளிப்பதற்குக் கூட எனக்குப் பயமாக உள்ளது. முன்பு ஒரு தடவை இவ்வாறு சாட்சியம் அளித்தமை தொடர்பிலும் இரு தடவை விசாரணைக்கு உட்படுத்தப் பட்டேன்.

இவ்வாறு விடுதலைப் புலிகளது அரசியல் துறை நடுவப் பணியகத்தின் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்த சி. விஜிதரனின் மனைவி ஆணைக் குழுவிடம் தெரிவித்தார்.

ஐந்தாவது நாளாகச் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் இடம் பெற்ற காணாமற்போனவர்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வன்னியில் இறுதிப் போரில் அகப்பட்டு உடல் முழுவதும் பலத்த காயம் அடைந்த காரணத்தால் மாத்தளனில் இருந்து கப்பலில் நான் அனுப் பப்பட்டேன்.

இருப்பினும் எனது தாய், தந்தை, சகோதரர்கள் வன்னியிலேயே இருந்தனர். எனது கணவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த காரணத்தினால் மதகுரு பிரான்சிஸ் ஜோசப் முன்னிலையில் இராணு வத்தினரிடம் சரணடைந்தார்.

அவ்வாறு சரணடைந்தபோது எனது உடன்பிறந்த சகோதரர்கள் நேரில் கண்டனர். ஆனால் இன்று வரை எனது கணவரைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை.

அதற்குப் பதிலாக பதிவு , விசாரணை என்ற பெயரிலும் ஆணைக் குழு சாட்சி என்ற பெயரிலும் அலைக் கழிக்கப்படுகின்றோம். இங்கு வந்து சாட்சியமளிப்பதற்குக் கூட எனக்குப் பயமாக உள்ளது.



> எனது கணவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த காரணத்தினால் மதகுரு பிரான்சிஸ் ஜோசப் முன்னிலையில் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்.

ஏனெனில் முன்பு ஒரு தடவை இவ்வாறு சாட்சியம் அளித்தமை தொடர்பிலும் இரு தடவை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டேன். இவ்வாறு ஆணைக் குழுவில் கூறும் சாட்சிக்கே புலனாய்வு விசாரணை என்றால் ஆணைக் குழுவால் என்ன பயன்?

எனது இரு பிள்ளைகளைப் பராமரிக்கவேண்டியபொறுப்புஎனக்கு உள்ளது. அதனால் சாட்சி கூறித் தேடுவது என்ற நிலையை விட மௌனம் காத்து எனது பிள்ளைகளின் எதிர் காலம் தொடர்பில் சிந்திப்பதே நல்லது என எண்ணத் தோன்றுகின்றது –என்றார்.(து–ஐ–101)

---

## தனியார் கல்வி நிலையத்துக்கு சென்ற தம்பி கடத்தப்பட்டார்

### மீட்டுத் தருமாறு சகோதரி கதறல்

யாழ்ப்பாணம்,டிசெ.17
யாழில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்றவேளையில்காணாமல் போன எனது சகோதரனை, கலட்டியில் உள்ள இராணுவ முகாமில் கண்டேன். இராணுவத்தினரிடம் இருந்து எனது சகோதரனை மீட்டுத் தாருங்கள்.- இவ்வாறு காணாமல் போன வரின் சகோதரிஒருவர்ஆணைக் குழுவின் முன்பாக கதறியழுதார்.

சங்கானை பிரதேச செயலர் பணிமனையில் நேற்றுமுன்தினம் 5ஆவது நாளாக இடம்பெற்ற காணமல் போனோரைக் கண்டறியும் ஆணைக் குழுவின் அமர்வில் சாட்சியம் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது-
2006 ஆம் ஆண்டு வீட்டில் இருந்து தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்றவேளையில் காணமால் போன எனது சகோதரனை2007ஆம்ஆண்டு யாழ்.பல்கலைக் கழகத்துக்கு அருகில் உள்ள கலட்டி இராணுவ முகாமில் நின்றபோது எனது கண்ணால் கண்டேன்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் தினமும் பலர் சுட்டுக் கொல்லப்பட்டு அவர்களின் உடல்கள் யாழ். போதனா வைத்தியசாலையின்சவச்சாலைக்குஎடுத்து வரப்படும் போது அங்கு எனது தம்பியைத் தேடிப் பார்ப்பேன்

ஆனால் எனது தம்பி காணாமல் போனதில் இருந்து புலனாய்வாளர்களின் தொல்லை தாங்க முடியவில்லை. அடிக்கடி வந்து விவரம் கேட்பார்கள். இறுதியாக இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதமும் வந்த இரு புலனாய்வாளர்கள் மீண்டும் விவரம் பெற்றுச் சென்றனர்.

எனது தம்பியை இன்னமும் ஒளித்து வைத்திருப்பதனாலேயே தொடர்ந்தும் விவரத்தைப் பெறுகின்றனர் என நம்புகின்றோம். எனது சகோதரனை இந்த ஆணைக்குழு மீட்டுத்தர வேண்டும்.-என்றார்.
(ற–ஐ–101)

---

## தகப்பனைத் தாக்கிப் பிள்ளையை வெள்ளை வானில் கடத்தினார்கள்

### ஆணைக்குழு அமர்வில் தாயொருவர் கண்ணீர்

யாழ்ப்பாணம்,டிசெ.17
பாஸ்போட் எடுக்க தகப்பனோடு போய் வரும் வழியில் வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியில் வைத்து தகப்பனை அடிச்சுப்போட்டு மகன் அப்பா என்னைக் காப்பாத்துங்கோ எண்டு கத்தக் கத்த வெள்ளை வானிலை வந்த ஈ.பி. டி.பி யினர் மகனைக் கடத்திக் கொண்டு போட்டாங்கள். இது வரைக்கும் எந்தத் தகவலும் இல்லை.- இவ்வாறு கண்ணீர் விட்டுக் கதறியழுதவாறு சாட்சியம ளித்தார் தாயொருவர்.

> ஆமிக் காம்பிலையும் முறையிட்டனாங்கள், மானிப்பாய் பொலிஸிலையும் முறையிட்டனாங்கள். ஒரு நடவடிக்கையும் இது வரைக்கும் எடுக்கேல்லை.

நேற்று முன்தினம் சங்கானை பிரதேச செய லர் பிரிவில் இடம் பெற்ற காணாமல் போனவர்களை விசாரணை செய்யும் ஆணைக் குழு முன்பான சாட்சியத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும்தெரிவித்ததாவது-
2007 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி, என்ர மகன் வெளிநாட்டுக்குப் போக பாஸ்போட் வந்திருக்கு என அதை எடுக்க தகப்பனையும் கூட்டிக் கொண்டு வட்டுக்கோட்டைக்கு போனவர்.

அங்கு போய் திரும்பி வரும் வழியில் மாவடியில் வைச்சு வெள்ளை வானிலைவந்த ஈ.பி.டி.பிக் காரர் என்ரை கணவர் இராசலிங்கத்தை அடிச்சுப் போட்டு, மகன்"அப்பா என்னை காப்பாத்துங்கோ" என்று கத்தக் கத்த வாயைத் துணியாலை கட்டி வானிலை ஏற்றிக் கடத்திக் கொண்டு போட்டாங்கள்.

பிறகு ஆமிக் காம்பிலையும் முறையிட்டனாங்கள், மானிப்பாய் பொலிஸிலையும் முறையிட்டனாங்கள். ஒரு நடவடிக்கையும் இது வரைக்கும் எடுக்கேல்லை.

இப்ப ஒன்பது வருசமாச்சுது.என்ரைமகன்வருவான் எண்ட நம்பிக்கையோடை இன்னமும் உயிரோடை இருக்கிறன். தயவு செய்து அவனைக் கண்டுபிடிச்சுத் தாங்கோ. எங்களுக்கு உங்கட பிச்சைக் காசும் வேண்டாம். உதவியும் வேண்டாம். என்ரை மகன் எனக்கு வேணும்.– என்று அந்தத் தாய் கதறி அழுதார். (ற–ஐ–ரி2)

---

## கணவரையும், பிள்ளையையும் வெள்ளை வானில் கடத்தினர்

### ஆணைக்குழுவிடம் பெண் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.17
இராணுவம்சுற்றிவளைத்து நிற்க வெள்ளை வானில் வந்தவர்கள் எனது பிள்ளையையும் , கணவரையும் கடத்திச் சென்றனர். – இவ்வாறு பெண்ணொருவர் ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் சாட்சியமளித்தார்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வுகள் கடந்ததிங்கட்கிழமை பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. இதில்கலந்துகொண்டு சாட்சியமளிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது–
எனது மகன் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணிபுரிந்தவர். மகன் வேலைக்கு எனது கணவருடன் சென்றார். அப்போது ஆமி ஊரைச் சுற்றி வளைத்து எங்களது வீட்டுக்கு பக்கத்துக் காணியெல்லாம் படுத்திருந்தார்கள்.

அப்பாவும், பிள்ளையுமாக இரண்டு பேரும் மோட்டார் சைக்கிளில் போனார்கள். எங்களது வீட்டில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் ஒரு சந்தியில், அவர்கள் திரும்பும் போது வெள்ளை வானில் வந்தவர்கள் அவர்களை இழுத்து ஏற்றிக்கொண்டு போனார்கள்.

அவர்கள் போன மோட்டார் சைக்கிளை ஒரு ஆமிக் காரன் ஓடிக்கொண்டு போக பலர் கண்டவை. அவர்கள் வந்து சொல்லித்தான் எங்களுக்குத் தெரியும். அவர்கள் கடத்தப்பட்டார்கள் என்பது தெரிந்ததால் நாங்கள் தேடவில்லை. – என்று தெரிவித்தார்.
(ற–ஐ–109)

---

## ராணுவத்திடம் ஒப்படைத்த கணவர் எவ்வாறு காணாமல்போக முடியும்?

### ஆணைக்குழுவுக்கு வழங்கிய சாட்சியில் மாதவன் மாஸ்டரின் மனைவி கேள்வி

கரணவாய், டிசெ.17
நானும் எனது பிள்ளைகளும் இணைந்து இராணுவத்திடம்ஒப்படைத்த எனது கணவர் எவ்வாறு காணாமல் போக முடியும்?. இவ்வாறு ஆணைக் குழு விடம் சாட்சியமளித்த போது கேள்வி எழுப்பினார் தமிழீழக் காவல் துறையில் பணியாற்றியமாதவன்மாஸ்டரின் மனைவி.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில்கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற காணாமல் போனோர் தொடர் பிலான ஆணைக் குழுவின் விசாரணைகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது –
[illegible] ழக் காவல்துறையில் நீண்டகாலமாகப் பணிபுரிந்தவர். இறுதிக்கட்டப் போரின் போது, அதனை விட்டுஎங்களுடன் இணைந்து வாழ்ந்தவர். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வட்டுவாகல் பகுதியில்விடுதலைப்புலிகளின் தளபதிகள் சரணடைந்த போதுநானும்எனதுபிள்ளைகளும்எனதுகணவரை இராணுவத்திடம்ஒப்படைத்தோம். எங்களது கண்முன்னே கொண்டு சென்ற கணவர் எப்படிக் காணாமல் போக முடியும். எனது கணவரைத் தேடாத தடுப்பு முகாமில்லை. பல இடங்களில் முறைப்பாடு செய்தோம். ஒருபிரயோசனமும் இல்லை.

எனதுகணவர்இன்றும்உயிரோடு தான் இருக்கிறார். அந்த நம்பிக்கை எனக் [illegible] நான் [illegible] தர வேண்டும்– என்று அவர் சாட்சியமளித்தார். (ற–ஐ–108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கட்டாக்காலி கால்நடைகளால் போக்குவரத்துக்கு இடையூறு

யாழ்ப்பாணம், டிசெ.17

வவுனியா மற்றும் மன்னாரின் பிரதான வீதிகளில் கட்டாக்காலி கால்நடைகள் அலைந்து திரிவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியாவிலிருந்து சிதம்பரபுரம் செல்லும் வீதி, வவுனியாவிலிருந்து கல்மடு செல்லும் வீதி, வவுனியாவிலிருந்து மன்னார் செல்லும் பிரதான வீதிகளில் கட்டாக்காலி கால் நடைகளால் பொது மக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் பெரும் சிரமத்துக்கு உள்ளாவதுடன், விபத்துக்கும் உள்ளாகும் நிலையும் ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவிலிருந்து பிற பிரதேசங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகளில் கால் நடைகள் வீதியில் படுத்திருப்பதால் குறிப்பாக மாடுகளால் வீதியால் செல்பவர்கள் விபத்துக்களில் சிக்கும் சம்பவங்களும் அடிக்கடி நிகழ்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கடந்த வாரத்தில் 11 பேருக்கு டெங்கு

வவுனியா, டிசெ.17

வவுனியாவில் கடந்த வாரத்தில் மட்டும் 11 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று வவுனியா சுகாதாரத் திணைக்கள மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு மொத்தமாக 74 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வாரமே அதிகளவு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த அவர், டெங்குத் தொற்று அதிகமாக உள்ள பகுதிகள் இனங்காணப்பட்டு அவை வலயங்களாகப் பிரிக்கப்பட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

> “மழை நீர் தேங்கி நிற்கும் பகுதிகளை இனங்கண்டு அவற்றை அகற்றுவதன் மூலம் டெங்கு நுளம்பு உற்பத்தியாவதைத் தடுக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.”

பொது சுகாதார பரிசோதகர்களுடன் பொலிஸார், நகர சபை ஊழியர்கள் ஆகியோர் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என்றும், பொதுமக்கள் அதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மழை நீர் தேங்கி நிற்கும் பகுதிகளை இனங்கண்டு அவற்றை அகற்றுவதன் மூலம் டெங்கு நுளம்பு உற்பத்தியாவதைத் தடுக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

காலை மற்றும் மாலை நேரங்களிலேயே டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்றும் அந்த வேளை களில் பொது மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ற)

## ஓட்டோச் சாரதி மீது கத்திக் குத்து
### வவுனியாவில் சம்பவம்

ஓட்டோச் சாரதி ஒருவர் மீது இனந்தெரியாதவர்கள் கத்திக் குத்து நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது. வவுனியா இலுப்பையடி ஓட்டோ தரிப்பிட சாரதியான தூயகுமார் சிதர்சன் (வயது-25) என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா இலுப்பையடி ஓட்டோ தரிப்பிடத்திலிருந்து ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு ஒட்டுசுட்டானிலிருக்கும் தமது தாய்க்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளது என்று கூறி இருவர் சென்றுள்ளனர்.

ஒட்டுசுட்டான் சந்தியிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் வீட்டுக்குச் சென்றுவிட்டு இருவரும் உடனடியாக வந்து அம்மா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுவிட்டார் என்று கூறி முல்லைத்தீவு வைத்தியசாலைக்குச் செல்லுமாறு கூறியுள்ளனர்.

ஓட்டோவை மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் நிறுத்த வைப்பித்து தொலைபேசியில் உரையாடுவது போல் பாசாங்கு செய்துவிட்டு சாரதியின் பின் பக்கத் தலையில் காட்டுக் கத்தி கொண்டு தாக்கியுள்ளனர்.

அத்துடன் சாரதியை ஓட்டோவைத் தொடர்ந்து செலுத்துமாறு அச்சுறுத்தியுள்ளனர். சிறிது தூரம் சென்றதும் ஓட்டோவை நிறுத்துமாறு கூறி மறுபடியும் சாரதி மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்த சாரதி மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணையை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)



முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்கள், பலசரக்குக் கடைகள் முசலி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஒஸ்மன் சாள்ஸ் தலைமையிலான குழுவினரால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை திடீர் சோதனைகளுக்குள்ளாக்கப்பட்டன. பொது சுகாதார பரிசோதகர்கள், உணவு மருந்து பரிசோதகர் ஆகியோர் இணைந்து சோதனைகளை மேற்கொண்டனர். இதன் போது வர்த்தகர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டன. மற்றும் சுகாதாரத்துக்கு கேடான முறையில் இயங்கிய வெதுப்பகம் ஒன்றும், உணவகம் ஒன்றும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. (ற-56)

## சிறுகதை தொகுப்பு வெளியீடு

வவுனியா, டிசெ.17

பசுந்திரா சசி எழுதிய 'பாவு தளிர் தூவு வானம்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை, செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வட மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக சாகித்தியரத்னா தெளிவத்தை யோசப்பும், சிறப்பு விருந்தினர்களாக செட்டிகுளம் மகா வித்தியாலய அதிபர் க.தர்மரட்ணம், ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் எல்.சீ. லம்பேட் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தமிழருவி சிவகுமாரன், கவிஞர் மேமன் கவி, ஊடகவியலாளர் கலாபூசணம் கே.பொன்னுத்துரை ஆகியாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-421)



## மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வு இன்று

கிளிநொச்சி, டிசெ.17

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர் முதியோர் மாற்றவலுவுள்ளோர் தின நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மா.ஜெயராஜாவும் கௌரவ விருந்தினராக மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் சிறுவர் முதியோர் மாற்றுவலுவுள்ளோர் ஆகியோர் கௌரவிப்பும் அவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# மீள்குடியேற்ற செயற்பாட்டுக் குழு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது

### அமைச்சர் பா.சத்தியலிங்கம் தெரிவிப்பு

வவுனியா, டிசெ.17

புதிய அரசால் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றம் தொடர்பான அனைத்துவிடயங்களிலும் மாகாணசபை பங்கெடுக்கும். இதற்காக ஆளுநர் மற்றும் வட மாகாணசபை முதலமைச்சர் தலைமையில் மாகாண மட்ட மீள்குடியேற்றச் செயற்பாட்டுக் குழு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. -இவ்வாறு வடமாகாண மீள் குடியேற்றம் மற்றும் சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தெரிவித்தார்.



மீள்குடியேற்றம் தொடர்பிலான கலந்துரையாடலொன்று வவுனியா மாவட்ட செயலகத்தில் அண்மையில் மாவட்ட அரச அதிபர் எம்.பி. றோகண புஸ்ப குமார தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து [illegible] கருத்துத் தெரிவிக்கும் [illegible] அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

[illegible] களில் மாகாண சபையின் பங்களிப்பு இல்லாமலே மீள்குடியேற்றங்கள் நடைபெற்றன. எனினும் இனிவரும் காலங்களில் மாகாண சபையின் பங்களிப்புடன் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும். இதற்காக ஒரு குழு வும் அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் வவுனியாவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் மற்றும் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டிய குடும்பங்கள் தொடர்பாகவும், வன இலகா, காணிகளை வனவளத்துக்குச் சொந்தமானது என அளவீடு செய்வது தொடர்பாகவும், வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட வேண்டிய குடும்பங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுக் கடற்பரப்பில் மொத்த மீன் உற்பத்தி வீழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ்.குடாநாட்டில் கடந்த 32 வருடங்களுக்கு முன்னர் 48 ஆயிரத்து 677 மெற்றிக் தொன்னாக இருந்த மொத்த மீன் உற்பத்தி, தற்போது 31 ஆயிரத்து 767 மெற்றிக் தொன் உற்பத்தியாக வீழ்ச்சியடைந்துள்ளது என்று மாவட்ட புள்ளிவிவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இலங்கையில் போர் வலுப்பெற்றிருந்த காலமான 1983 ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டில், அப்போது இருந்த வளங்களை உபயோகித்து 48 ஆயிரத்து 677 மெற்றிக் தொன் மீன் உற்பத்தி பெறப்பட்டது.

எனினும் 2014 ஆம் ஆண்டில் 31 ஆயிரத்து 767 மெற்றிக் தொன் மீன் உற்பத்தியே கிடைக்கப் பெற்றுள்ளது.

இதே உற்பத்தியே அடுத்தடுத்த ஆண்டுகளிலும் கிடைத்த வண்ணம் உள்ளது என்று யாழ். மாவட்டத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான திட்டமிடல் கையேட்டின் புள்ளிவிவரம் சுட்டிக் காட்டியுள்ளது.

> ❝ குடாநாட்டின் மீன் உற்பத்தியில் பெரும் பங்காற்றிய மயிலிட்டிக் கிராமம் மற்றும் மயிலிட்டித்துறை முகம் என்பவை இன்று வரை படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது ❞

இதேவேளை யாழ். குடாநாட்டில் மட்டும் 21 ஆயிரத்து 117 மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 119 மீனவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையில் குடாநாட்டில் தற்போது 14 மீன்பிடிப் பரிசோதகர் பிரிவுகள் இயங்கும் அதேவேளையில், 110 மீனவக் கிராமங்கள் உள்ளன. இங்கு 93 மீன்பிடிக் கிராமிய அமைப்புக்களும், 117 மீனவர் சங்கங்களும் இயங்குகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் மீனவர்களிடம் 8 ஆயிரத்து 10 படகுகள் உள்ளன. படகுகள் மூலம் தொழில் செய்வதற்கு 6 துறைமுகங்கள் உள்ளன.

அதேவேளை குடாநாட்டில் 7 ஐஸ் உற்பத்தி நிலையங்களும், 3 மீன் பதப்படுத்தும் நிலையங்களும் செயற்படுகின்றபோதிலும், குடா நாட்டின் கடந்த 1983 ஆம் ஆண்டின் உற்பத்தியை நெருக்க முடியாத நிலைமை உள்ளது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை குடாநாட்டின் மீன் உற்பத்தியில் பெரும் பங்காற்றிய மயிலிட்டிக் கிராமம் மற்றும் மயிலிட்டித் துறைமுகம் என்பவை இன்றுவரை படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. (ற-ஐ-101)

## நுளம்புக் குடம்பிகளை அழிக்க கிணறுகளுக்குள் மீன் குஞ்சுகள்

### குருநகர் பிரதேசத்தில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.17

குருநகர் பிரதேசத்தில் உள்ள குடியிருப்பாளர்களின் வீட்டுக் கிணறுகளுக்குள் உள்ள நுளம்புக் குடம்பிகளை அழிக்கும் நோக்குடன் மீன் குஞ்சுகள் விடப்படுகின்றன.

ஜே/69 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட குடியிருப்பாளர்களின் வீட்டுக் கிணறுகள், பொதுக் கிணறுகள் மற்றும் நீர் ஏரிகள், வடிகால்வாய்கள் போன்றவற்றுக்கே இவ்வாறு நுளம்புக் குடம்பிகளை உண்ணும் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

அதனைவிட இந்தப் பிரதேசத்தில் குடியிருப்பு மற்றும் சுற்றாடல் பகுதிகளில் சுகாதாரப் பகுதியினரின் கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

டெங்கின் தாக்கம் அதிகரித்துக் காணப்படும் இந்தப் பகுதியில் சுகாதாரப் பகுதியினரின் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

அதேசமயம் இந்தப் பகுதி வடிகால்வாய்கள் மற்றும் கழிவுநீர் ஓடும் கால்வாய்களுக்கு அபோன் என்ற கிருமிநாசினியும் விசிறப் படுகின்றது. (ற-ஐ-17)

## நத்தார் தினத்துக்கு முன்னர் தண்ணீர் விநியோகம் சீராகும்

### மாநகர ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்.மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட பகுதியில் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் எதிர் வரும் நத்தார் தினத்துக்கு முன்னர் சீராக்கப்படும் என மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

தற்போது மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட பகுதி மக்களுக்கு தினமும் காலையில், அரைமணிநேரம் நிலத்தடிக் குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பிரதான குடிதண்ணீர் விநியோக மார்க்க நீர் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்ததால் குடிதண்ணீரை சீராக விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து புதிய வலுக் கூடிய இயந்திரம் ஒன்று இந்த வாரத்தில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவுள்ளது.

இந்தப் புதிய இயந்திரம் வந்து சேர்ந்ததும் மாநகரப் பகுதி மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் பெரும்பாலும் நத்தார் தினத்துக்கு முன்னர் சீரடைந்து விடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-17)

## பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், டிசெ.17

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும், பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 2015 ஆம் ஆண்டுக்கான கலைஞானச் சுடர் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

பி.நடராஜா, திருமதி புஸ்பவதி மேரி யோசப் அந்தோனி, கா.சச்சிதானந்தன், திருமதி.கோமதிதேவி செல்வநாதன், வை.நித்தியானந்தசர்மா, ச.புஸ்பராஜா, திருமதி கனகரத்தினம் பேரின்பநாயகி, சி.மலர், இ.முருகானந்தம் ஆகியோர் இந்த விருதைப் பெறவுள்ளனர் என்று நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் தலைவர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (ற-ஐ-ரி6)



அனலைதீவு மக்களின் நலன்கருதி வடமாகாண சுகாதார அமைச்சால் 50 லட்சம் ரூபா பெறுமதியான அம்புலன்ஸ் படகு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அது விரைவில் பயன்பாட்டுக்கு விடப்படும் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன் தெரிவித்தார். குறித்த படகு நேற்றுமுன்தினம் எடுத்துவரப்பட்டு குறிகாட்டுவான் இறங்குதுறையில் இறக்கப்பட்டுள்ளது. அது மிகவிரைவில் பயன்பாட்டுக்கு விடப்படும். நெடுந்தீவுப் பிரதேச மக்களின் நலன்கருதி கடந்த மாதம் மற்றொரு அம்புலன்ஸ் படகு வழங்கப்பட்டு அது பயன்பாட்டிலுள்ளது. நயினாதீவுக்கு ஏற்கனவே ஒரு படகு உள்ளது. இந்நிலையில் அனலைதீவுக்கு புதிய அம்புலன்ஸ் படகு- வழங்கப்பட்டுள்ளது. எழுவைதீவுக்கும் ஏதாவதொரு படகு பயன்படுத்தப்படும்.- என்றும் அவர் தெரிவித்தார். (ற-4,9)

## விபத்தில் ஒருவர் காயம்

அளவெட்டி, டிசெ. 17

வீதியால் சைக்கிள்களில் சமாந்தரமாகப் பயணித்த இருவரில் ஒருவர், கையிலிருந்த உணவுப் பொதியை மற்றவருக்கு கொடுக்க முற்பட்டபோது சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று செருகுண்டு விபத்துக்குள்ளாகின.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டுவன் மேற்குப்பகுதி வீதியில் இடம்பெற்றது. இதில் ஒருவர் படுகாயமடைந்தது தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-ஐ-36)

## ஆடு வெட்டிய நபருக்கு ரூ.2,000 அபராதம்

யாழ்ப்பாணம், டிசெ.17

அளவெட்டி தும்பளைப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கடா ஆடு ஒன்றை வெட்டிய நபருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஆட்டை இறைச்சியாக்குவதற்குரிய அனுமதி பெறாமை, பொதுச் சுகாதார பரிசோதகருக்கு தெரியப்படுத்தாமை போன்ற குற்றச்சாட்டுகள் சந்தேக நபருக்கு எதிராக முன் வைக்கப்பட்டிருந்தன.

சந்தேக நபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அபராதம் விதிக்கப்பட்டது. (ற-ஐ-107)

## டெங்கைக் கட்டுப்படுத்த கிராம ரீதியாக குழுக்கள்

### தென்மராட்சியில் நடவடிக்கை

சாவகச்சேரி, டிசெ.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த கிராம அலுவலர் பிரிவு ரீதியாக குழுக்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராம மட்ட டெங்குக் கட்டுப்பாட்டு மற்றும் போசணைச் சுகாதாரக் குழு எனும் பெயரில் குழுக்களை ஆரம்பித்துக் கிராம மட்ட மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் டெங்குக் தாக்கத்தையும் கட்டுப்படுத்த முடியும் என்று சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. அதையடுத்து கிராமியக்குழுக்கள் அமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

குழுவின் தலைவராக பிரிவுக்கிராம அலுவலரும், செயலாளராகப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் செயற்படவுள்ளனர். இவர்களுக்கு உதவியாக பிரிவு வாழ்வின் எழுச்சி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் மற்றும் பிரிவு பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் செயற்படுவர் .

இவர்கள் டெங்குக் கட்டுப்பாட்டுடன் பிரிவு மக்களின் பிரதேசத் தொடர்பான செயற்பாட்டினையும் மேற்கொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

## டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டில் தண்டம் செலுத்துவோர் அதிகரிப்பு

### நுளம்பு பரவும் சூழலை வைத்திருந்தமைக்காக

சாவகச்சேரி, டிசெ.17

குடியிருப்புக்கள் மற்றும் காணிகளை டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நிலையில் வைத்திருந்தமைக்காக சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் செலுத்தியோரின் எண்ணிக்கை நூறை நெருங்குகிறது.

சுகாதார அமைச்சு மற்றும் வடமாகாண சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றால் விடுக்கப்பட்ட விசேட டெங்கு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகளின் போது, டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய ஏது நிலையில் குடியிருப்புகள் மற்றும் காணிகளை வைத்திருந்தவர்களுக்கு எதிராக சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றால் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்பட்ட விசேட டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடுகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் குடியிருப்புகள் மற்றும் காணிகளை வைத்திருந்த மூவருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

இந்த வருடத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நிலையில் குடியிருப்புகள் மற்றும் காணிகளை வைத்திருந்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்தியவர்களின் எண்ணிக்கை நூறை எட்டியுள்ளது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மத வாதத்தைத் தூண்டுவதை குற்றமாக்கும் சட்டத்தைக் கைவிடுக

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ.17

இனவாதம், மதவாதம் போன்றவற்றைத் தூண்டும் வகையில், குரோதமாகப் பேசுவதைக் குற்றமாகப் பிரகடனம் செய்யும் சட்டத் திருத்தத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

குரோதப் பேச்சுகளுக்குத் தண்டனை விதிக்கும் வகையில், குற்றவியல் திருத்தச் சட்டமொன்றை அரசு நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது.

இந்தச் சட்டம் அரசமைப்புக்கு எதிரானது என்றும், அரசமைப்பின் 14ஆம் சரத்தில், கூறப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரம் இந்தப் புதிய சட்டத்தின் மூலம் முடக்கப்படுவதாகவும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளதாவது:-

1887ஆம் ஆண்டு குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களைச் செய்யும் வகையில், இந்தப் புதிய திருத்தச் சட்ட யோசனையை நாடாளுமன்றத்தில் அரசு சமர்ப்பித்துள்ளது.

ஆனால், புதிய திருத்தச் சட்ட யோசனை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவுக்கு அமைவான வகையிலேயே காணப்படுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவைப் பயன்படுத்தி , கடந்த காலங்களில் தமிழ், முஸ்லிம் மக்களை கடந்த கால அரசுகள் ஒடுக்கு முறைக்கு உட்படுத்தி வந்தன.

> கருத்து, பேச்சு மற்றும் ஊடக சுதந்திரத்தை ஒடுக்கும் வகையில் அரசும் குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழேயே, ஊடகவியலாளர் ஜே.எஸ். திசநாயகத்துக்கு 20 ஆண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நடவடிக்கைகள் கடந்த காலங்களில் சர்வதேச அளவில் கண்டனங்களை ஏற்படுத்தியிருந்தன-. இந்த நிலையில், இதனையொத் ததாக, குற்றவியல் சட்டத்தின் ஓர் பிரிவாகக் குரோதப் பேச்சு குறித்த சட்டம் அறிமுகம் செய் யப்படு வதை எமது கட்சி வன்மையாகஎதிர்க்கின்றது.

நாட்டின் அனைத்துக் குடிமக்களினதும் கருத்து, பேச்சு மற்றும் ஊடக சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமானது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கம் செய்து, சர் வதேச தரத்திலான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்று அறிமுகம் செய்யப்பட வேண்டுமென, இலங்கையும் இணை அனுசரணை வழங்கிய ஐ.நா மனித உரிமைகள் சபைத்தீர்மானத்தில் பரிந் துரை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் கருத்து, பேச்சு மற்றும் ஊடக சுதந்திரத்தை ஒடுக்கும் வகையில் அரசும் குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல-என்று கூறியுள்ளது. (த-வ)

# இடம்மாறிச் சிகிச்சை; விசாரிப்பதற்குக் குழு

கொழும்பு, டிசெ. 17

பெண் ஒருவரின் ஒரு மார்பகத்தில் உள்ள கட்டியை அகற்றுவதற்கு மாறாக மற்றைய மார்பகத்தில் மருத்துவர் சிகிச்சை செய்த குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரிக்க குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தவறான – இடம்மாறி அறுவை சிகிச்சை மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் மேற்கொண்ட விசாரணை அறிக்கையை ஆய்வு செய்ய மூன்று பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மி சோமசுந்தர, மருத்துவ இயக்குநர் பிரியந்த அத்தபத்து மற்றும் விசாரணைப் பிரிவின் பிரதிச் செயலாளர் ஆகியோர் இந்த மூன்று பேர் கொண்ட குழுவில் உள்ளடங்குகின்றனர்.

களுத்துறை–நாகொடை மருத்துவமனையின் இயக்குநர் இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடுத்த அறிக்கையை ஆய்வு செய்து தனக்கு ஒருவாரத்தினுள் பதிலளிக்குமாறு சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம், கலாநிதி மஹிபால ஹேரத் குறித்த குழுவுக்கு அறிவுறுத்தி உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# இறுதித் திருத்தம் குறித்து அறிவிப்பார் நிதியமைச்சர்

கொழும்பு, டிசெ.17

2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட யோசனைகள் குறித்த திருத்தங்களை எதிர் வரும் சனிக்கிழமை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றில் அறிவிப்பார்.

இதனை அவைத் தலைவர் லக்ஸ்மன் கிரியல்ல நேற்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

கடந்த நவம்பர் மாதம் 20ஆம் திகதி நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, வரவு–செலவுத்திட்டத்தை சமர்ப்பித்திருந்தார். வரவு–செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சில திருத்தங்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். ரோம் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடுதிரும்பியதும் மேலும் சில திருத்தங்களை அறிவிக்க உள்ளார்.

இதனையடுத்து வரவு–செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் சனிக் கிழமை மாலை நாடாளுமன்றில் நடைபெறவுள்ளது. இந்த வாக்கெடுப்பு இடம்பெறுவதற்கு முன்பாக, இறுதி வரவு செலவுத்திட்ட யோசனையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் நிதி அமைச்சர் அறிவிப்பார் –என்றார். (த-வ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபரினாலேயே கைதிகள் விடுதலை தாமதம்

## அமைச்சர் சுவாமிநாதன் கூறுகிறார்

கொழும்பு, டிசெ 17

அரசியல் கைதிகள் விடுதலை சட்டமா அதிபர் திணைக்களத்தினாலேயே தாமதப்படுத்தப்படுவதாகத் தெரியவருகிறது என மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, சிறைச்சாலை, மறு சீரமைப்பு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் டீ.எம்.சுவாமிநாதன் சபையில் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற காணி அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற் கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

39 அரசியல் கைதிகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். ஏனையோரின் விடுதலை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இந்த விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தினாலேயே தாமதம் ஏற்படுத்தப்படுவதாகச் செய்திகள் வெளியாகின்றன.

இந்தத் தாமதம் ஏன் ஏற்படுகிறது என்பதையும், துரிதப்படுத்த முடியாமைக்கான காரணத் தையும் சட்டமா அதிபர் திணைக்களம் எமக்குக் கூறவேண்டும். ஏனெனில், எம்.பிக்கள் என்னிடம் இது தொடர்பாக கேள்வி எழுப்புகின்றனர். அவர்களுக்கு நான் பதிலளிக்கவேண்டும்–என்றார். (த–சி)



இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆலோசகர் தோமஸ் ஷோன் நேற்று முன் தினம் காலை விமானத்தில் திருகோணமலைக்குச் சென்றார். அவருடன் எதிர்க் கட்சித்தலைவர் இரா.சம்பந்தனும் பயணமானார். திருகோணமலையில் தொழில்வாய்ப்புக்களையும் உற்பத்திகளையும் ஊக்குவிக்கும் வகையில் ஐஸ் தொழிற்சாலையொன்றை தோமஸ் ஷோன் திறந்துவைத்தார். (த)

# அரச உத்தியோகத்தரான பெண் கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வு

கண்டி, டிசெ. 17

கண்டி மாவட்டத்தின் பிரதேச செயலகம் ஒன்றில் நிர்வாக உதவியாளராகப் பணிபுரியும் 35 வயதுப் பெண்ணொருவர் கடத்திச்செல்லப்பட்டு இனந் தெரியாத கும்பலால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள் ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் பலவந்தமாக அழைத்துச்சென்று கொடூரமான முறையில் அவரைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த பெண் தனது தோழி வரும் வரை கடந்த 12 ஆம் திகதி கண்டி தென்னகுபுர பாலத் துக்கு அருகே நின்றவேளை, அங்கு ஓட்டோவில் வந்த 4 பேர் கொண்ட குழு அவரைக் கடத்திச் சென்றிருந்தது.

பாதிக்கப்பட்ட பெண் சம்பவம் தொடர்பாக அவரது வீட்டில் தெரிவித்ததை அடுத்து குறித்த பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அந்தப் பெண்ணிடம் இருந்த ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய தங்க நகைகளையும் சந்தேக நபர்கள் கொள்ளையடித் துச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த–4)

# 1,040 சிறுவர்கள், 370 பெண்கள் 5 ஆண்டுகளில் துஷ்பிரயோகம்

கொழும்பு, டிசெ 17

2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை நெருங்கிய உறவினர் களால் 1,040 சிறுவர்களும்,370பெண்களும்துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுனர் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, தேசிய மகளிர் குழு ஆகியவற்றுக்கும் பொலிஸுக் கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நெருங்கிய உறவினர்களால் துஷ்பிர யோகத்துக்கு உள்ளாக்கப்படும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் தேசிய மகளிர் குழுவிடம் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளைவிட பொலிஸுக்கு மிகக் குறைந்தளவான முறைப்பாடுகளே செய்யப்பட்டுள்ளன என அமைச்சின் தகவலில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க எழுப்பிய கேள்விக்கு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு சபையில் சமர்ப்பித்திருந்த பதிலிலேயே மேற் கண்ட விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு:

2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை நெருங்கிய உறவினர்களால் 1,040 சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 916 முறைப்பாடுகளும், பொலிஸாருக்கு 124 முறைப்பாடுகளும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

இதற்கமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 2010இல் 127, 2011இல் 165, 2012 இல் 17, 2013இல் 340, 2014இல் 267 முறைப் பாடுகள் என மொத்தமாக 916 முறைப்பாடுகளும், பொலிஸாருக்கு 2010இல் 17, 2011இல் 11, 2012இல் 18, 2013இல் 46, 2014இல் 32 என மொத்தமாக 124 முறைப் பாடுகளும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

இதேவேளை, 2010முதல் 2014வரை நெருங்கிய உறவினர்களால் 370 பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என தேசிய மகளிர் குழுவுக்கும், பொலிஸுக்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் தேசிய மகளிர் குழுவுக்கு 345 முறைப் பாடுகளும், பொலிஸுக்கு 25 முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தேசிய மகளிர் குழுவுக்கு 2010 இல் 38, 2011இல் 78, 2012 இல் 93, 2013இல் 41, 2014இல் 95 என345முறைப்பாடுகளும்,பொலிஸுக்கு 2011இல் 04, 2012இல் 04, 2013 இல் 06, 2014இல் 11என 25 முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என மகளிர் மற்றும் சிறுவர்அலுவல்கள் அமைச்சு தெரி வித்துள்ளது. (த–சி)

# ஜனவரி 9 சூழ்ச்சி குறித்து விசாரணைகள் நிறைவு

கொழும்பு, டிசெ 17

அலரி மாளிகை வளாகத்தில் 2015 ஜனவரி 9ஆம் திகதி அதிகாலை இடம் பெற்றதாகக் கூறப்படும் அரச விரோத சூழ்ச்சி தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துள்ள நிலையில், சட்டமா அதிபரின் ஆலோசனைக்காகக் காத்திருப்பதாகச் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐ.ம.சு.முவின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும எழுப்பிய கேள்விக்கே அமைச்சர் சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு பதிலளித்தார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி காலை அலரிமாளிகையில் அரச விரோத சூழ்ச்சியொன்று இடம்பெற்றதாகத் தற்போதைய அரசின் பொறுப்புவாய்ந்த அரசியல்வாதிகள் கூறியுள்ள நிலையில், அது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவு என்னவென்றும், சூழ்ச்சி இடம்பெற்றுள்ளமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளதா என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க பதிலளிக்கையில்,

அது தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துவிட்டன. தற்போது நாம் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காகக் காத்திருக்கின்றோம். எனவே, இந்தக் கேள்விக்கான முழுமையான பதிலை இன்னும் இரு வாரங்களில் தருவேன்–என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ், இந்தக் குற்றச்சாட்டு நாட்டுக்குப் பெரும் அவமானத்தைத் தரக் கூடியது. அதனால்தான் அது தொடர்பான விசாரணை முடிவை விரைவாக எதிர் பார்க்கின்றோம்–என்றார்.

இதனையடுத்து குறுக்கிட்ட சபாநாயகர் கரு ஜயசூரிய, அதுதான் அமைச்சர் இரு வாரங்களில் முழுமையான பதிலைத் தருவதாகக் கூறியுள்ளாரே எனக் கூறி அடுத்த கேள்விக்குச் சென்றார். (த–சி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லாட்சி மகுட வாக்கியம் கபடம் நிறை போக்கில்.....!

வடக்கு மாகாண சபைக்கு உள்ள அதிகாரங்களை, கிராம இராச்சியம் எனப் பெயரிடப்பட்ட திட்டத்தின் மூலம், மத்திய அரசுக்கு மாற்றுவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

இது தொடர்பில் அரசியல் ரீதியாக அணுகாமல் நிர்வாக முறைமையில் அணுகுவதற்கு வழிசமைக்கப்படுகிறது என்ற அம்சமும் அதில் அடங்குகிறது.

பெரும் விவகாரமாக மாறியுள்ள இந்தப் பிரச்சினை குறித்து வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், மாகாணசபை உறுப்பினர் ஒருவரும் வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஊன்றி நோக்கப்பட வேண்டியவையாகும்.

கிராமிய அபிவிருத்தி என்பது முழுமையாக - நேரடியாக - மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட விடயம். ஆனால் மத்திய அரசு அதனைத் தனது கையில் பிடுங்கிக் கொண்டு அபிவிருத்தியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கையாகவே இது அமையும்.

இங்கே உள்ளார்ந்த சூழ்ச்சி ஒன்று உள்ளதாக முதலமைச்சர் சுட்டிக் காட்டி இருப்பது ஊன்றிக் கவனிக்கத்தக்கது.

மாகாணத்துக்கு உள்ள அதிகாரங்களை மத்திய அரசுக்கு மையப்படுத்தும் இந்த நடவடிக்கை, மாகாண சபையின் முக்கியமான செயற்பாடுகளில் ஒன்றைத் தட்டிப் பறிக்கும் உள்ளார்ந்த நோக்கம் கொண்டதே என்று முதலமைச்சர் கண்டித்துள்ளார்.

இது தொடர்பில் மாகாணசபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் வெளிப்படுத்திய கருத்தும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

கடந்த (மகிந்த) அரசு முறைத்துக் கொண்டு அதிகாரங்களைத் தரமுடியாது என்று சொன்னது. ஆனால் தற்போதைய அரசோ, சிரித்துக்கொண்டு அதிகாரங்களைப் பிடுங்கி எடுத்துக் கொண்டிருக்கின்றது என்ற அவரது உவமானம் உச்சத்தைத் தொடுகிறது!

நல்லாட்சி என்ற மகுட வாக்கியத்தை கையில் ஏந்திப் பிடித்துக்கொண்டிருக்கும் மைத்திரி - ரணில் அரசு, ஜே.ஆர்., பிரேமதாசா, சந்திரிகா, மகிந்த அரசுகளை விஞ்சியவாறு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட அற்ப உரிமைகள் மற்றும் சொற்ப சில்லறைகளையும், தூக்கி வீசுவதற்கான கபடம் நிறைந்த போக்கில் செயற்பட முனைவதற்கு அத்திபாரம் போட்டு வருகிறது.

கிராமிய வழக்கில் கூறினால்; உனக்கும் பேப்பே, உன் அப்பனுக்கும் பேப்பே, என்று ஏமாற்றும் தோரணையில் ஆட்சி நடத்த முனைந்துள்ளது....!

# இலங்கை-அமெரிக்க உறவுகளின் எதிர்காலம்

தமிழில் ரஜீவன்



இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிரைவில் தனது ஜனாதிபதி பதவிக்காலத்தின் முதலாவது வருடத்தைப் பூர்த்தி செய்யவுள்ளாரெனினும், அவரது பல வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையிலேயே உள்ளன.

### சிறிசேன நிர்வாகத்துக்குச் சவால்கள்

சிறிசேனநிர்வாகத்தில் இன்னமும் தீர்வைக் காணத குறைந்தளவு சவாலைகொண்டுள்ள சீர்திருத்தங்களும் உள்ளன, உதாரணத்துக்கு தமிழ் அரசியல் கைதிகள் விவகாரங்கள் போன்றவை. நேரடியாகத் தீர்வைக் காணக் கூடிய விடயங்களுக்கு தீர்வைக் காண்பதற்கு கொழும்பு தயாராகயில்லாததைக் கருத்தில்கொள்ளும்போது, அவற்றை விட இன்னமும் கடினமான சவால்களுக்கு தற்போதைக்கு தீர்வு காணப்படும் என எதிர்பார்ப்பது நியாயமானதா?

இதேவேளை அமெரிக்கா கவலையளிக்கக் கூடியவிதத்தில் இலங்கையில் மேலும் சீர்திருத்தங்கள், பொறுப்புக்கூறல், மற்றும் நல்லிணக்கம் குறித்து படுத்தியுள்ள முன்னேற்றம் போதுமானது என வொசிங்டன் ஏற்கனவே தீர்மானித்துவிட்டதா? அவ்வாறு அமெரிக்கா முடிவு செய்யவில்லை என்றால், அடுத்த 12 மாதங்களுக்கு இலங்கை மீது தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுப்பதற்கு ஒபாமா நிர்வாகம் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றது?

### அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் உடன்பாடு

தற்போது இலங்கையில் சிறிசேன பதவியில் உள்ளார், இருமுக்கிய கட்சிகளினது கூட்டணி காணப்படுகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் உடன்பாட்டுக்கு வந்துள்ளன. வொசிங்டனின்



வெளிப்படையாக கருத்துத் தெரிவித்து வருகின்றது. வொசிங்டன் வெளியிட்டு வரும்

> குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார்கள் என எதிர் பார்க்கப்படுபவர்கள் அனைவரும் வெளி விவகாரங்கள் குறித்து சிறிய அறிவு கூட இல்லாதவர்கள்

கருத்துக்கள் குறித்து வேறுவிதத்தில்சிந்திக்கவேண்டியதருணம்இது. சிறிசேன அரசாங்கத்தின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் தொடர்ந்தும் தட்டுத்தடுமாறினால், ஒபாமா நிர்வாகம் குறிப்பிடத்தக்க விதத்தில் ஏதாவது செய்யத் தயாராகவுள்ளதா? சிறிசேன அரசாங்கம் இதுவரை வெளிப் அதிகார தாழ்வாரங்களில் தற்போது சில வகையான எண்ணங்கள் காணப்படுகின்றன. இதனைப் பார்க்கும்போது சில வருடங்களுக்கு முன்னர் மியன்மாரின் ஜனநாயக ஆரம்பங்கள் குறித்து செய்த தவறை ஒபாமா நிர்வாகம் மீண்டும் செய்வது போலத் தோன்றுகின்றது, முக்கியமாக, ஆழமான, நிரந்தரமான சீர்திருத்தங்கள் பார்வைக்குத் தோற்றமளிப்பதை விட, எப்போதும் கடினமானவை, சவால் மிகுந்தவை என்ற பாடத்தை அது மறந்துள்ளது.

இன்னமும் ஒரு வருட காலப்பகுதியில் ஒபாமா நிர்வாகம் அதிகாரத்திலிருந்து அகற்றப்படும். அடுத்த 12 மாதங்களில் சிறசேன அரசு குறிப்பிடத்தக்கசீர்திருத்தங்களை முன்னெடுத்தாலும்கூட 2017 ஜனவரிக்கு முன்னர் அவை முழுமையாகப் பூர்த்தியடைவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

இதேவேளை அமெரிக்காவின் அடுத்தஆட்சிப் பொறுப்பை ஏற்கும் அரசு- அது எந்தக் கட்சியைச் சேர்ந்ததாக இருந்தாலும் சரி- ஒபாமா நிர்வாகம் போன்று இலங்கையின் மனித உரிமை விடயங்களுக்கு மிகுந்த முக்கியத்துவத்தை அளிக்கும் என்பதற்கான உத்தரவாதம் எதுவும் இல்லை.

### இலங்கைமீது அழுத்தங்கள் அதிகரிக்குமா?

ஹிலாரி கிளின்டன் நிர்வாகம் இலங்கை மீது அழுத்தங்களை அதிகரிக்க விரும்புமா?

குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுபவர்கள் அனைவரும் வெளிவிவகாரங்கள் குறித்து போதிய அறிவு இல்லாதவர்கள். இவர்களில் எவராவது, இந்து சமுத்திரத்தில் உள்ள இந்தச் சிறிய தீவில் நீதியும், பொறுப்புக் கூறலும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் அக்கறைகாட்டுவார்களா? அதற்குமுன்னுரிமை வழங்குவார்களா?

2016 இல்வெள்ளைமாளிகையை எவர் கைப்பற்றினாலும் சரி, இலங்கையில்மனித உரிமைகள் மற்றும்பொறுப்புகூறல்குறித்துஒபாமா நிர்வாகம் காண்பித்த அக்கறையை . ஆர்வத்தை அவர்கள் வெளிப்படுத்தப் போவதில்லை.

ஆங்கிலமூலம்
டெய்லர் டிப்பேர்ட்-
த டிப்ளோமட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தலாகும் அமெ. ஜனாதிபதித் தேர்தல்

நீதிமன்ற அனுமதி இன்றி பள்ளிவாசல்கள் சோதனைக்குட்படுத்தப்பட வேண்டும், முஸ்லிம்களை மிக இலகுவாக அடையாளம் காணும் வகையில், அவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும், முஸ்லிம்கள் எவரையும் இனி அமெரிக்காவுக்குள் நுழையவிடக் கூடாது மற்றும் முஸ்லிம் பயங்கரவாதிகளின் குடும்பங்களையும் கொல்ல வேண்டும் போன்ற இனவாதக் கருத்துக்களை டொனால்ட் ட்ரம்ப் முஸ்லிம்களுக்கு எதிராக முன்வைத்து வருகின்றார். இப்படியான ஒருவர் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியானால் அது உலக முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.



### இனவாதத்தைப் பயன்படுத்தும் அரசியல்வாதிகள்

அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றி பெறுவதற்குப் பல உத்திகளைக் கையாள்கின்றனர். அபிவிருத்தி, தேசியவாதம், இனவாதம் மற்றும் மதவாதம் போன்றவை இவற்றுள் அடங்கும். அவற்றுள் இனவாதத்தைத்தான் அதிகமான அரசியல்வாதிகள் பயன்படுத்து கின்றனர்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இந்த நிலைமை மிகவும் அதிகமாக உள்ளது. இந்தியாவில் உள்ள தற்போதைய அரசான பா.ஜ.க., இனவாதம் ஒன்றையே துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி வருகின்றது.

அதேபோல், இலங்கையிலும் காலத்துக்குக் காலம் இந்த நிலைமை ஏற்படுகின்றது. அரசியல்வாதிகள் வங்குரோத்து நிலையை அடைகின்றபோது, இந்த நிலைமை ஏற்படுகின்றது. அப்போது அவர்கள் தேசியவாதம் மற்றும் இனவாதம் போன்ற ஆயுதங்களைக் கையிலேந்தித் தங்களது அரசியல் வங்குரோத்து நிலையைச் சரிசெய்வதற்கு முற்படுகின்றனர்.

முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான இனவாதத்தை விதைத்து அதனூடாக ஆட்சி அமைத்துக்கொண்ட பா.ஜ.க. இப்போது அனைத்துத் தேர்தல்களிலும் தோல்வியடைந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு இனவாதம் வெல்வதும் தோற்பதுமாக இருக்கின்ற நிலையில், நாகரிகமான நாடுகள் -ஜனநாயகத்தை மதிக்கின்ற நாடுகள் என்று சொல்லப்படுகின்ற மேற்கு நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளும் இந்த இனவாதம் என்ற ஆயுதத்தைக் கையில் எடுக்கத்தான் செய்கிறார்கள். அதற்கு நல்லதோர் உதாரணம்தான் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்.

### அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

அமெரிக்காவின் 58ஆவது ஜனாதிபதித் தேர்தல் அடுத்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கான முயற்சிகளில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கான வேர்பாளர்கள் இன்னமும் தெரிவு செய்யப்படவில்லை. வேட்பாளர் நியமனத்தைக் கைப்பற்றுவதற்கான போட்டிகளிலேயே பலர் இப்போது இறங்கியுள்ளனர். அதற்கான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியின் சார்பில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனின் பாரியாரும், அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க செயலாளருமான ஹிலாரி கிளிண்டன் வேட்பாளராகக் களமிறக்கப்படவுள்ளார்.

அதேபோல், குடியரசுக் கட்சியின் சார்பில் வேட்பாளர் நியமனத்தைக் குறிவைத்துப் பலர் போட்டியிடுகின்றனர். அவர்களுள் முக்கியமானவர்தான் டொனால்ட் ட்ரம்ப் எனும் தொழில் அதிபர். முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்களின் மூலம் இவர் இப்போது பேசப்படும் ஒருவராக மாறியுள்ளா ர்.

> முஸ்லிம்களுக்கு எதிரான பல இனவாதக் கருத்துக்களை அமெரிக்க மக்கள் மத்தியில் விதைத்து அதன் ஊடாக தனது இலக்கை அடைவதற்கு அவர் முயற்சி செய்கின்றார்.

முஸ்லிம்களுக்கு எதிரான பல இனவாதக் கருத்துக்களை அமெரிக்க மக்கள் மத்தியில் விதைத்து அதன் ஊடாக தனது இலக்கை அடைவதற்கு அவர் முயற்சி செய்கின்றார். அரபு நாடுகளில் இடம் பெற்று வரும் போரையும், அதில் போராடி வரும் முஸ்லிம் ஆயுதக்குழுக்களையும் அடிப்படை யாகக் கொண்டு தனது இனவாதச் சிந்தனையை அவர் வடிவமைத்து வருகின்றார்.

### முஸ்லிம்களுக்கு இடம் வேண்டாம்

சிரியா மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் போராடி வரும் ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிராக தாக்குதல்களை நடத்தி வரும் நாடுகளுள் பிரான்சுஸும் ஒன்று. குறிப்பாக, சிரியாவில் செயற்பட்டு வரும் ஐ.எஸ்கள் மீது பிரான்ஸ் அரசு விமானத் தாக்குதல்களை நடத்தத் தொடங்கியது. ரஷ்யாவும் அதனுடன் இணைந்தது.

இந்த நாடுகள் தம்மீது நடத்திவரும் விமானத் தாக்குதலுக்குப் பழி வாங்கும் விதமாக ஐ.எஸ். ரஷ்யாவின் பயணிகள் விமானம் ஒன்றைக் குண்டுவைத்துத் தகர்த்தது. அந்தவகையில், இவற்றுடன் சர்ச்சைக்குரிய டொ னால்ட் ட்ரம்பும் இணைந்து கொண்டார். நீதிமன்ற அனுமதி இன்றி பள்ளிவாசல்கள் சோதனைக்குட்படுத்தப்பட வேண்டும் என்றும், முஸ்லிம்களை மிக இலகுவாக அடையாளம் காணும் வகையில், அவர் களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறி அவர் சர்ச்சையில் சிக்கினார்.

இதனால், அவரைப் பிரிட்டனுக்குள் நுழைய விடக்கூடாது என்று கோரி இலட்சக் கணக்கான பிரிட்டிஷ் மக்கள் கையெழுத்துக்களைத் திரட்டி அரசுக்கு வழங்கியுள்ளனர். அத்தோடு, அவருக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்புப் பட்டத்தை ஸ்கொட்லாந்து நாடு மீளப் பெற்றுக் கொண்டது.

இருந்தும், அவர் பின்வாங்குவதாக இல்லை. தொடர்ந்தும் முஸ்லிம்களுக்கு எதிராகவே அவர் செயற்பட்டு வருகின்றார். வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பே இவ்வாறு செயற்படும் ஒருவர், வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டு, ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்டால் அமெரிக்காவில் உள்ள முஸ்லிம்களின் நிலை என்னவாகும் என்பதை சொல்லத் தேவை இல்லை.

அவருக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்பட்டு, அவர் ஒருவேளை தேர்தலில் வெற்றி பெற்றால் அது உலக முஸ் லிம்க்ள் அனைவருக்கும் ஆபத்தானதாக அமையும்.

இவருக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்படக்கூடாது என்று கூறப்படும் மக்களின் கோரிக்கை வெற்றி பெற்றால்தான், உலக முஸ்லிம்களுக்கு எதிரான அச்சுறுத்தல் நீங்கும்.

## விவசாய உற்பத்திகளுக்கு சந்தைகளில் இனிமேல் கழிவுகள் என்பது கிடையாது

மேற்படி தலைப்பில் கடந்த 11 ஆம் திகதிய உதயன் இதழில் 07 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள செய்தி தொடர்பாக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்

விவசாயிகளால் சந்தைக்கு விற்பனைக்காகக் கொண்டு செல்லப்படும் நிலக்கீழ் விவசாய உற்பத்திப் பொருள்களில் மண் ணுடன் எடுத்து வரப்படும் கிழங்கு தவிர்ந்த ஏனைய பொருள்களுக்கு வியாபாரிகளால் கழிவுகள் கோரப்படக் கூடாது.

உற்பத்திப் பொருள்களின் தரத்துக்கு ஏற்ப விலைகளை நிர்ணயம் செய்து வியாபாரிகளால் அவை கொள்வனவு செய்யப்பட வேண்டும். இவ்வாறு வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருகிறது.

இந்த நடைமுறையைப் பின்பற்றாத எவராக இருந்தாலும், அவர்களது சந்தை வியாபார நடைமுறைக்கான உரிமை இரத்துச் செய்யப்படும் என்றும் திணைக்களம் எச்சரித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டு உள்ள அந்தச் செய்தி விவசாயிகளுக்கு மகிழ்ச்சியளிக்கும் ஒன்றாகும்.

பல காலமாக இருந்து வந்த கழிவு முறையை நீக்குதல் தொடர்பாக உதயன் அக்கறை கொண்டு செயற்பட்டது என்பதை இந்த வேளையில் நினைவில் கொள்ளுகின்றோம்.

உதயன் கடந்த செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிய இதழின் பக்கம் 03 இல் இது தொடர்பான விரிவான செய்திக் கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டிருந்ததுடன், அதனையொட்டி விவசாயி ஒருவரின் வாசகர் திருமுகமும் உதயனில் பிரசுரமாகியிருந்தமையையும் நினைவில் கொள்ளுகின்றோம்.

கழிவு முறை நீக்கம் தொடர்பாக ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுத்திருக்கும் வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு எமது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்வதுடன், குறித்த அறிவுறுத்தல்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் எதிர்பார்க்கிறோம்.

[illegible]
ஒரு விவசாயி

## நீண்டநாள் குறைபாடுகளுடன் காணப்படும் மாவடி வீதி குறிப்பிட்ட பகுதியின் அவலம்

யாழ்.மானிப்பாய் வீதியையும், சிவன் பண்ணை வீதியையும் இணைக்கும் மாவடி வீதியின் குறிப்பிட்ட பகுதி நகரின் சுகாதாரச் சீர்கேட்டுக்கு நல்லதோர் உதாரணமாகியுள்ளது.

யாழ்.ஐந்து சந்தியில் ஆரம்பமாகி மானிப்பாய் வீதியில் முடிவடையும் குறித்த வீதி ஆரம்பமாகும் இடத்தில் இருந்து திருத்தியமைக்கப்பட்டு சிவன் பண்ணை வீதியைத் தொடுமிடம் வரை வந்ததும் நிறுத்தப்பட்டு விட்டது.

இந்தக் கடிதத்தின் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டப்பட்ட மாவடி வீதி முடிவடையும் பகுதி திருத்தப்படாது விடப்பட்டமை பற்றி முன்னரும் ஒருதடவை உதயன் மூலம் தெரிவித்திருந்தேன்.

மேலும் இந்தக் குறிப்பிட்ட பகுதியில் மூன்று இந்து ஆலயங்கள் இருப்பதுடன் குடிமனைகளும் உள்ளன.

தினமும் பாடசாலை மாணவர்கள் முதல் நகரத்துக்குப் போவோர் வருவோர் எனப் பலர் இந்த வீதியூடாகவே பயணிக்கின்றனர். குறித்த பகுதியில் வடிகால் கழிவுநீர் [illegible] வீதியை மேலும் [illegible]கேட்டுக்குள்ளாக்குகிறது. சந்தியில் போடப்படும் குப்பைக் கழிவுகளும் அவற்றை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நாய்களும் இதற்கு மேலும் வலுவூட்டுவதாக வீதியை ஆக்கிரமித்துள்ளன.

இந்த நிலையில் இந்த வீதியின் குறித்த பகுதியில் ஒளிரும் ஒரே ஒரு வீதி விளக்கும் சேடமிழுக்க ஆரம்பித்து விட்டது. எப்போது இது கண்ணை மூடுமோ தெரியவில்லை. கடந்த வாரம்கூட இந்த வீதியில் உள்ள ஓர் ஆலயத்தில் நள்ளிரவில் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டமைக்கான அடையாளங்களை (ரீசேட், செருப்புகள் கழற்றி விடப்பட்டிருந்தன) ஆலய அர்ச்சகர் மறுநாள் கண்டு தெரிவித்திருந்தார். வீதி விளக்கு ஒளிராத நிலைமை மேலும் திருடர்களுக்குச் சாதகமாகி விடலாமல்லவா?

இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாகக் கவனமெடுத்து உதவ வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

கி.வே.கிருஷ்ணானந்தன்
சிவன் பண்ணை வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுத் தீயால் 1,500 கோடி டொலர் நட்டம் இந்தோனேசியாவில்

ஜகார்த்தா, டிசெ.17
இந்தோனேசியாவில் ஏற்பட்ட காட்டுத் தீயால் ஆயிரத்து 500 கோடி அமெரிக்க டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலைத் தாக்கத்தின் இழப்பைவிட, இது இரு மடங்கு அதிகம் என உலக வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்தக் காட்டுத் தீயினால் ஏற்பட்ட புகை தென்கிழக்கு ஆசியா முழுவதையும் சில மாதங்களாக புகை மூட்டமாக்கியது.

இந்தக் காட்டுத்தீயால் ஏற்பட்ட சூழல் மாசடைவு இன்னும் அதிகம் எனவும், இந்த மாசு சில வருடங்களுக்குத் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

காட்டுத்தீயினால் ஏற்பட்ட இழப்பு இந்தோனேசியாவின் உள்ளூர் உற்பத்தியில் 1.9 சதவீதம் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் கிழக்கு சுமாத்திராவின் றியாவு மாகாணத்தில் காட்டுத்தீ ஏற்படுவது வழக்கம். காகிதக் கூழ், பாம் எண்ணெய்தயாரிப்புநிறுவனங்களினால் நிலப் பற்றைகள் வெட்டப்படும்போதும், மீள் மர நடுகையின் போதும் இவ்வாறான தவறுகள் ஏற்படுவது அங்கு வழமையாகிவிட்டன என அறிக்கை குறிப்பிடுகிறது.

வருடா வருடம் இந்தக் காட்டுத் தீயினால் ஏற்படும் அழிவு பொருளாதார ரீதியாகப் பெரும் பாதிப்பையும் சூழல் மாசையும் ஏற்படுத்துகிறது.

காட்டுத் தீ பரவக் காரணமாக இருக்கும் வர்த்தகத்தின் மூலம் சில ஆயிரம் வர்த்தகர்கள் பயன் பெறுகின்றபோதும், காட்டுத் தீயினால் பல லட்சக் கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்றும் உலக வங்கியின் அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

இதனை அடுத்து இந்தோனேசிய அரசு உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியைத் திரும்பப் பெறவும், மீறி செயற்படுபவர்களுக்கு 10 வருட சிறைத்தண்டனை வழங்கவும் முடிவு செய்துள்ளது.

> 2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலையால் ஏற்பட்ட சேதங்களைப் போன்று இரண்டு மடங்கான சேதம் தீயால் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கை வெளியிட்ட இந்தோனேசிய அதிபர், கடைசியாக ஏற்பட்ட காட்டுத் தீயின் பாதிப்பில் இருந்து திரும்ப 3 வருடங்கள் எடுக்கும் எனத் தெரிவித்தார்.

உலக வங்கி அறிக்கையில் இந்தோனேசியாவின் 8 மாகாணங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன என்றும், ஒவ்வொரு மாகாணத்திலும் 100,000க்கும் மேற்பட்ட ஹெக்டேயர் நிலங்கள் தீயில் அழிந்துள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளது. அரிய வகை உயிரின இழப்புகளும் கணக்கிடமுடியாத அளவுக்கு ஏற்பட்டன என அறிக்கை கூறுகின்றது.

(உ-ரி4)




## அருமையான அம்மா

இங்கிலாந்தில் வசிக்கும் எமி பூல், கடந்த ஆண்டு ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். குழந்தையின் மூக்கில் சிறிய ஒரு கட்டி இருந்தது. பின்னர்தான் அது கட்டி அல்ல மூளை என்பது தெரிய வந்தது. மிக அரிய குறைபாடு இது. மண்டை ஓடு திறந்திருந்தால், பின் மண்டை, மூக்கு போன்றவற்றுக்கும் மூளை பெயரும்.
சிறுவன் ஆலீ ட்ரெஸைஸ் பிறந்து 21 மாதங்களாகின்றன. அதற்குள் வலி நிறைந்த, ஆபத்தான பல அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இப்போது மூளை மண்டை ஓட்டுக்குள் மீண்டுவிட்டது. நன்றாக மூச்சு விட முடிகிறது. "இதோ, ஆலீ பல ஆபத்துக்களைக் கடந்து ஆரோக்கியமாக இருக்கிறான். கதையில் நான் படித்த பினாஹியோ, எனக்கே மகனாகப் பிறப்பான் என்று எதிர் பார்க்கவில்லை! இந்த மகனுக்கு அம்மாவாக இருப்பதை நினைத்துப் பெருமைப்படுகிறேன்" என்கிறார் எமி பூல்.

# சீனாவில் காற்றும் விற்பனை

பீஜிங், டிசெ. 17
சீனாவில் காற்று கடுமையாக மாசடைந்து வரும் சூழலில், கனடா நாட்டு நிறுவனம் ஒன்று தூய்மையான மலைக் காற்றை போத்தல்களில் அடைத்து விற்பனை செய்கின்றது.

டிசெம்பர் மாதத் தொடக்கத்தில் சீனத் தலைநகர் பீஜிங்கில் காற்று மாசடைவது அளவுக்கதிகமாகிவிட்டது என்று அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனால் தலை நகரில் பாடசாலைகள் மூடப்பட்டன. கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. சில நாள்களாக மக்கள் அனைவரும் வீட்டுக்குள்ளேயே முடங்கியுள்ளனர்.

உலக மக்கள் தொகையில் முதலிடத்தில் உள்ள சீனாவில், தொழில்துறை வேகமாக வளர்ந்து வருகிறது. அதேநேரத்தில் அங்கு தலைநகர் பீஜிங் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் வாகனங்கள், மின் உற்பத்தி நிலையங்கள் மூலமாக வெளியேறுகின்ற புகை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குளிர்காலத்தில் வீடுகளில் குளிர் காய்வதற்கு நிலக்கரியை எரிப்பதால் வெளி யேறுகிற புகையாலும் காற்றில் மாசு பெருகி வருகிறது.

இதுவரை இல்லாத அதிக அளவிலான பனி மூட்டத்தால் அங்கு பனிப் புகை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து பீஜிங் மாநகர நிர்வாகம் சிவப்பு எச்சரிக்கையை வெளியிட்டது. பாடசாலைகளில் வெளிப்புற நடவடிக்கைகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டுள்ள கனேடிய நிறுவனம் ஒன்று "சுத்தமான காற்று" என்ற அறிவிப்புடன் காற்றைப் போத்தலில் அடைத்து விற்பனை செய்கிறது. மாசடைந்த காற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் சீன மக்கள் அதனைப் பணம் கொடுத்து வாங்கும் நிலைக்குத் தள் ளப்பட்டுள்ளனர்.

கனடா நாட்டில் உள்ள பான்ஃப் மற்றும் லேக் லூயிஸ் ஆகிய மலைகளிலிருந்து பெறப்பட்ட தூய்மையான காற்றே போத்தலில் அடைத்து விற்கப்படுவதாக அதை விற்பனை செய்துவரும் நிறுவனம் தெரி விக்கிறது.

ஒரு லீற்றர் போத்தல் காற்று இலங்கை மதிப்பில் ரூ.4 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது. பான்ஃப் மலையின் காற்று இன்னும் அதிக விலைக்கு விற்கப் படுகிறது.

(உ)

# 90

# சிரிய விவகாரம்: அமெரிக்க - ரஷ்ய அமைச்சர்கள் திடீர்ச் சந்திப்பு

சிரிய விவகாரத்தில் திடீர் திருப்பமாக அமெரிக்க - ரஷ்ய வெளியுறவு அமைச்சர்கள் மொஸ்கோவில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

சிரியாவில் அதிபர் அசாத்தின் படைகளுக்கும் அவரை எதிர்க்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. சிரிய நிலப்பரப்பில் 30 சதவீதம் மட்டுமே சிரியா அரசு வசம் உள்ளது. 70 சதவீத நிலப்பரப்பு எதிர்ப் படைகள் வசம் உள்ளன.

ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக சிரியாவில் அமெரிக்க கூட்டுப் படைகள் வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. அதே நேரம் அதிபர் அசாத்துக்கு எதிரானவர்களுக்கு உதவியும் செய்து வருகின்றது அமெரிக்கா. அசாத்தை பதவி விலகச் செய்ய அமெரிக்கா தொடர்ந்து முயற்சிக்கிறது.


ரஷ்யாவோ அதிபர் அசாத்துக்கு ஆதரவாகத் தனது படை [illegible] அமெரிக்க கூட்டணிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தப் பிரச்சினையில் திடீர் திருப்பமாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி நேற்று முன்தினம் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவுக்கு சென்றார். [illegible] அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாரவைச் சந்தித்துப் பேசினார்.

"சிரியாவில் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் இருநாடுகளும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன. விரைவில் நல்ல தீர்வு காணப்படும்" என்றார் கெர்ரி.

"அமெரிக்கா தொடர்பான ரஷ்ய வெளியுறவுக் கொள்கை குறித்து மறுபரிசீலனை செய்யப்படும்" என்றார் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர், சந்திப்பின் பின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரிட்டனின் முதலாவது விண்வெளி ஆய்வாளர் சர்வதேச விண் வெளி ஆய்வு நிலையத்திற்குச் சென்று சேர்ந்திருக்கிறார். பிரிட்டன் வளர்ந்த நாடாக இருக்கின்றபோதும் இப்போதே முதன் முதலாக விண் வெளி ஆய்வாளர் ஒருவரை அனுப்பியுள்ளது. மேஜர் ரிம் பீக் கஜகஸ்தான் தளத்தில் இருந்து புறப்பட்ட 9 மணி நேரத்தின் பின்னர் சர்வதேச விண்வெளி நிலையத்தைப் போய்ச் சேர்ந்தார். அவருடன் மேலும் மூவரும் சென்றுள்ளனர். "சூரியே-ாதயம் அற்புத ம ரக இருந்தது" என்று நிலையத்தில் இருந்து குடும்பத்தினருடன் பேசும் போது அவர் தெரிவித்திருக்கிறார்.

# முக்கிய தீவிரவாதி நைஜீரியாவில் கைது

*300 சிறுமிகளைக் கடத்திய போஹோகாரம் அமைப்பைச் சேர்ந்தவர்*

உபா, டிசெ.17
நைஜீரியாவில் நினைத்துப் பார்க்க முடியாத வன்முறைகளில் ஈடுபட்டுவரும் போஹோகாரம் அமைப்பினின் பிரதான ஒளிப்படவியலாளரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று நைஜீரிய இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.
அப்துல்லா அபுபக்கர் என்ற இந்த நபர் பொர்னோ மாகாணத்தில் உபா நகரில் கைது செய்யப்பட்டார் என்று இராணுவத்தின் அறிக்கை குறிப்பிடுகிறது. போஹோகாரம் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனத் தேடப்படும் முக்கிய குற்றவாளிகள் 100 பேரில் 58ஆவது இடத்தில், கைதானவர் இருந்தார் என்றும் அதிகாரிகள் கூறினர்.
இந்தச் சந்தேகநபர்களின் பட்டியலில் குழுத் தலைவர் அபுபக்கர் கேவுவின் பெயர் 100 ஆவது இடத்தில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. தற்போது கைதாகியுள்ள அப்துல்லா தவிர மேலும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என இராணுவத்தினர் தகவல் வெளியிட்டனர்.
வட நைஜீரியப் பிராந்தியத்தில் போஹோகாரம் அமைப்பினர் மக்களை இஸ்லாமிய மதத்தைப் பின்பற்ற வற்புறுத்தி வருகின்றனர். இதனால் தொடர்ந்து பல தாக்குதல் சம்பவங்கள் நிகழ்கின்றன.
கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 300 பாடசாலை மாணவிகள் குறித்த அமைப்பினரால் கடத்தப்பட்டனர். இதுவரை குறித்த சம்பவம் தொடர்பில் எந்த மேலதிகத் தகவலும் இல்லை. (ரி4)

# அலையில் சறுக்கிய நத்தார் தாத்தாக்கள்

சிட்னி,டிசெ.17
ஆஸ்திரேலியாவில் அலை சறுக்களில் நத்தார் தாத்தாக்கள் 320 பேர் ஒன்றிணைந்து உலக சாதனை படைத்துள்ளனர். சிட்னியின் போண்டி கடற்கரையில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது. முன்னைய சாதனையை முறியடிக்க 250 பேர் எதிர்பார்க்கப்பட்டனர். ஆனால் 320 பேர் கலந்துகொண்டனர் என்கிறார்கள் ஏற்பாட்டாளர்கள் மகிழ்ச்சி பொங்க.
மன நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் உடல், உள, சமூக வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான முயற்சியில் சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது. உள நோய் தொடர்பான அறிவுறுத்தல் வழங்குவதற்கான முயற்சி என இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர் தெரிவித்தார். மேலும் மன நோயாளர்களையும், மன நோயையும் சமூகம் பார்க்கும் விதத்தை மாற்ற முயற்சி செய்கிறோம் என அவர்கள் தெரிவித்தனர்.
இந்த நிகழ்வு தொடர்பாக நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில், நத்தார் தாத்தா உடை அணிந்து பங்கேற்ற நிகழ்வானது விழிப்புணர்வை வழங்கியதாகவும், காலத்திற்குத் தகுந்ததாகவும் இருக்கும் எனவும் இது திட்டமிட்டுச் செய்யப்பட்டது என்கின்றனர் ஏற்பாட்டாளர்கள். (உ-ரி4)



# மாவோ சே துங்கின் கடிதம் 9 லட்சம் டொலருக்கு ஏலம்

லண்டன், டிசெ.17
சீனாவின் கம்யூனிஸத் தலைவர் மாவோ சேதுங் 1937ஆம் ஆண்டில் எழுதியிருந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடிதம் ஒன்று லண்டனில் 9 லட்சம் டொலருக்கும் அதிகமான விலைக்கு ஏலம் போயுள்ளது.
மாவோ கையொப்பம் இட்டுள்ள இந்தக் கடிதம், அப்போதைய பிரிட்டிஷ் எதிர்க் கட்சியான தொழிற்கட்சியின் தலைவர் கிளெமென்ட் அட்லீக்கு எழுதப்பட்டுள்ளது.
'மிகவும் அரிதானது' என்று இந்தக் கடிதத்தை ஏலத்தில் விற்ற நிறுவனம் வர்ணித்திருந்தது.
சீனா மீதான ஜப்பானின் படையெடுப்புக்கு எதிராக பிரிட்டன் நடைமுறை ரீதியான உதவிகளை வழங்கவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் மாவோ கேட்டிருக்கிறார்.
அதிகபட்சமாக ஒன்றரை லட்சம் டொலருக்குத்தான் இந்தக் கடிதம் ஏலம் போகும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அதைவிடப் பல மடங்கு அதிகமான விலைக்கு விற்கப்பட்டுள்ளது. மொத்தமாக 9 லட்சத்து 10 ஆயிரத்து 880 டொலருக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. கடிதத்தை வாங்கியவர் தனது பெயர் ஊடகங்களில் வருவதை விரும்பவில்லை.



சில முக்கிய தலைவர்களின் கையொப்பத்துடன் இந்தக் கடிதம் காணப்படுவதால் இது அரசியல் கடிதங்களுள் அரிதானது எனப்படுகிறது.
மாவோவின் கையொப்பம் இடப்பட்ட கடிதம் ஏலமிடப்படுவது இது இரண்டாவது முறையாகும் என சர்வதேச ஏல நிறுவனமான சோத்பே தெரிவித்தது.
சோத்பேயின் தகவல்படி, இந்தக் கடிதம் ஜப்பானுக்கு எதிராக சீனாவுக்கு ஆதரவு வழங்கும் வண்ணம் 1937ஆம் ஆண்டு எழுதப்பட்டபோதும், அரசியல் காரணங்களுக்காக தாமதப்படுத்தப்பட்டு 17 ஆண்டுகளின் பின் 1954ஆம் ஆண்டே பிரிட் டிஷ் பிரதமரைச் சென்றடைந்தது. (உ-ரி4)

# ...00
# ...லைகள் ...க்காவில் ...பட்டன

...றுத்தல் காரணம்

...தாக்குதல் நடத்தப் ...ிரட்டலால் அமெ ...லாஸ் ஏஞ்சல்ஸ் ...பாடசாலைகள் ... நேற்று மூடப் ... பாடசாலைகள் ...டப்பட்டுள்ளன. ...கள் குறித்து புல ...திகாரிகள் விசா ...ன்றனர்.
...சல்ஸ் மாகாணத் ... பெரும்பாலான ...ளுக்கு குறுந்தக ...மிரட்டல் வந்தது. ...வின் கலிஃபோர் ...ணத்தில் கடந்த ...ந்தப்பட்ட பயங்கர ...தல் போன்ற மற் ...த்தை பாடசாலை ... உள்ளதாக அந்த ...ருந்தது.
...ல்லாத குறுஞ் ...போதும் பாது ...தி பாடசாலைகள் ...கும் விடுமுறை ...ளதாகத் தெரிவிக் ...ிரட்டலால் 900க் ...ான பாடசாலை ...டுள்ளன. இங்கு ...,000 மாணவர் ...றனர்.
...களையும் அமெ ...ும் தீவிரவாதம் ... விடமாட்டேன் ...ா கூறியுள்ளார்.

# பயனாளர்களே திருத்தக்கூடிய புதிய தொடுபேசிகள் அறிமுகம்

வோஷிங்டன், டிசெ.17
அலைபேசி வகைகளில் புதுவிதமானதாக 'பெயார்' தொடுபேசிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இலகுவாக திருத்தம் செய்யக்கூடிய விதத்திலும் மேம்படுத்தக்கூடிய வகையிலும் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. பயனாளரே இதனைத் திருத்திக் கொள்ளமுடியும். இந்த வாரத்தில் இவை விற்பனைக்காகச் சந்தைக்கு வரவுள்ளன.
இந்த வகைப் பேசிகளின் இரண்டாவது தலைமுறையாகத் தற்போதைய தொடுபேசி வடிவமைக்கப்பட்டுள்ளது. பாவனையாளராலேயே திருத்தக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள உலகின் முதலாவது பேசி என்கிற கவர்ச்சியையும் இது தனதாக்கியுள்ளது. பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த அலைபேசியைக் குறைந்தளவு கருவிகளைக் கொண்டே கழற்றி மீண்டும் பொருத்த முடியும்.
"பயனாளர்கள் இலகுவாகக் கையாளவும், திருத்தம் செய்யவும் இயலுவதோடு, நெடுநாள் பாவனைக்கு உகந்த முறையிலும் இதனை வடிவமைத்துள்ளோம்" என்று உற்பத்தி நிறுவனம் அறிவித்துள்ளது.
பயனாளர்கள் அடிக்கடி தமது பேசிகளை மாற்றிக் கொள்வதை விடுத்து நீண்ட காலத்திற்கு ஒரே பேசியைப் பயன்படுத்துவதற்கு இது உதவும் என்று தயாரிப்பு நிறுவனம் எதிர்பார்க்கிறது.
இவ்வாறு ஒரே பேசியை நீண்ட நாள்களுக்குப் பயன்படுத்துவதன் ஊடாக, சுற்றுச் சூழலுக்கு பேசிகளால் ஏற்படும் பாதிப்புக் குறையும் என்றும் தயாரிப்பு நிறுவனம் தெரிவிக்கிறது. (உ-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரகவி காரை.
எம்.பி.அருளானந்தன்

# மங்கையர் நலமோங்கி மாநிலம் சிறக்க வழிகாட்டும் மார்கழித் திருவெம்பாவை

ஞானப்பனுவல், அறிவால் சிவனேயானவர் மணிவாசகர். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடியுள்ள வாதவூரரின் வண்மைத் தமிழ் ஆணவமல வெப்பத்தைத் தணிக்கும் அருள்மழை. பிறவிப் பிணி தீர்க்கும் பெருமருந்து. அந்தத் திரு வாசகத்தின் சிறப்பான ஒரு பகுதியே திருவெம்பாவை.

காத்யாயணி விரதம் என்று பாகவதத்தில் பேசப்படும் இந்தப் பாவை நோன்பு, பணி வரைக் கொடியாம் உமையம்மையை நோக்கிச் செய்யப்பட்டது. எனவே இது சக்தியை வியந்தது. ஆன்மாவை விழிக்கச் செய்யும் பரிபக்குவரின் பேச்சே பாவைப் பாடல்களாகும். திருவெம்பாவை என்பதில் திரு என்பது மேன்மையையும் எம் என்பது உயிரையும் பாவை என்பது வழிபாட்டுக்கு அமைந்த திருவுருவையும் சுட்டின. பாவாய் என்ற விளியை, வழிபடும் உருவத்தைஅழைப்பதாகவும், பாவை நோன்பு நோற்கும் பெண்களை அழைப்பதாகவும் கொள்ளலாம்.



### திருவெம்பாவை

சிவன் என்ற சொல் செந்நிற முடையவன் என்று பொருள்படும். சிவன் மூவருக்கும் மேலான முழுமுதற் கடவுள். சைவ சித்தாந்தப்படி இறைவன் பிறப்பற்றவன். இதையே ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி என்பதாகச் சுட்டுகிறார் மணிவாசகர். சிவபெருமான் ஒருவனே முதல்வனாக அழியாப் பொருளாக நிலை பெற்று, பின் படைப்பாதித் தொழில் செய்தற்கு நாத தத்துவத்தை எழுப்பி நிற்பவன் என்பது சைவர்களது கொள்கை. இதையே ஊழி முதல்வனாய் நின்ற ஒருவன் என்பதால் உணர்த்துகிறார்.. சிவபெருமான் அனைவருக்கும் தலைவன் என்பதை மாலறியா நான்முகனும் காணாமலை அண்ணாமலையான் அடிக் கமலம் சென்று இறைஞ்சும் விண்ணோர் என்ற அடிகள் உணர்த்துகின்றன.

திருவெம்பாவையில் இறைவனின் பெருமை கூறி, மலம் நீங்கப் பெற்ற உயிர்கள் இறைவனை அடைவதையே கருத்தாகக் கொண்டு அதன் அடிப்படையிலேயே ஒவ்வொரு பாடலையும் மணிவாசகர் அமைத்துள்ளார்.

திருவெம்பாவையில் முதலில் துயிலெழுப்புதல், பின் நீராடுதல், இறைவனைப் போற்றித் தன் வேண்டுதலை இறைவனிடம் கூறல் என்ற நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இறுதியில் இறைவனைப் போற்றிப் பாடுகின்றனர்.

### துயிலெழுந்துவரும் கன்னியர்கள்

துயிலெழுந்து வரும் கன்னியர்களை, இறைவன் பெருமையையும் அருளையும் நன்குணர்ந்து வரும் நன்மக்களாகவும், நீர்த்துறையை இறைவன் அருள் நிலையமாகவும், அதில் நீராடி இன் புறுவதை திருவருளில் தோய்ந்து இன்புறுவதாகவும் கூறுவர். ஞாயிற்றின் நல்லொளி கண்டு நன்மக்கள் அதன் இன்பத்தில் மூழ்குவரென்றும், மகளிர் தம்மை தலைவன் கையில் அகப்படுத்துவதுபோல் உலக மக்கள் தம்மை இறையருளுக்கு உரிமை செய்கின்றனரென்றும் கூறுவர்.

ஓர் இல்லத்து வாசலில் நிற்கின்ற மற்றப் பெண்கள் உள்ளே இருப்பவளை ஒளி பொருந்திய பெரிய நீண்ட கண் களையுடையவளே என்றழைக் கின்றனர்.

வாள் தடங்கண் மாதே, எவ்வுயிர்க்கும் தோற்றமாய் ஈறாய்த் தோற்றமும் ஈறும் இல்லாதவனாய், இருக்கும் அரும் பெருஞ் சோதி வடிவானவனை, யாம் பாடக் கேட்டும் நீ உறங்குகிறாய்? அருட் சோதி வடிவான அண்ணாமலையான் அவன். அவனை யாம் அறிந்த அளவு பாடிக் குளிர் நீங்கி உன்வாசலில் வந்து நிற்க நீ உறங்குவது அழகா? இது பொய்யுறக்கமா? உன்செவி வன்செவியா? கேட்காதா உன்காது?

> திருவெம்பாவை என்பதில் திரு என்பது மேன்மையையும், எம் என்பது உயிரையும், பாவை என்பது வழிபாட்டுக்கு அமைந்த திருவுருவையும் சுட்டின. பாவாய் என்ற விளியை, வழிபடும் உருவத்தை அழைப்பதாகவும், பாவை நோன்பு நோற்கும் பெண்களை அழைப்பதாகவும் கொள்ளலாம்.

### ஆதியும் அந்தமும் இல்லாத...

ஆதியும்அந்தமும்இல்லாஅரும்பெரும் சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண் மாதே வளருதியோ? வன் செவியோ, நின் செவிதான்?

இவ்வாறாக திருவெம்பாவை ஒவ்வொரு பாடலும் துயில் எழுப்ப வந்தபெண்களுக்கும் வீட்டினுள்ளே இருக்கும் பெண்களுக்குமிடையே நிகழ்ந்த உரையாடல் பாங்கிலே அமைந்து காணப்படுவதையும் காணலாம்.

கட்டுரையாளர்: பணிப்பாளர்,
சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்.

# காதின் தொழில்கள்

குகேந்திரன்

காது இரு முக்கியமான புலன் தொழில்களைப் புரிகிறது. அவை கேட்டலும், சமநிலையைப் பேணுதலும் ஆகும். அத்துடன் காதின் பகுதிகளை வேறுபடுத்தலாம். அவை முறையே புறக்காது, நடுக்காது, உட்காது ஆகும். புறக்காது மீள்சக்திக் கசியிழையத்தால் வலிமையாக்கப்பட்ட சோனையைக் கொண்டது. இது ஒலி அலைகளைக் குவியச் செய்து சேகரித்து புறக்காதுக் கால்வாயினுள் செலுத்துகிறது. புறக்காதுக் கால்வாய் 2.5 சென்றி மீற்றர் நீளமுடையது. அத்துடன் மனிதக் காது 4020,000 Hz மீடிறன் ஒலிக்கு உணர்ச்சி உள்ளது. நாய்க்கு கேட்கக்கூடிய மீடிறன் 40,000 Hz ஆகவும், வெளவாலுக்கு 100,000 Hz ஆகவும் காணப்படுகின்றன. மனிதனின் பேச்சு மீடிறன் 500-3000 Hz ஆகவுமுள்ளது.


உருவாக்கப்படும் ஒவ்வொரு ஒலியும் வளிமண்டல வளியிலுள்ள வளித்துணைக்கைகளில் குழப்பத்தை அல்லது அதிர்வை ஏற்படுத்தும். இந்த அதிர்வுகள் தொடராக ஒலி அலைகளாகச் செல்லும். புறக்காதுச் சோனை இந்த ஒலி அலைகளை சேகரித்து புறக்காதுக் கால்வாயினுள் செலுத்தும். புறக்காதுக் கால்வாயினூடாகச் செல்லும் ஒலி அலைகள் செவிப்பறை மென்சவ்வில் மோதி செவிப்பறையை அதிரச் செய்யும்.பின் அந்த அதிர்வு சிற்றென்புகள் ஊடாகச் செல்லும். இதன்போது அதிர்வு 22 மடங்காக அதிகரிக்கவும் செய்யப்பட்டு நீள்வட்டப்பலகனி, தலைவாயிலேணிக் கால் வாயிலுள்ள சுற்று நிணநீர், இரெசுனரின் மென்சவ்வு, அகநிணநீர், அடிமென்சவ்வு மற்றும் மயிர்க் கலங்கள் போர்வை மென்சவ்வு சார்பாக மேலும் கீழுமாக அசையும். இதனால் மயிர்க் கலங்களின்மேலுள்ள திண்ம மயிரிழைகள் போர்வை மென்சவ்வை விட்டு விட்டுத் தாக்கும். இதனால் திண்ம மயிரிழைகள் வளைக்கப்படும். இதனால் உண்டாகும் பொறிமுறைச் சைகைகளை மயிர்க் கலங்கள் மின் சைகைகளாக மாற்றிக் கடத்தும்.

### பிரித்தறியும் ஆற்றல் உள்ளது

மனிதக் காது, ஒலியின் உரப்பு, வீச்சம், தொனி என்பவற்றை வேறு பிரித்தறியும் ஆற்றலுடையது. உயர் மீடிறன் அல்லது உயர் உரப்பு ஒலி(குறுகிய அலைநீளம்) நத்தைச் சுருளின் அடிப்பகுதிக்கு அருகிலுள்ள அடிமென் சவ்வை அதிர வைக்கிறது. இந்தப் பகுதியில் அடிமென் சவ்வு ஒடுங்கியதும் உயர் இழுவையில் உள்ளதாகவும் இருக்கும். இதனால் இந்தப் பகுதி உயர் மீடிறனில் அதிரும். எனவே உயர் உரப்பு ஒலியை உணரச் செய்வதில் நத்தைச்சுருளின் அடிப்பகுது உதவுகிறது. அத்துடன் தாழ் மீடிறன் அல்லது தாழ் உரப்பு ஒலி(நீண்ட அலை நீளம்) நத்தைச்சுருளின் நுனிக்கு அருகாமையிலுள்ள அடிமென் சவ்வை அதிரச் செய்கிறது. இந்தப் பகுதியில் அடிமென் சவ்வு அகலமானதும் குறைந்தளவு, இழுவைக் குட்பட்டதாகவும் இருக்கும். எனவே இந்தப் பகுதி தாழ் மீடிறனில் அதிரும். எனவே தாழ் உரப்பு ஒலியை உணர்வதில் நத்தைச்சுருளின் நுனிப்பகுதி உதவுகிறது.

### ஒலிவரும் திசையை அறியலாம்

இரு காதுகள் இருப்பதால் திண்ம ஒலிக் கேட்டல் விளைவு ஏற்படுகிறது. இதனால் ஒலி வரும் திசையை எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. ஒலியின் செறிவு டெசிபல் அலகில் அளக்கப்படுகிறது. சராசரி இளம் மனி தனுக்கு கேட்கக் கூடிய ஒலியின் உயர் செறிவு 0 -B ஆகும். இது கேட்டலின் தொடக்கப் பெறுமானம் ஆகும். மனிதனால் [illegible] கொள்ளக்கூடிய ஒலியின் உயர் செறிவு 120 -B ஆகும். இது [illegible] தொடக்கப் பெறுமானத்தின் ஒரு மில்லியன் மடங்கு உரப்பானதாகும். 120-B இற்கு மேல் ஒலி நத்தைச்சுருளைச் சேதப்படுத்தும். 85-B ஒலி



நீண்டநாள்களுக்கு வழங்கப்படின் காதில் பகுதிக் கேட்டல் இழப்பு ஏற்படும்.

உட்காதில் காணப்படும் நத்தைச்சுருள் தவிர்ந்த ஏனைய பகுதியான தலை வாயிலுபகரணமே உடற் சமநிலையைப் பேணும் அமைப்பாகும். ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட பைகளையும் நத்தைச்சுருளின் நடுக்கால்வாயுடன் தொடர்பான கால்வாய்களையும் கொண்டதே தலைவாயிலுபகரணம் ஆகும். நடுக்கால் வாயைப் போன்று இவையும் அகநிணநீரால் நிரப்பப்பட்டுக் காணப்படுவதுடன், வாங்கிக் கலங்களையும் கொண்டிருக்கும். இந்த வாங்கிகள் தன்னகம் வாங்கிகள் எனப்படும். இவை எமக்கு உடற்சமனிலை உணர்வை ஏற்படுத்துகின்றன. ராட்டினத்தில் இருந்து வேகமாகச் சுற்றப்பட்டு பின்னர் ராட்டினத்தை நிறுத்திய பின் நடக்கும்போது கீழே விழுவதற்கும் இவையே காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசு தயாளன்



# கற்றல் கற்பித்தலின்
## வெற்றிக்கான பாடத் திட்டமிடல்

பாடசாலைகள், பிள்ளைகளை சமூகப் பொருத்தப்பாடு மிக்கவர்களாக மாற்றியமைப்பதற்குத் தேவையான அனைத்துவிதமான அறிவையும் அனுபவங்களையும் நம்பிக்கை, விழுமியங்கள் போன்றவற்றையும் வழங்குகின்றன. இத்தகைய அறிவையும் அனுபவங்களையும் வழங்கும் செயன்முறையில் மாணவர்களிடையே எதனைக் காவிச் செல்ல வேண்டும் என்பது தொடர்பிலான ஆவணமாக பாடக்குறிப்பு விளங்குகின்றது. கலைத்திட்டத்தை அடியொற்றியதாக வகுப்பறையில் எது கற்பிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும்போது, அதற்கான செயல்வடிவக் கருவியாகப் பாடத் திட்டமிடல் விளங்குகின்றது. பாடத்தைத் திட்டமிடல் என்பது குறிப்பிட்ட பாடவேளையோடு இணைந்த கற்றலையும் கற்பித்தலையும் உள்ளடக்கிய வேலைச் செயலொழுங்காகும்.

பாடத்தைத் திட்டமிடும்போது, மாணவன் அறிந்து வைத்துள்ள அறிவுதிறன், செயன்முறைகள், உளப்பாங்குகள் என்பன தொடர்பிலும், கருத்தில் கொள்ளப்பட வேண்டும். ஆசிரியர் தனது செயற்பாட்டை இலகுவாக முன்னெடுத்துச் செல்வதோடு மாணவர்கள் எவ்வாறு கற்கின்றார்கள் என்பதையும் கருத்தில் கொண்டதாக அது அமைந்துள்ளது. சிறந்த கற்பித்தலுக்கான திட்டமிடலானது, மாணவர் ஒவ்வொருவரையும் கருத்தில் கொண்டமைந்ததாக அமைந்திருத்தல் அவசியமானதாகும். ஆசிரியரானவர் தன்னம்பிக்கையுடனும், ஆளுமையுடனும், நேரவிரயமற்ற வகையிலும், சிறப்பான அடைவு நிலை நோக்கியும், வகுப்பறையைக் குழப்பமின்றி நகர்த்திச் செல்வதற்கு பாடத்திட்டமிடல் மிகவும் அவசியமானதாகும்.

### ஆசிரியர்களின் கவனம்

குறித்த பாடவேளை ஒன்றில் மாணவர்கள் எதனை அடைந்து கொள்ளவேண்டும் என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். இதன்போது மூன்று கூறுகளின்பால் ஆசிரியரது கவனம் செலுத்தப்பட வேண்டும்.

1. மாணவர்களின் கற்றலின் இலக்கு
2. கற்றல், கற்பித்தல் செயற்பாடு
3. மாணவர்களுக்கு அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான தந்திரோபாயங்கள்.

உகந்த அனுபவங்களைத் தெரிவு செய்தல், அவற்றை ஒழுங்குக் கிரமமாகப் பொருத்துதல், மாணவர்களிடம் சமர்ப்பித்தல், அவர்களது கவனத்தை ஈர்த்தல், பங்கேற்பைப் பெறல் போன்ற பணிகள் பாடசாலையின் வகுப்பறையில் சிறப்பான முறையில் இடம்பெற வேண்டும்.

மாணவர்களிடையே கூடிய துலங்கலை ஏற்படுத்துவதற்கும், கற்பித்தல் தொடர்பான எண்ணப்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும், பாட எண்ணக்கருக்களைத் தெளிவாகப் புரியவைப்பதற்கும் பாடத்தை ஆசிரியர் திட்டமிட வேண்டியது அவசியமானதாகும்.

அறிந்து வைத்துள்ள அறிவில் இருந்து புதிய அறிவொன்றையும், அனுபவம் ஒன்றையும் பெற்றுக்கொடுக்கின்ற செயற்பாட்டின்போது, இதுவரை பெறப்படாத அறிவையும் அனுபவத்தையும் தேவைக்கேற்ப பொருத்தமான முறையில் கட்டியெழுப்புவது பாடத்திட்டமிடலின் மூலம் இடம்பெற வேண்டும். இதன் மூலமே கற்றல், கற்பித்தல் வெற்றியடைய முடியும்.

### தெளிவான இலக்கு வேண்டும்

ஒவ்வொரு பாடத்திட்டமும் தெளிவான இலக்கைக் கொண்டதாக இருக்க வேண்டும். அவ்வாறான நிலையிலேயே வகுப்பறை நிலைமைகளைச் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும். திட்டமிடப்பட்ட பாடத்திட்டம் வெற்றிகரமாக நகர்ந்து செல்வதற்கு பொருத்தமான தரஉள்ளீட்டுப் பயன்பாடு இருக்க வேண்டும்.

பாடக்குறிப்பை எழுதும்போது, அது எந்தப் பாடஅலகின் அனுபவப் பெறுகைக்காகத் தயாரிக்கப்படுகின்றது என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பாடக்குறிப்பின் மறைமுக நோக்கம் யாதெனில், அதனைப் பயன்படுத்தி வேறு ஓர் ஆசிரியர்கூட வகுப்பறையை வெற்றிகரமாக நகர்த்தக் கூடியதாக இருத்தலாகும்.

பாடத்திட்டமிடலானது எழுத்து வடிவில் சிறப்பானதாக அமைந்து, செயற்பாட்டு நிலையில் பலவீனமானதாக இருக்குமாயின் அதன்மூலம் வகுப்பறைச் செயற்பாடுகள் சிறப்படைய மாட்டாது.

> “ கலைத்திட்டமானது பாடசாலையில் ஆசிரியரால் வகுப்பறைச் செயற்பாடுகளினூடாக முன்னெடுக்கப்படுகின்றது. கலைத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவோராக மாணவர்கள் உள்ளனர். ”

அத்தகைய நிலையானது ஆசிரியரது தொழில் திறன் விருத்திநிலை தொடர்பில் மாணவர்கள் மத்தியில் நம்பிக்கை இழப்பையே தோற்றுவிக்கும்.

கலைத்திட்டமானது, பாடசாலையில் ஆசிரியரால் வகுப்பறைச் செயற்பாடுகளினூடாக முன்னெடுக்கப்படுகின்றது. கலைத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவோராக மாணவர்கள் உள்ளனர். இந்த நிலையில் பொருத்தமான அறிவு திறன் மனப்பாங்குகளைப், பயிற்சிகளை மாணவர்களிடத்தில் பெற்றுக்கொடுப்பதில், ஆசிரியரது பங்குபற்றுதலானது மிகவும் அவசியமானதாகும். அத்தகைய பங்குபற்றுதலானது, வினைத்திறனுடையதாகவும், வெற்றியடையக் கூடியதாகவும் விளங்க வேண்டுமானால் ஆசிரியரது பாடத்திட்டமிடலானது மிகவும் அவசியமானதாகும்.

### திட்டமிட்ட செயன்முறை

ஆசிரியரது திட்டமிடற்செயன்முறையானது, மாணவன் அடைய வேண்டும் என எதிர்பார்க்கின்ற தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களைக் கருத்திற்கொண்டதாகவும் அமைய வேண்டியது அவசியமானதாகும். அத்தகைய நிலையிலேயே ஆசிரியரது செயற்பாடுகளில் மாணவர்கள் நம்பிக்கை கொள்ள முடிகின்றது. கற்கின்ற விடயத்தை அறிமுகம் செய்தல், விளக்குதல், மேற்கோள் காட்டுதல் செய்து காட்டுதல், மாணவனை செயலில் ஈடுபடத் தூண்டுதல், என்றவாறாக ஆசிரியரது கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் நகர்ந்து செல்ல வேண்டுமானால் ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலை சிறப்பான முறையில் மேற்கொள்ளுதல் அவசியமானதாகும்.

மாணவர்களது இயல்புக்கும் பாடப் பொருளுக்கும் பொருத்தமான வகையில் திறனைத் தெரிந்தெடுத்து ஆசிரியர் பிரயோகிப்பதற்கு பாடத்தைத் திட்டமிடல் அவசியமானதாகும். இதன் மூலம் மாணவர்களுக்குப் பொருத்தமான கற்றல் அனுபவங்களை அந்த ஆசிரியர் பெற்றுக் கொடுக்க முடியும். இத்தகைய நிலையில் மாணவனின் தேடலுக்குச் சந்தர்ப்பமளிக்கப்படும் என்பதோடு தரவிருத்தி உள்ளீடுகளும் தாராளமாகப் பயன்படுத்தப்படும்.

இதுதவிர, மாணவர்களது சமூகத் தொழிற்பாட்டுக்கு ஊக்குவித்தலும் மாணவர்களது சமூகத்திறன், தீர்மானம் எடுக்கும் திறன், ஆளுமைத்திறன் பிரச்சினை தீர்க்கும் திறன் என்பனவும் வளர்க்கப்படும்.


பாடத்திட்டமிடலைச் சிறப்பான முறையில் மேற்கொள்ள விளையும்போது ஆசிரியரோ திட்டமிடலாளராக, வடிவமைப்பாளராக, நெறிப்படுத்துநராக, மதிப்பீட்டாளராக தனது நடிபங்குகளை ஆற்ற முடியும் என்பதோடு, சிறந்த அடைவு நிலையையும் வகுப்பறையில் பெற்றுக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டலாம் வாங்க



## விலங்குகள் எழுப்பும் ஒலிகள்

1. புலி-உறுமும்
2. பன்றி-உறுமும்
3. பல்லி-சொல்லும்
4. மயில் அகவும்
5. மாடு - கத்தும்
6. யானை பிளிறும்
7. வண்டு - இரையும்
8. குதிரை - கனைக்கும்
9. பாம்பு சீறும்
10.சிங்கம் - கர்ச்சிக்கும்
11. தவளை - கத்தும்
12. தேனீ - ரீங்காரம் செய்யும்
13. நரி - ஊளையிடும்
14. நாய் - குரைக்கும்
15. குயில் - கூவும்
16. குருவி - கீச்சிடும்
17.கோழி - கொக்கரிக்கும்
18. சேவல் - கூவும்
19காகம் - கரையும்
20. அணில் - கீச்சிடும்
21. ஆடு - கத்தும்
21. ஆந்தை - அலறும்

சு.நிலா.



## வரலாற்றில் இன்றைய தினம்

1718 - ஸ்பெயின் மீது பிரித்தானியா போர்ப் பிரகடனம்.
1777 - ஐக்கிய அமெரிக்காவை பிரான்ஸ் முறையாக அங்கீகரிப்பு.
1907- பூட்டானின் முதல் அரசராக யூஜின் வாங்சூக் முடிசூடிக்கொண்டார்.
1928 - பிரித்தானிய பொலிஸ் அதிகாரி ஜேம்ஸ் சோண்டேர்ஸ்யை கொலைசெய்த குற்றச்சாட்டில் இந்தியப் புரட்சி வீரர்களான பகவத் சிங், சுக்தேவ் தபார் மற்றும் சிவராம் ராஜ்குரு பொலிஸாரால் கைது.
1935 - டக்ளஸ் டிசி - 3 விமானம் முதற்பறப்பு.
1938 - அணுசக்தியின் தொழில்நுட்ப அடிப்படையான பாரமூலகம் யுரேனியத்திலிருந்து அணுப் பிளப்பை - ஓட்டோஹறான் கண்டுபிடிப்பு.
1941 - உலக மகாயுத்தம் - 02 யப்பான் படைகள் வடபோர்னிலோவில் தரையிறக்கம்.
1947 - போயிங் பி - 47 குண்டு வீச்சு ஜெற் விமானம் முதற்பறப்பு.
1960 - மி யூனிச் சி - 131 விமானம் விபத்து; 20 பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் உட்பட 32 பேர் சாவு.
1961 - பிரேஸில் நைற்றோயி சேர்க்கஸில் தீ விபத்து. நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை ஏற்பட்ட தீ விபத்தில் 500க்கும் மேற்பட்டோர் சாவு.
1967 - ஆஸ்திரேலியா பிரதமர் ஹரோல்ட் ஹோல்ற் போட்சீ விக்ரோறியாவில் நீச்சலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை காணாமற்போனார், நீரில் மூழ்கியிருக்கலாமென ஊகிப்பு.
1969 - ஆயுதப் பரிகரணம் எஸ்.ஏ.எல்.ரி. முதலாவது கூட்டம் ஆரம்பம்.
1973 - விமான நிலையத்தில் பலஸ்தீன தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 30 பயணிகள் சாவு.
1981 - இத்தாலியில் இடது சாரி படைத்தரப்பினரான றெட்பிறிகேட்டினரால் அமெரிக்க பிரிகேடியர் ஜெனரல் ஜேம்ஸ் ட.டோஸியர் கடத்தப்பட்டார்.
2005 - பூட்டான் அரச பதவியிலிருந்து ஜிக்மி சிங்கீய் வாங்சுக் விலகல்.
2009 - எம்.வி. டான்னி எப் 11 கப்பல் லெபனான் கரையோரத்தில் மூழ்கி 44 பேரும் 28,000 வரையான மிருகங்களும் உயிரிழப்பு.
2010 - துனிசியன் புரட்சி மற்றும் அராபிய வசந்தத்துக்கான உந்துதலான செயற்பாடாக - மொகமட் பௌசிசி தனக்குத்தானே தீ மூட்டினார்.
2013 - துருக்கியில் துஷ்பிரயோகத்துக்கு எதிரான நடவடிக்கை ஆரம்பம்.
2014 - 55 வருடங்களின் பின்னர் அமெரிக்கா - கியூபா தூதரக உறவு ஆரம்பம்.

# தந்திரமான நரியும், வயதான சிங்கமும்

ஓர் அடர்ந்த காட்டில் வயதான சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது.

முதுமையின் காரணமாக அந்த சிங்கத்தால் வேகமாக ஓடவும், வேட்டையாடவும் முடியவில்லை. அதனால் சாப்பிட எதுவும் கிடைக்காமல் அந்த சிங்கம் மிகவும் கஷ்டப்பட்டது.

சிங்கமும் எத்தனை நாள்களுக்குத்தான் இப்படியே இருப்பது? சாப்பிடுவதற்கு ஏதாவது செய்தாக வேண்டுமே?, என்று யோசித்தது.


அப்போது அந்தப் பாதையின் வழியே குள்ள நரி ஒன்று வந்துகொண்டிருந்தது. இனிமேல் நீதான் எனது மந்திரி. உன்னைக் கேட்டுத் தான் எதையும் செய்வேன் என்று சிங்கம் அந்தக் குள்ள நரியிடம் கூறியது.நரியால் சிங்கத்தின் பேச்சை நம்ப முடியவில்லை.

உனக்கே தெரியும், இந்தக் காட்டுக்கே நான்தான் ராஜா. அதனால், எனக்குத் தேவையான உணவை நீ எப்படியாவது ஏற்பாடு செய்ய வேண்டும். அது தான் உன் முதல் வேலை, என்றது சிங்கம்.

நரியும் பயந்து போய் நின்றது.

சிங்கமும் அந்த நரியை விடவில்லை. தினமும் ஒரு விலங்கை எனக்காகக் கூப்பிட்டு வர வேண்டும். சிங்கம் நரியிடம் மீண்டும் கூறியது.

சிங்கத்துக்காக உணவு தேடும் வேலையில் இறங்கியது நரி. அப்போது ஒரு கழுதை எதிரில் வந்தது. கழுதையிடம்



போய், நண்பா, எங்கே ரொம்ப நாளாய் ஆளையே காணோம்? என்றது நரி.

இங்கேயேதானே நான் சுத்திக் கொண்டு இருக்கிறேன்? என்ன விடயம்? என்று கழுதை கேட்டது.

நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரன். எங்கள் காட்டின் சிங்க ராஜா உன்னை முதல் மந்திரியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்றது நரி.

ஐயோ எனக்கு சிங்கத்தைப் பார்த்தாலே பயம். அவர் ஒரே அடியில் என்னைக் கொன்று சாப்பிட்டு விடுவாரே. அவர் எதுக்காக என்னை முதல் மந்திரியாக தேர்வு செய்ய வேண்டும்? ஆளை விடு என்றது கழுதை. நரியோ விடுவதாக இல்லை.

ஒருவாறாக நரியும் கழுதையும் சிங்கத்தின் இருப்பிடத்தை அடைந்தன. சிங்கம் கழுதையைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, வா நண்பா. இன்று முதல்நீதான்என்னுடையமுதல் மந்திரி என்று கூறியது.

கழுதையும் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தது. வெட்கத்துடன் தலை குனிந்தபடி சிங்கத்துக்குப் அருகில் வந்து நின்றது. சிங்கம் அதன் தலையில் ஓங்கி ஓர்அடி அடித்தது. கழுதை அந்த நிமிடமே உயிரை விட்டது.

சிங்கம் குளிக்கப்போய் விட்டது. நரி கழுதையின் தலையைக் கிழித்து, மூளையை எடுத்துச் சாப்பிட்டது.

குளித்துவிட்டு வந்த சிங்கம் கழுதையின் உடல் முன்பு போல் இல்லை என்று கண்டு பிடித்தது. கழுதையின் தலை ஏன் கிழிந்து உள்ளது? உள்ளே ஒன்றுமே இல்லையே? என்று சிங்கம் கேட்டது.

கழுதைகளுக்குஎல்லாம்மூளையே கிடையாது என்று நரி சிங்கத்திடம் கூறியது.கழுதைக்கு மூளை இருந்திருந்தால் என்னோடு இங்கு வந்திருக்குமா? என்று நரி சிங்கத்திடம் மீண் டும் கேட்டது.

நரி சொல்வது சரிதான் என்று சிங்கமும் அமைதியாக கழுதையின் உடலைப் புசித்தது.

*பு.சந்தோஸ், தரம் 2*
*மல்லாகம் விசாலாட்சி வித்தி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 DEC 2015



# முயற்சியுடன் செயற்பட்டால் வெல்ல முடியும்

கி.சஞ்சீவன்

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் எனும் வேதவாக்கை தலையாகக் கொண்டு தளராத ஊக்கமும் முயற்சியும் கொண்டு செயற்படுவது மனிதன் கையில்தான் உள்ளது. முயற்சியுடைய ஒருவன் எப்போதும் முன்னேற்றமடைவான். முயற்சி அற்றவன் பின்னடைவு அடைவான். எத்தனை கஷ்டம் இருந்தாலும் அதையும் தாண்டி துவண்டு போகாமல் வெற்றி பெறும் எண்ணம் உங்கள் மனதில் இருந்தால், முயற்சித்தால் சிறப்பாக வெல்லலாம்.

முயற்சிக்கு உதாரணமாக மின்குமிழைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசனையும் எடுத்துக்கூறலாம். 999 தடவை முயன்றும் துவண்டு விடாமல் அவர் 1000 ஆவது தடவை மின் குமிழைக் கண்டுபிடித்து அனைவர் வீட்டிலும் ஒளியேற்றினார். சிந்தித்துச் செயற்பட்டு சிறப்பான வாழ்க்கையைத் தொடர்வதற்கு முயற்சி அவசியமாகும். முன்னேற்ற மான வாழ்வின் முதற்படி முயற்சியே ஆகும். இளைஞர் சமுதாயம் நடத்தைப் பிறழ்வுக்கு அடிமையாகும் தற்காலத்தில், எவன் ஒருவன் துணிந்து சாதிக்க எண்ணுகிறானோ அவனே வாழ்க்கையின் வெற்றியாளன். முயற்சி செய்வதற்கு துணிவுடமை, தளராத மனம், அஞ்சாமை எனும் மூன்றும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இன்பமும் துன்பமும் நாணயத்தின் இருபக்கங்கள் போன்று அமைந்துள்ளன. உங்கள் நிலையை எண்ணிப் பார்த்துப் பின் அதற்குத் தகுந்தவாறு முயற்சி எடுத்தால் இவ்வுலகில் சாதிக்க முடியாத சாதனை எதுவும் இல்லை. நாளை செய்வோம் என எதையும் தள்ளி வைத்து விடாதீர்கள். நேரமும் நாளும் என்றும் ஒரு மனிதனுக்காக தரித்து நிற்பது இல்லை. கடின உழைப்பும் முயற்சியும் தான் முன்னேற்ற வாழ்வை உங்களுக்குக் காட்டும். உங்கள் மனதில் எது நல்லது, எது கெட்டது என்பவற்றைச் சிந்தித்து நல்லதை நல்லெண்ணத்துடன் செய்யும் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள். பிறர் உங்களைச் சோம்பேறி என்று சொல்ல இடமளிக் காமல் எந்தநேரமும் உங்கள் வேலையில் கவனமாக இருக்க வேண்டும். உன் கவனம், சிந்தையை வேறுபக்கம் திசை திருப்பி வைத்தால், அதனால் எந்தவித பிரயோசனமும் இல்லை.

> 999 தடவை முயன்றும் துவண்டு விடாமல் அவர் 1000 ஆவது தடவை மின்குமிழைக் கண்டுபிடித்து அனைவர் வீட்டிலும் ஒளியேற்றினார்.

சாதிக்க வேண்டும் எனும் ஆற்றலுள்ள ஒருவனை சமுதாயம் ஒருபோதும் புறம் ஒதுக்காது. மன அமைதியுடன் சிந்தனை ஆற்றலுடனும், மனோ பலம், பேச்சில் உண்மைத் தன்மை மற்றும் முயற்சி ஆகியவற்றை உங்கள் பக்கம் வைத்திருந்தால், தோல்வி உங்கள் பக்கம் இருக்காது. முயற்சியை மேற்கொண்டு இலட்சியத்தை கனவிலும் நனவிலும் நிலை நிறுத்தி வாழ்வில் சிறப்படைய இளைஞர் சமுதாயம் முன்வர வேண்டும்.

ஆவரங்கால், நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

## புதுமைப் பெண்ணாக மாறி விடு

ஆண்டவன் உனக்கீந்த பொக்கிசமே
பெண்மை எனும் மென்மை என்பேன்
உந்தனது ஆளுமையை வளர்த்திடுதல்
அனுதினமும் உன் கடமையே நீயறிவாய்
இடர்கள் பல எதிர் வந்த போதிலும்
போராடி வெல்வேனென்ற
உறுதியதை உன் மனதில்
கொண்டுமே செயற்படுவாய்
உன் வெற்றி கை கிட்டும்
வானத்தின் உயரத்தில்
வாழ்வதனை உயர்த்திடவே
ஓய்வின்றிப் போராடு - உன்
வாழ்வில் உயர்வு வரும்
மற்றவரின் பழிச் சொல்லைப் புறந்தள்ளி
பெற்றோரின் உற்றோரின் பேச்சதற்கு
மதிப்புக் கொடு
கற்பித்த ஆசானின் கனவு தனை
நனவாக்கு
காத்திருப்பை விலக்கி
கடமைதனில் கவனம் வை
அல்லும் பகலும் அயராது
உழைத்திட்டால்
நல்ல பயன் கிட்டுமென்று
நம்பிடுவாய் எந்நாளும்
நல்லோரின் அறிவுரை கேள்
நல்லவற்றைத் தேர்ந்தெடுப்பாய்
சோதனையை சாதனையாக்க
சாதுரியம் அவசியம் காண்
சிப்பிக்குள் முத்தாக உனக்குள்
ஒளிந்திருக்கும் திறமைதனை
வெளிக்காட்டி வெற்றி எனும்
கனியதனைப் பறித்திடுவாய்!
பாரதியின் புதுமைப்பெண் நீ;
போராடு வெற்றி காண்!

ஏழாலையூர் நிலா

## அரசு மீதான அழுத்தம் தொடர வேண்டும்

ஜனவரி 8 ஆட்சிமாற்றத்தின் பின்னர் இலங்கையை நோக்கிப் படையெடுக்கும் அமெரிக்க அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்கின்றமையானது, இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவமிக்க ஸ்தானத்தில் அமைந்துள்ள இந்த நாடு புவிசார் அரசியலில் கொண்டுள்ள வகிபாகத்தை மீண்டும் பறைசாற்றிநிற்கின்றது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் நிலைப் பதவிகளிலொன்றான அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலைச் செயலாளர் பதவியைப் பொறுப்பேற்கவுள்ளவரும், தற்போதைய நிலையில் இராஜாங்கத் திணைக்களத்தின் ஆலோசகராகப் பணியாற்றிவருகின்றவருமான தோமஸ் ஷனோன் மூன்றுநாள் பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி கடந்த மே மாதத்திலும், ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் கடந்த நவம்பர் மாதத்திலும், பயணம் செய்த பின்னர் இலங்கைக்கு வந்த ஒபாமா நிர்வாகத்தின் உயர்நிலை அதிகாரி தோமஸ் ஷனோன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷனோன் இலங்கைக்கு பயணம் செய்துள்ள நிலையில், கடந்த மாதத்தில் இடம்பெற்ற இளைஞர்களுடனான கலந்துரையாடலின்போது தமது இலங்கைப் பயணத்தின் நோக்கம் குறித்து சமந்தா பவர் கூறிய விடயம் மனக்கண்முன் வருகின்றது.

முழு உலகிலும் இலங்கையைப்போன்று குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் ஏற்பட்ட நாட்டை என்னால் நினைத்துப்பார்க்க முடியாது. நான் இங்கு வந்து அதனை அனுபவிக்க விரும்பினேன். திரும்பிச் சென்றவுடன் ஜனாதிபதி ஒபாமாவுடன் உரையாடி இலங்கையின் பயணத்துக்கு அமெரிக்காவால் மேலும் என்ன வகையில் உதவமுடியும் என்பது குறித்த எண்ணங் களைப் பகிர்ந்துகொள்ளமுடியும்- எனக் குறிப்பிட்டிருந்தார்.

அண்மைக்கால வரலாற்றில் கியூபா, பர்மா போன்ற நாடுகளை விடுத்து, உலக அளவில் அமெரிக்காவின் இராஜதந்திர செயற்பாடுகள் கடுமையான விமர்சனங்களைச் சந்தித்துவருகின்றநிலையில், அமெரிக்க இராஜதந்திரத்தின் வெற்றி அடையாளமாகச் சொலக்கூடிய நாடாக தற்போதைய நிலையில் இலங்கையே திகழ்கின்றது.

ஜனநாயக ரீதியில் பெற்றுக்கொண்ட அந்த வெற்றியைத் தக்கவைக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு உள்ள நிலையிலேயே, முக்கிய இராஜதந்திரியான தோமஸ் ஷனோனை அமெரிக்கா இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

தோமஸ் ஷனோன் இராஜாங்கச் செயலரின் தலைமை அதிகாரியாகவும், அவருக்குச் சிறப்பு ஆலோசனை வழங்கும் ஆலோசகராகவும் பதவி வகிக்கிறார்.

வெளிவிவகாரக் கொள்கை சார்ந்த பிரதான பிரச்சினைகள் தொடர்பான ஆலோசனைகளை இவரே வழங்கிவருகிறார்.

அத்துடன், அனைத்துலக மட்டத்திலான சிறப்பு இணக்கப் பேச்சுகள், கலந்துரையாடல்கள் மற்றும் காலத்துக்குக் காலம் இராஜாங்கச் செயலரின் சார்பில் சிறப்புப் பணிகளையும் ஆற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.




இலங்கை அரசு வாக்குறுதியளித்த ஜனநாயக மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் முன்செல்வதை உறுதிப்படுத்துவது ஷனோனின் பயணத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. கடந்த ஜனவரியில் உறுதியளித்த விடயங்களில் சிலவற்றை நல்லாட்சி அரசாங்கம் நிறைவேற்றியிருந்தாலும் ஜனநாயகத்தை சோதிக்கின்ற பல முக்கிய விடயங்கள் இன்னமும் நிறைவேற்றப்படவேண்டியுள்ளன.

பொறுப்புக்கூறல் விடயத்தில் நாம் இன்னமும் ஆரம்பப்புள்ளியிலேயே இருந்துகொண்டிருக்கின்றோம். இதில் முன்னேற்றம் ஏற்பட்டு காத்திரமான நகர்வுகள் மேற்கொள்ளப்படவேண்டுமாக இருந்தால், அதற்கு சர்வதேசத்தின் தொடர்ச்சியான அழுத்தம் மிக மிக அவசியமாகும். இலங்கையில் சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக சாதிக்கப்பட்ட பல விடயங்கள் உள்ளன. அதிலே மெனிக்பாமில் இருந்த மக்களை அந்த முட்கம்பி வேலி சூழ்ந்த முகாம்களில் இருந்து விடுவிப்பதிலும், வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தியதிலும் சர்வதேசத்தின் அழுத்தம் முக்கியமானது.

இலங்கை தொடர்பில் கடும்போக்கைக் கைவிட்டு, மென் போக்கான கொள்கையை அமெரிக்கா முன்னெடுப்பது, அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் மீறுவதற்கு வாய்ப்பாகிவிடும் என்ற அச்சநிலை தமிழ் பேசும் மக்கள் தரப்பில் காணப்படுகின்றது. அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரைத் தாக்குவதற்கு மேற்கொண்ட முயற்சியானது மீண்டும் அளுத்கமவை நினைவுபடுத்துவதாக அமைந்தது. பொறுப்புக்கூறல் விடயத்தில் அழுத்தத்தைக் குறைத்தால் பொறுப்புக்கூறல் விடயத்தில் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கி நிற்கும் முன்னைய ஆட்சியாளரும் அடிவருடிகளும் மீண்டும் மேலோங்கி தமது வலிமையைக் காட்டுவதற்கு சந்தர்ப்பமாகிவிடக்கூடும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேயைக் கைவிடும் தமிழ் சினிமா



ஒரு 'லவ்' படம் வந்து 'ஹிட்' அடித்தால், அந்தப் பாணியிலேயே கதையைக் கொண்டு வருபவர்கள் தான் தமிழ் சினிமாவில் அதிகம். அந்த வகையில் பேய் சீஸன் தமிழ் சினிமாவுக்கு அலுத்து விட்டது.

பேய்ப் படம் என்று அறிவித்தாலே அது ஓடாது எனும் அளவுக்கு வரிசையாக பேய்ப் படங்களாகக் குவிந்து ரசிகர்களைச் சலிப்படைய வைத்துவிட்டன. தமிழ் சினிமாக்காரர்களும் இப்போது பேயை விட்டுவிட்டு குடும்பத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

பாபநாசம் படம் வருவதற்கு முன்பு அந்தப் படத்துக்கு பெரிய வரவேற்பு இல்லை. ஆனால் குடும்பக்கதை பிடித்துப் போகவே பாபநாசம் 'ஹிட்' ஆனது. அதனைத் தொடர்ந்து அஜித் நடிப்பில் வெளியான வேதாளமும் தங்கைப் பாசத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த படம். அதுவும் 'ஹிட்' ஆக, இப்போது உருவாகும் தமிழ்ப் படங்களில் பெரும் பான்மையானவை குடும்பப் படங்கள் தான்.

பீட்சா, ஜிகர்தண்டா என வெரைட்டி காட்டிய கார்த்திக் சுப்புராஜ் இப்போது இயக்கிக் கொண்டிருக்கும் இறைவி முழுக்க முழுக்க சென்ரிமென்ட் படம். இரண்டு குடும்பங்களுக்கு இடையேயான நெருக்கம், பகையை விளக்கும் படம். தனுஷ் நடிப்பில் உருவாகி இருக்கும் 'தங்க மகன்' அம்மா சென்ரிமென்ட் தூக்கலான படம்.

குடும்பப்படம் 'ஹிட்' அடிப்பதாலும், கலெக்‌ஷனில் அள்ளுவதாலும் பெரிய ஹீரோக்களும் அதற்கு முக்கியத்துவம் தரும் கதைகளையே கேட்க ஆரம்பித்துள்ளனர்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | 8 | 6 | | | 5 | |
| | 8 | | | | | 7 | | |
| | | | | 1 | 5 | 9 | | |
| | 9 | | 6 | | | | | |
| 2 | | | | | | | | 8 |
| | | | | | 1 | | 6 | |
| | | 6 | 3 | 9 | | | | |
| | | 8 | | | | | 3 | |
| | 3 | | | 4 | 8 | | 2 | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 2 | 3 | 6 | 7 | 4 | 1 | 8 |
| 4 | 8 | 3 | 1 | 5 | 2 | 7 | 6 | 9 |
| 6 | 7 | 1 | 4 | 9 | 8 | 2 | 3 | 5 |
| 7 | 1 | 8 | 9 | 4 | 5 | 6 | 2 | 3 |
| 9 | 3 | 4 | 2 | 1 | 6 | 8 | 5 | 7 |
| 2 | 6 | 5 | 8 | 7 | 3 | 1 | 9 | 4 |
| 1 | 2 | 9 | 5 | 8 | 4 | 3 | 7 | 6 |
| 3 | 4 | 7 | 6 | 2 | 9 | 5 | 8 | 1 |
| 8 | 5 | 6 | 7 | 3 | 1 | 9 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும்மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** முக்கியமான செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் மூலதனம் செய்வீர்கள். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகும். புத்திரர்கள் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவார்கள்.

**இடபம்:** மாறுபட்ட நிகழ்வு, மனதில் சஞ்சலம் தரலாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான லாபம் இருக்கும். பண வரவை விடச் செலவு அதிகரிக்கும். மின்சார உபகரணங்களைக் கவனமாகப் பயன்படுத்தவும்.

**மிதுனம்:** வீண் பேச்சுப் பேசுபவரிடம் இருந்து விலகவும். கூடுதலாக உழைத்தாலும், தொழில், வியாபாரத்தில், சுமாரான இலக்கையே அடைய முடியும். பணவரவு ஓரளவு இருக்கும். குடும்பத்தில் சிறுபிரச்சினைகள் வரலாம்.

**கடகம்:** எவரிடமும் விவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரம், சுமாராக இருக்கும். மிதமான பணவரவு கிடைக்கும். ஆடம்பர எண்ணத்தால் அதிக செலவாகும். மாணவர்கள் சிறப்பாகப் படிப்பர்.

**சிங்கம்:** செயல்களில் திறமையும் நேர்த்தியும் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி அதிகரிக்கும். அதிர்ஷ்டமான வகையில் பணவரவு கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் ஆடை ஆபரணம் வாங்குவர்.

**கன்னி:** இஷ்ட தெய்வத்தின் அருள் துணை நிற்கும். பணியாளர்களுக்கு, வேலைப்பளு கூடினாலும் வெற்றிகரமாகமுடிந்துவிடும். தொழில், வியாபாரத்தில், வியத்தகு வளர்ச்சி உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு, மனதுக்கு நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில், வரும் இடையூறைச் சரி செய்வீர்கள். சேமிப்புப் பணத்தைச் செலவுக்கு எடுக்க வேண்டி வரும். போக்குவரத்தில் கவனமாக இருக்கவும்.

**விருச்சிகம்:** பதட்டமான சூழ்நிலையால், நல்லவரையும் தவறாகக் கருதும் நிலை வரலாம். தொழில், வியாபாரத்தில், தேங்கிய பணிகளை விரைவு படுத்துவீர்கள். புதிய இடங்களில் செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** சவால்களை வென்று, சாதனை புரிவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். மற்றவர்களுக்கு உதவுவீர்கள்.

**மகரம்:** உறவினர்களிடம் இதமாகப் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், அதிக உழைப்பால் பணவரவு சீராகும். உடல் நிலையில் மிகுந்த கவனம் வேண்டும். மாணவர்களுக்குப் படிப்பில் தேர்ச்சி விகிதம் அதிகரிக்கும்.

**கும்பம்:** திறமையுடன் செயற்பட்டு, பணியை எளிதாக்குவீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு, எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் பெறும். பாக்கிப்பணம் வசூலாகும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**மீனம்:** உங்களின் யதார்த்தமான பேச்சு, சிலர் மனதை கஷ்டப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிப்பால், குறைந்த அளவே பணவரவு கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும்.







## பேஸ் புக்கில் பிடித்தவை...

உண்மையான போலி @Original_FakeID · Dec 1

என்ன தான் தமிழ் தமிழ் என்று கத்தினாலும் நம்ம பயளுங்க ATM போனா ஆங்கிலம் தான் அமுக்கு றானுங்க

@Anonu212 · Nov 30

அம்மா அல்லது அப்பாவுடன் பள்ளிக்கூடம் போகும் வழியில், தனக்குத் தேவையானதைக் கேட்டு வாங்கிக் கொள்ளும் குழந்தை ஒரு குட்டி அரசியல்வாதி.

## சிரிக்கலாம் வாங்க

'பஸ் கோல்ற்'டில், நின்றிருந்த ஒரு பெண்ணிடம் ஒரு ஆண், "நீங்கள் போட்டிருக்கும் "பெர்பியூம்" அதிக வாசனையாக உள்ளது. "பெர்பியூம்" பெயர் சொல்ல முடியுமா?" எனக் கேட்டான்.

"ஏன்?" என்றாள் அவள்.

"இல்லை எனது தங்கைக்குப் பிறந்தநாள் பரிசாக வாங்கிக் கொடுப்பேன். அதற்குத் தான் கேட்கிறேன்" என்றான் அவன்.

அதற்கு அந்தப் பெண் அமைதியாகச் சொன்னாள்,

"நீ உனது தங்கைக்கு இந்த "பெர்பியூம்" வாங்கிக் கொடுத்தால், உனது தங்கையிடமும் சில ஆண்கள் இப்படிக் கேட்பார்கள். பரவாயில்லையா?"

அவன் வந்த பக்கமே திரும்பிப் போய் விட்டான்.

படித்ததில் பிடித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது புதுசு



### பின்னல் கைப்பை

பெண்களுக்கான கைப்பைகள் காலத்துக்குக் காலம் மாற்றம் பெறுகின்றன. தற்போது பின்னல் வேலைப் பாட்டு கைப்பைகள் நாகரிகமாகும். அளவில் பெரிய, வர்ண மயமான இவை, பெண்களின் மனதை வெகுவாய் கவருகின்றன. அலுவலகம் செல்லும் போதும், சாதாரணமாக வெளியில் செல்லும் போதும் இதைப் பயன்படுத்துவது உகந்தது. இது தற்போது 2,000 ரூபா முதல் 2,200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

### நாளை

மார்கழி -02
வெள்ளிக்கிழமை 18.12.2015
திதி: ஸப்தமி மு.ப.09.04
நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ.10.09
ராகுகாலம்: 10.53-12.23 வரை
சுபநேரம்: 06.23- 07.53 வரை

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 700 | 500 |
| நண்டு | 250 | 400 | 300 | 300 | 200 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 700 | - |
| பாரை | 450 | 500 | - | 450 | 500 | 400 |
| சுறா | 500 | 500 | - | 550 | 600 | - |
| சீலா | 300 | 400 | 400 | 350 | 400 | 400 |
| விளை | 650 | 400 | 400 | 400 | 400 | 400 |
| முரல் | 300 | 350 | 300 | 350 | 300 | - |
| கும்பிளா | 400 | 350 | 300 | 300 | 250 | 250 |
| கிழாக்கன் | 450 | 800 | 300 | - | - | - |
| ஒரா | 350 | 400 | 300 | - | - | - |
| திரளி | 220 | 250 | 100 | 100 | 200 | 300 |
| நகரை | 150 | 250 | 100 | 150 | - | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 100 | 100 | - |
| ஒட்டி | 250 | 200 | 200 | - | 300 | - |
| திருக்கை | 150 | 300 | - | 200 | 200 | 100 |
| பாலை | 400 | 300 | - | 250 | 250 | - |
| வாளை | 100 | 150 | 200 | 400 | 100 | 200 |
| கொய் | 100 | 100 | 80 | 400 | 50 | - |
| மதனம் | 150 | 200 | 300 | 250 | 250 | 200 |

## சமைப்போம் வாங்க



## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 140 | 60 | 120 | 160 | 100 | 140 | 120 |
| கத்தரி | 150 | 140 | 150 | 180 | 160 | 200 | 90–100 |
| கரட் | 200 | 150 | 280–300 | 240 | 200–300 | 400 | 270 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40–50 | 40 | 35 |
| பயிற்றை | 250 | 180 | 260–360 | 300 | 240–270 | 280 | 250 |
| பாகல் | 200 | 250 | 300 | 80 | 200 | – | 350 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 80 | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 100 | 140 | 80 | 120 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 140 - | 100 | 50 | 120 | 200 | 120 |
| பூசணி | 40 | 50 | 50 | 200 | 40 | 80 | 40 |
| தக்காளி | 200 | 200 | 200 | 250 | 220 | 240 | 220 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 60 | 80 | 40–50 |
| கீரை | 40 | – | 50 | 40 | 40–50 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | – | 30 | 50 | 15 |
| பச்சை மிளகாய் | 700 | 600 | 800 | 700 | 800 | 1000 | 800 |
| புடோல் | 120 | 100 | 100 | 120 | 80 | 180 | 120 |
| கோவா | 100 | 150 | 80 | 140 | 160 | 200 | 170 |
| வெண்டி | 140 | 120 | 140 | 120 | 100 | 160 | 120 |
| போஞ்சி | 300 | 150 | 280 | 240 | 240 | 240 | 220 |
| லீக்ஸ் | 180 | 140 | 180 | 180 | 180 | 240 | 160 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50–60 | 40–45 | 55–60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 | 80 | 80–120 |
| நோசிக்காய் | 200 | 160 | 200 | 160 | 180 | 200 | 80 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 30 | 15 |
| கறிமிளகாய் | 300 | – | 350 | 320 | 400 | 400 | 300 |
| இராசவள்ளி | 250 | 150 | 250 | – | 160 | – | 200 |

## சின்னச் சின்னத் துணுக்குகள்

**கத்தரிக்காய் வாடாமல் இருக்க...**
கத்தரிக்காயை ஹாட்பொக்ஸில் வைத்து மூடினால் காய் வாடாமல் நன்றாகவும், நிறம் மாறாமலும் இருக்கும்.

**சோறு வெண்மையாக இருக்க...**
மழை நீரில் அரிசியை வேகவைத்தால் சோறு வெண்மையாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

**வாழைக்காய் கெடாமல் இருக்க...**
வாழைக்காயை தண்ணீரில் போட்டு வைத்திருந்தால் ஒரு வாரம் வரை கெடாமல் இருக்கும்.

**ஊறுகாய் கெடாமல் இருக்க...**
ஊறுகாய் கெடாமல் இருக்க சிறிது எண்ணெயை சூடாக்கி ஊறுகாய் மேல் ஊற்ற வேண்டும். பிறகு பாருங்கள் ஊறுகாய் கெடாமல் நீண்ட நாள்களுக்கு இருக்கும்.

**பாகற்காயின் கசப்பைப் போக்க...**
பாகற்காயில் இருக்கும் கசப்பை போக்க வேண்டுமானால் காயுடன் உப்புச் சேர்த்து வேகவைத்து நீரை வடிகட்டிய பின்னர் பொரியல் செய்தால் கசப்பு நீங்கிவிடும்.

**பருப்பு சீக்கிரம் வேக...**
பருப்புடன் சிறிது எண்ணெய்யும் சிறிது பெருங்காயத் தூளையும் சேர்த்து வேகவிட்டால் பருப்பு சீக்கிரம் வெந்துவிடும்.

**ரசம் சுவையாக இருக்க...**
வீட்டில் ரசம் வைத்த பிறகு அதில் அரைக் கரண்டி சர்க்கரை கலந்தால் ரசம் சுவையாக இருக்கும்.

**பாத்திரங்களில் வீசும் துர்நாற்றத்தை நீக்க...**
அசைவம் சமைத்த பிறகு பாத்திரங்களில் வீசும் துர்நாற்றத்தை நீக்க நுரையுடன் (சோப்பு நுரை) கூடிய கிளீனிங் பவுடரால் தேய்த்த பின்னர் பாத்திரங்களை வெயிலில் காய வைத்தால் நாற்றம் நீங்கிவிடும்.

## பீட்ரூட் போண்டா

**தேவையானவை:**
பீட்ரூட் - 1 கப்
துவரம் பருப்பு - 1 கப்
தேங்காய்த் துருவல் - அரை கப்
மிளகாய் - 4
இஞ்சி - 1 துண்டு
சோம்பு - 1 கரண்டி
அரிசி மாவு - 1 கரண்டி
உப்பு, எண்ணெய், கறிவேப்பிலை - தேவைக்கு ஏற்றவாறு.

**செய்முறை:**
பீட்ரூட், பருப்பு, இஞ்சி உப்பு, காரம் ஆகியவற்றை கரகரப்பாக அரைக்கவும். மாவில் தேங்காய்த் துருவல், அரிசி மா, சோம்பு, கறிவேப்பிலை கலந்து உருட்டி போண்டா போல் செய்து எண்ணெயில் பொரிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## தன்னியக்கக் கார் தயாரிப்பில் சம்சுங்

கூகுள் நிறுவனம் உட்பட சில முன்னணி கார் வடிவமைப்பு நிறுவனங்கள் தானியங்கிக் கார்களை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன. அந்த முயற்சி ஏறத்தாழ இறுதிக் கட்டத்தையும் எட்டி விட்டது என்றும் கூறப்படுகின்றது.

இந்த நிறுவனங்களின் கார்கள் தற்போது பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுவரும் நிலையில், முன்னணி இலத்திரனியல் சாதன வடிவமைப்பு நிறுவனமான சம்சுங்கும் தானியங்கிக் கார்களை வடிவமைக்கும் பணியில் இறங்கவுள்ளது.

ஆனால், சம்சுங் நிறுவனம் ஏனைய நிறுவனங்களிலும் சில படிகள் மேலே சென்று, பொழுது போக்கு அம்சங்கள், செய்மதித் தொழில்நுட்பம், தானியங்கி தொழில்நுட்பம் என்பவற்றை உள்ளடக்கியதாகவே இந்தக் காரை வடிவமைக்கவுள்ளது.

இதனை முற்றுமுழுதாக மின்கலத்தில் இயங்கும் காராக மாற்றியமைப்பதற்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## கூகுளின் அதிவேக குவாண்டம் கணினி

கூகுள் நிறுவனம் குவாண்டம் தொழில்நுட்பத்தைக் கொண்ட கணினிகளை வடிவமைக்கும் திட்டம் தொடர்பாக ஏற்கனவே தகவல் வெளியிட்டிருந்தது. நாஸா விண்வெளி ஆய்வு நிலையத்துடன் இணைந்து மேற்கொள்ளும் இத்தத் திட்டம் தொடர்பாக தற்போது மேலும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தக் கணினிகள் சாதாரண மடிக் கணினிகளை விடவும் 100 மில்லியன் மடங்கு வேகம் கூடியவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குவாண்டம் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்படும் முதலாவது கணினியும் இதுவாகும்.

இது ஒருபுறமிருக்க மைக்ரோசொப்ட் நிறுவனமும் நாம் அனைவரும் எதிர்வரும் 10 ஆண்டுகளில் குவாண்டம் கணினிகளிலேயே பணிபுரிவோம் என்று குறிப்பிட்டிருந்தமை தெரிந்ததே.

## பேஸ்புக் கைகளில் விழுமா மை ஸ்பெஸ்

பேஸ்புக் சமூக வலைத்தளம் தற்போது அசைக்க முடியாத இடத்தை எட்டிப் பிடித்துள்ளது.

தற்போதைய நிலையில் பேஸ்புக் நிறுவனம் 300 பில்லியன் டொலர் பெறுமதியான பங்குகளையும், ஒரு பில்லியனுக்கும் அதிகமான பயனர்களைக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் பேஸ்புக் நிறுவனத்துடன் இணைந்து இயங்குவதற்கு மற்றொரு சமூக வலைத்தளமான மை ஸ்பெஸ் நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரி சார்ஸ் டீ வூல்பி, பேஸ்புக் நிறுவுநர் மார்க் சுகர்பேர்க்குடன் பேச்சு நடத்தியுள்ளார்.

ஆனால் இணைந்து பணியாற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள மார்க், வேண்டுமானால் மை ஸ்பேஸ் நிறுவனத்தை அப்படியே வாங்கத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளாராம். அதற்காக 75 மில்லியன் டொலர் செலுத்தவும் அவர் தயாராக இருக்கின்றார். இதற்கு டீ வூல்பி சம்மதிக்கவில்லையாம். அதனால் தற்போது இந்த விடயம் இழுபறி நிலையில் உள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.



## யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஏழாவது ஆண்டாகவும் வடக்கில்

இலங்கையின் வட பிராந்தியம், தொடர்ந்து 7 ஆவது ஆண்டாகவும் யாழ். சர்வதேச வர்த்தக சந்தை 2016 நிகழ்வை வரவேற்கவுள்ளது. வடக்கிலுள்ள மக்களால் மிகப் பெரிய கண்காட்சி மற்றும் நுகர்வோர் சந்தையாகக் கருதப்படுகின்ற இந்த நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் ஜனவரி 29 முதல் 31 வரை மூன்று தினங்களாக வடக்கிலுள்ள குடிமக்கள், வியாபார முயற்சியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் என அனைவரும் தவறாது, கட்டாயமாகக் கலந்துகொள்ள வேண்டிய ஒரு நிகழ்வு என்ற அந்தஸ்தை கடந்த ஆண்டுகளாக சம்பாதித்துள்ளதுடன், இம்முறை யாழ்ப்பாணத்திலுள்ள மாநகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச கண்காட்சிக் கூடங் களைக் கொண்டுள்ள இந்த வர்த்தகக் கண்காட்சியில் பல்வேறுபட்ட தேவைகள் மற்றும் தேவைகளை ஈடு செய்யும் வழிமுறைகள் கிடைக்கப்பெறவுள்ளன.

2015 ஆம் ஆண்டு இந்நிகழ்வில் 60,000 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பரந்த அளவிலான துறைகளை உள்ளடக்கிய முதலீட்டாளர்கள் மற்றும் குடிமக்கள் அதிகளவில் ஒன்று கூடும் ஒரு தனி நிகழ்வாக இது கருதப்படுகின்றது.

இயற்கைச் செழுமையும், வளங்களும் நிரம்பிய யாழ். தீபகற்பம், இத்தகைய நிகழ்வுகள் மூலமாக தனது வளர்ச்சி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள நினைக்கும், கடுமையாக முன்னேறத் துடிக்கும், மனிதவளங்களைக் கொண்ட சமூகத்தையும் கொண்டுள்ளது. இப்பிராந்தியத்தில் தற்போது இடம்பெற்றுவருகின்ற பெரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் முன்னர் இல்லாதவகையில் இப்பிராந்தியத்தில் பல்வேறு முதலீட்டு வாய்ப்புக்களுக்கு வழிகோலியுள்ளது.

> “இயற்கைச் செழுமையும், வளங்களும் நிரம்பிய யாழ். தீபகற்பம், இத்தகைய நிகழ்வுகள் மூலமாக தனது வளர்ச்சி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள நினைக்கும், கடுமையாக முன்னேறத் துடிக்கும் மனிதவளங்களைக் கொண்ட சமூகத்தையும் கொண்டுள்ளது.”

இப்பிராந்தியம் உலகிலுள்ள ஏனைய பல மிகவும் முக்கியமான வியாபார மற்றும் வாழ்க்கை முறை கேந்திர அமைவிடங்களைப் போல மாறவேண்டும் என்பதை உறுதிசெய்யும் வகையில் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகளில் பிராந்தியங்கள், வீதிகள், மின்சாரம், பாலங்கள் மற்றும் ஏனைய பல பிரதான உட்கட்டமைப்பு வசதிகள் தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

**வணிகம்**

இக்கண்காட்சியில் நிர்மாணத் தொழிற்றுறை, விருந்தோம்பல் தொழிற்றுறை, உணவு, பான வகை மற்றும் பொதியிடல் தொழிற்றுறை, வாகன தொழிற்றுறை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தொழிற்றுறை, நிதியியல் சேவைகள், ஆடைத் தொழிற்றுறை, விவசாயம், நுகர்வோர் உணவுகள் மற்றும் மேலும் பல தொழிற்றுறைகள் மூன்று தினங்களாக பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்தவுள்ளன.

கடந்த காலங்களில் இந்நிகழ்வில் பங்குபற்றியுள்ள பல கண்காட்சியாளர்கள் இதனை வடக்குக்கான நுழைவாயிலாக கண்ணுற்றுள்ளனர். வடக்கு மற்றும் தெற்குக்கு இடையில் மக்கள் மத்தியில் கூட்டு வியாபார முயற்சிகள், கூட்டிணைவுகள், பெரியளவிலான விநியோக கோரல்கள் எனப் பல்வேறு வியாபாரச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் இது வழிகோலியுள்ளது.

2016 ஆம் ஆண்டு கண்காட்சி இடம்பெறும் நிகழ்வுக்கு சமாந்தரமாக ஏனைய பல நிகழ்வுகளையும் ஏற்பாட்டாளர்கள் ஒழுங்கு செய்துள்ளனர். பிரபலமான இசைக் கலைஞர்கள் கலந்துகொள்ளும் 2 நாள் மாலைப் பொழுது இசை நிகழ்வுகள், கண்காட்சிக்கு முன்பதாக தெருக் காட்சி, சிறுவர்களுக்கான கொண்டாட்ட நிகழ்வு மற்றும் பொழுதுபோக்கு பூங்கா மற்றும் பல அம்சங்கள் இதில் அடங்கியுள்ளன.

இந் நிகழ்வின் பிரதான அனுசரணையாளராக ஐடியல் மோட்டோர்ஸ் நிறுவனம் கலந்துகொள்வதுடன், நிறுவனம் இணை அனுசரணையை வழங்குகின்றது. மொபைல் தொலைதொடர்பாடல் சேவை பங்காளராக மொபிடெல் நிறுவனமும், அச்சு ஊடகப் பங்காளராக (தமிழ்) ‘உதயன்’ மற்றும் ‘சுடர் ஒளி’ பத்திரிகைகளும், வானொலி பங்காளராக தமிழ் எப்.வானொலியும் செயற்படவுள்ளன.

யாழ். வர்த்தகக் கண்காட்சியின் விசேட அம்சங்கள்: –

- நுகர்வோர் விருப்பத் தெரிவுகள் முதல் தொழிற்றுறை உற்பத்திகள் மற்றும் சேவைகள் அடங்கலாக 300 இற்கும் மேற்பட்ட கண்காட்சிக் கூடங்கள்.
- இக்கண்காட்சிக்கு 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை தருகின்றமை.
- மாலைப்பொழுதில் நேரடி இசை நிகழ்வுகள்.
- சிறுவர்கள்விளையாடும்இடம் உட்பட பொழுதுபோக்கு பூங்கா.
- அனைத்து வகையான உணவு மற்றும் பான வகை, தெருவோர உணவுச்சாலைகளை ஒத்த உணவுக் கூடங்கள்.
- 1000 இற்கும் மேற்பட்ட உற்பத்திகளுக்கு விசேட தள்ளுபடிகள்.
- வியப்பூட்டும் பரிசுகளை வெல்வதற்கு மணித்தியாலத்துக்கு ஒரு முறை அதிர்ஷ்டக் குலுக்கல்
- விசேட தள்ளுபடிகளுடன் சேலை விற்பனை
- கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்
- விசேட உயர் கல்வி கண்காட்சிக்கூடம்
- இந்திய வியாபார தூதுக்குழுவின் வருகை.

என்பவையாகும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 993 பேர்

130 பேர் சாட்சியம் அளித்திருந்தனர். அத்தோடு புதிதாகச் சாட்சியம் அளிப்பதற்காக 45 பேர் வந்திருந்தார்கள். அவர்களில் 35 பேர் மட்டுமே சாட்சியம் வழங்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

மேலும் அடுத்த நாளான சனிக்கிழமை 266 பேர் சாட்சியத்திற்காக அழைக்கப்பட்டிருந்த நிலையில் 140 பேர் தங்களுடைய சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தனர். புதிதாக 50 பேர் சாட்சியம் அளிப்பதற்காகப் பதிவு செய்திருந்தனர். எனினும் அவர்களில் 20 பேரே சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தனர்.

மூன்றாம் நாள் அமர்வு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது 290 பேர் சட்சியங்களைப் பதிவு செய்வதற்காக அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் 168 பேரின் சாட்சியங்களே பதிவு செய்யப்பட்டன. அத்தோடு புதிதாக 57 பேர் சாட்சியம் அளிப்பதற்காக வந்திருந்தார்கள். அவர்களில் 2 பேர் மட்டுமே சாட்சியங்கள் வழங்க அனுமதிக்கப்பட்டார்கள்.

அத்துடன் நான்காவது நாள் அமர்வு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதில் 271 பேர் அழைக்கப்பட்டனர். அவர்களில் 158 பேரே தமது சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தனர். புதிதாகச் சாட்சியம் அளிப்பதற்காக 61 பேர் வருகை தந்திருந்தனர். அவர்களில் ஒருவர் மட்டுமே விசாரணைக்காக அழைக்கப்பட்டார். கடந்த திங்கட்கிழமை நான்காம் நாள் அமர்வுக்கு 219 பேர் வருகை தந்த நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் 159 பேரினுடைய சாட்சியங்களே பதிவு செய்யப்பட்டன.

மேலும் ஐந்தாவது நாள் அமர்வு நேற்று முன்தினம் சங்கானை பிரதேச செயலகர் பிரிவில் இடம்பெற்றது. இதன்போது 303 பேர் அழைக்கப்பட்டனர். அவர்களில் 173 பேரே ஆணைக்குழுவிற்கு வருகை தந்து தமது சாட்சியங்களை பதிவு செய்திருந்தனர்.

புதிதாக சாட்சியம் அளிப்பதற்காக 51பேர் வருகை தந்திருந்தனர். அவர்களில் 2பேர் மட்டுமே விசாரணைக்காக அழைக்கப்பட்டனர். மொத்தமாக ஐந்தாம் நாள் அமர்வுக்கு 224 பேர் வருகை தந்த நிலையில் 175 பேரினுடைய சாட்சியங்களே ஜனாதிபதி ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்டன.

அத்துடன் ஆணைக்குழுவின் ஆறாவது மற்றும் இறுதி நாளான நேற்று விசாரணைகள் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதில் 255 பேர் அழைக்கப்பட்டனர். அவர்களில் 148 பேரே ஆணைக்குழுவிற்கு வருகை தந்து தமது சாட்சியங்களை பதிவுசெய்திருந்தனர்

புதிதாக சாட்சியம் அளிப்பதற்காக 71பேர் வருகை தந்திருந்திருந்தனர். அவர்களில் யாரும் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. நேற்றையதினம் அமர்வுக்கு 219 பேர் வருகை தந்த நிலையில் 148 பேரினுடைய சாட்சியங்களே ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்டன.

கடந்த ஆறு நாட்களில் யாழ்.மாவட்டத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணைக்காக 1620 பேர் அழைக்கப்பட்டனர். அவர்களில் 925 பேரே சாட்சியங்களை வழங்குவதற்காக சமுகமளித்தனர்.

புதிதாக சாட்சியம் அளிப்பதற்காக 337 பேர் வருகை தந்திருந்திருந்தனர். அவர்களில் 68 பேர் மட்டுமே விசாரணைக்காக அழைக்கப்பட்டனர். மொத்தமாக அமர்வுக்கு 1262 பேர் வருகை தந்த நிலையில் 993 பேரினுடைய சாட்சியங்களே மக்ஸ்வல் பரணகம தலைமையிலான காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும்ஜனாதிபதிஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்டன.

(வ-21)

## மனித உரிமை

மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஜனநாயகத்தை நிலைநாட்டுதல், நீதியை ஊக்குவித்தல் மற்றும் சர்வதேசச் சட்டங்களை நிலை நிறுத்த உதவுதல் போன்றவற்றில் சர்வதேச சமூகத்தின் ஒரு தலைமையாக -வலுவான இலங்கையைப் பார்க்க அமெரிக்கா விரும்புகிறது.

இலங்கையிலுள்ளதொழில்முனைவோர், ஏராளமான வளங்கள், கேந்திர அமைவிடம், என்பன அந்த நிலையை அடைவதற்கு ஏதுவாக உள்ளன. இலங்கையின் கடல்சார் முக்கியத்துவம் நீங்கள் அறிந்ததே. அது நீண்ட வரலாற்றைக் கொண்டது.

பண்டைய கிரேக்கம், ரோம், அரேபியா, சீனா ஆகிய நாடுகளின் கப்பல்கள் இலங்கையின் கடல் வழியாகவே பயணித்துள்ளன. இங்குள்ள துறைமுகங்களில் தரித்துச் சென்றுள்ளன.

வரவிருக்கும் பத்தாண்டுகளில், உலகின் மையக் கவனம் பெற்றதாக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் பொருளாதாரம், அரசியல், மற்றும் பாதுகாப்பு என்பன விளங்கும். இதில் இலங்கையும் பங்களிக்குமென நாம் நம்புகிறோம்.

உலக அமைதிக்கான சவால்களைச் சமாளிக்க, இலங்கை தனது ஆயுதப்படையினரை அமைதிகாப்புப் படையினராக அனுப்பிப் பங்களித்து வருகின்றது. அமைதிப்படையில் இலங்கையின் கூடுதல் படைப்பிரிவுகளை இணைப்பதற்கு இலங்கை ஜனாதிபதி முன்வந்துள்ள கோரிக்கையை நாம் வரவேற்கிறோம்.

பிரகாசமான எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்கு இலங்கைப் படையினர் ஆக்கபூர்வமான பங்காற்ற முடியும் என்று அமெரிக்கா நம்புகிறது.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான கூட்டுத் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறது. இலங்கையின் தொடர்ச்சியான முன்னேற்றங்களைக் கொண்டு, எமது உறவுகளை வரும் ஆண்டுகளில் மேலும் விரிவுபடுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

ஆண்டின் மிகவும் குளிர் காலமான வரும் பெப்ரவரி மாதம் வொஷிங்டனில் இலங்கையும் அமெரிக்காவும் கூட்டுப் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளன. இந்தப் பேச்சுக்கள்நான்குமுக்கியவிடயங்களைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

முதலாவது ஆட்சி, அபிவிருத்தி ஒத்துழைப்பு, மக்களுக்கிடையிலான உறவுகள். இதில், நீதி மற்றும் நல்லிணக்கத்துக்காகக் கல்விப் பரிமாற்றங்கள் உள்ளிட்ட அனைத்தும் அடங்கும்.

இரண்டாவது-பொருளாதார ஒத்துழைப்பு. இதில், பெண்களை வலுவூட்டல், முதலீட்டுச்சூழல், சுத்தமான சக்தி என்பன உள்ளடங்கும்.

மூன்றாவது- பாதுகாப்பு ஒத்துழைப்பு. இதில் அமைதிகாப்பு மற்றும் பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு, தற்கால மற்றும் எதிர்கால சவால்களைச் சமாளிக்க சிறிலங்காவின் இராணுவத்தை தயார்படுத்த உதவுதல் என்பன கவனத்தில் கொள்ளப்படும்.

நான்காவது- சர்வதேச மற்றும் பிராந்திய விவகாரங்கள்.

காலநிலை மாற்றத்துடன் போராடுவதற்கான முயற்சிகள், கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பன அடங்கும்.-என்றார்.

(த-வ)

## எமது

அமெரிக்க ஜனாதிபதி, பிரிட்டன் பிரதமர் ஆகியோரிடமும் கோரியுள்ளனர்.

அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 12 கைதிகள் வழக்கு நடவடிக்கைக்காக நேற்று நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதன்போதே அவர்கள் ஊடகங்கள் வாயிலாக இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இடர்களால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக உறவுகளுக்கு முதலில் நாங்கள் இரங்கலைத் தெரிவிக்கிறோம்.

நல்லாட்சி அரசு தமிழ் அரசியல் கைதிகளை மனித கேடயங்களாகவே பயன்படுத்திச் சுயலாபத்தைப் பெற்று வருகின்றது. இந்நிலையை இனியும் தொடர வேண்டாம். அரசியல் கைதிகள் விடயத்தில் பல வாக்குறுதிகளை அமைச்சர் சுவாமிநாதன் வழங்கியிருந்தார். ஆனால் இதுவரை எதனையும் நிறைவேற்றவில்லை.

இந்நிலையில், தமிழ் மக்கள் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று ஐ.நா செயலாளர் நாயகம் பான் -கீ மூனையும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவையும், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனையும் கோருகிறோம்.

எமது விடுதலையை வலியுறுத்திப் பொது மக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் தாயகத்திலும் புலத்திலும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் -என்றனர்.

(த-4)


## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.

## உரும்பிராய் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள ஒரு கடையும், ஒரு மண்டபமும் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் -2015

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் உரும்பிராய் உபஅலுவலக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள கீழ்க் குறிப்பிடப்படும் கடைகளை 01.01.2016ஆம் திகதியிலிருந்து நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன.

குறித்த கடைகளினை பல்பொருள் விற்பனை, சிற்றுண்டிச்சாலை, குளிரகம், காகிதாதிகள் விற்பனை நிலையம், புத்தகசாலை, புதினப்பத்திரிகை விற்பனை, கைத்தொலைபேசி திருத்தகம், கைத்தொலைபேசி விற்பனை நிலையம், போட்டோப்பிரதி செய்யும் கடை, பிஸ்கட் கடை, பல வகை பழவியாபாரம், மிக்சர்கடை, அழகு சாதனப்பொருட்கள் விற்பனை, புடவை விற்பனை, பாதணி விற்பனை போன்ற நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தவேண்டும்.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 17.12.2015 - 23.12.2015
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித்திகதி : 23.12.2015 மதியம் 12.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 23.12.2015 பி.ப 2மணி
கேள்வி திறக்கப்படும் இடம் : பிரதேசசபை தலைமை அலுவலகம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | இடம் | ஒரே தடவையில் செலுத்தும் ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இலக்கம் 02 | உரும்பிராய் சந்தை வளாகம் | 540000.00 | 10000.00 | 1000.00 |
| 02 | மண்டபம் | உரும்பிராய் சந்தை வளாகம் | 3840000.00 | 25000.00 | 1000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பிக்க விரும்புவோர் குறித்த 17.12.2015 - 23.12.2015 வரையான காலப்பகுதிக்குள் படிவத்தினை வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீளவும் ஒப்படைக்க வேண்டும்.
02. விண்ணப்பிக்க விரும்புவோர் கோரிக்கைக் கடிதமும், ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டை பிரதியினையும் சமர்ப்பிக்க வேண்டும்.
03. பூரணப்படுத்திய கேள்விப்படிவத்தினை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை "செயலாளர் வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்". என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. மாதாந்த கடைவாடகையாக பிரதேசசபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். முதல் மாத வாடகைப்பணத்தினை அடுத்து வரும் (ஒவ்வொரு மாதமும்) 10 ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தண்டப்பணமாக 10% அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.
05. கேள்விச் சித்திகாரராகத் தெரிவு செய்யப்பட்டவர் குறிப்பிடப்படும் திகதியில் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக் கொண்டு பிரதேசசபையுடன் ஒப்பந்தத்தினையும் மேற்கொள்ளவேண்டும்
06. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக மூன்றுமாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
07. சபையினால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச்சான்றிதழினையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.
08. சித்திகர குத்தகைகாரர் வலிகிழக்கு பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்க நடந்துகொள்ள வேண்டும்.
09. மேலதிக விவரங்களை வலிகிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.நா.குமணன், செயலாளர்,
வலிகிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணடைந்தோருக்கு

போனோரின் உறவினர்கள் பலர், இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் போன்ற இடங்களுக்கு இராணுவத்தினர் வந்த போது தங்களது உறவுகள் இராணுவத்தினரிடம் சரணடைந்ததாகவும், தற்போது அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்று தெரியாத நிலையில் உள்ளதாகவும் தங்களது சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தனர்.

அத்தோடு 2006, 2007, 2008 ஆண்டுகளில் தங்களது கண்முன்னால் உறவுகள் யாழ்ப்பாணத்தில் வைத்து இராணுவத்தால் கடத்திச் செல்லப்பட்டதாகவும், பின்னர் இராணுவத்தினர் அதை மறுப்பதாகவும் சிலர் தங்களது சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தனர். இராணுவத்தால் கடத்தப்பட்ட, இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட உறவுகளை எங்கு தேடுவது எனவும் அவர்கள் கேள்வியெழுப்பி யிருந்தனர்.

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே ஆணைக்குழுவின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவம் தான் கடத்தியது என்று உறுதியாகக் கூறுகிறீர்கள். நீங்கள் கண்ணால் கண்டதாகவும் கூறிகின்றீர்கள். அப்படி உங்களது உறவுகளை இராணுவம் தான் கடத்தியது என்றால், இராணுவத்திடம் நீங்கள் உங்களது உறவுகளை ஒப்படைத்திருந்தால் அதற்கு முழுப் பொறுப்பும் இராணுவமே. அவர்கள் தான் பொறுப்புக் கூறவேண்டும். குறித்த போர்க் காலப் பகுதியில் நீங்கள் கூறும் இடங்களில் பொறுப்பாகக் கடமையாற்றிய இராணுவத்தினர் விசாரணைக்கு உட் படுத்தப்படுவார்கள். அத்தோடு சில வேளைகளில் அந்த நேரம் அங்கு கடமையாற்றிய இராணுவத்தினர் ஓய்வு பெற்றுச் சென்றிருப்பார்கள். அப்படி ஓய்வுபெற்றுச்சென்றிருந்தாலும் அவர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள்–என்றார். (த-21)

## பாலச்சந்திரனுடன்

இராணுவத்தினர் கைதுசெய்தனர் என்றும் நேரில் கண்டவர்கள் என்னிடம் கூறினர். ஆனால், பாலச்சந்திரன் இராணுவத்தினரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட புகைப்படங்கள் வெளியாகியிருந்தன. அதில் இளைஞர்கள் சிலரின் சடலங்களும் அருகில் இருந்தன. எனினும், அவற்றில் எனது மகன் இருப்பானோ என்று பார்த்தேன். அதில் எனது மகனைக் காணவில்லை. எனது மகன் எங்கே? அவனை மீட்டுத் தாருங்கள்.

இவ்வாறு ஜனாதிபதி ஆணைக்குழு முன் கதறியழுதவாறு சாட்சியமளித்தார் காணாமல்போன ஜங்கரனின் தந்தை மார்க்கண்டு அருளானந்தம். காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் சாட்சியமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது மகன் 2002ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து, கேணல் கடாபியின் அனைத்துலகத் தொடர்பாடல் பிரிவில் இருந்தார். 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது வீட்டுக்கு இராணுவச் சீருடையுடன் வந்திருந்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் (ஈ.பி.டி.பி.) சேர்ந்தவர்கள், என்னைத் துப்பாக்கிமுனையில் மிரட்டி என் மீது தாக்குதல் நடத்தினர்.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யச் சென்றபோது, நீங்கள் சிறைச்சாலையில் வந்து தஞ்சமடைய வேண்டும் என்று அவர்கள் எனக்குக் கூறினர். சிறையில் இருப்பது எனக்கு விருப்பமின்மையால், நாங்கள் குடும்பமாக தலைமறைவாக வாழத்தொடங்கினோம்.

இந்நிலையில், 2009ஆம் ஆண்டு இறுதிப் போர் நடைபெற்றபோது பாலச்சந்திரனுடன் எனது மகன் நின்றார் எனவும், 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி பாலச்சந்திரனுடன் அவரை இராணுவத்தினர் கைதுசெய்தனர் என்றும் நேரில் கண்டவர்கள் என்னிடம் கூறினர்.

ஆனால், பாலச்சந்திரன் இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட புகைப்படங்கள் வெளியாகியிருந்தன. அதில் இளைஞர்கள் சிலரின் சடலங்களும் அருகில் இருந்தன. எனினும், அவற்றில் எனது மகன் இருப்பானோ என்று பார்த்தேன். அதில் எனது மகனைக் காணவில்லை. எனது மகன் எங்கே? அவனை மீட்டுத்தாருங்கள்– என்று கதறியழுதார். (த-21)

## வடக்கு முதலமைச்சரின்

திட்டங்களை, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சபையில் சமர்ப்பித்தார்.

அவை ஒரே பார்வையில்,

**வீடமைப்பு**

75 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ள போதும் 9 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. கன்னார் கூரைத் தகடுகளைத் தவிர்த்து, ஓடுகளால் அமைந்த கூரைத்தகடு வீடுகள் இதில் அமைக் கப்படவுள்ளது.

**சுற்றுலாத்துறை**

83.75 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ள போதும் 50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடிய இடங்களை அழகுபடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

ஒருங்கிணைக்கப்பட்ட வசதிகள் அல்லது சௌகரியங்கள் உள்ளடங்கிய மையங்களைத் தனியார் துறையின் பங்களிப்புடன் உருவாக்குதல்.

சுற்றுலாத்துறைக்கான தகவல்களை வெளிப்படுத்தல் மற்றும் அத்துறை சார்ந்த ஊழியர்களுக்கான இயலுமை விருத்திப் பயிற்சிகளை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

**ஏனையவை**

இந்த ஆண்டு 5 குறை நிரப்பு நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி வீதிகளுக்கு - 100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. சனத்தொகை அடிப்படையில் மாகாணங்களுக்குப் பகிரப்பட்டுள்ளது.

200 மில்லியன் வருமான வரித் திணைக்களத்தின் ஊடாக, உள்ளூராட்சிக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நவீனமுறைகளைத் திண்மக் கழிவகற்றலில் அறிமுகப்படுத்தல்.

**தொழிற்துறை திணைக்களம்**

கச்சாயில் அமைந்துள்ள தும்புப் பயிற்சி நிலையத்தினை புனரமைப்புச் செய்தல்

சுய தொழில் முயற்சியாளர்களுக்கு உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், வியாபார ஆலோசனை வழங்குதல்.

மன்னார் பெரிய கடையில் அமைந்துள்ள சந்தை வாய்ப்பு நிலையத்தை மேம்படுத்தல்.

(த-5-ரி5)

## அரசியல்

பட்டுள்ளது.

அரசியல் கைதிகளாக உள்ளவர்களில் 12 பேர் கொழும்பு நீதிவான் மன்றம் இலக்கம் 8 இல் நேற்று முற்படுத்தப் பட்டனர்.

வழமையாக 10 தொடக்கம் 12வரையான சிறைச்சாலை உத்தியோகத்தர்களே அரசியல் கைதிகளை வழக்குக்கு அழைத்துச் செல்லும் நிலையில், நேற்று 12 அரசியல் கைதிகளுக்காக 30சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பணியில் ஈடுபட்டனர்.

நேற்று நீதிமன்றில் பிரதான நீதிவான் சமுகமளிக்காமையால், பதில் நீதிவான் அந்த வழக்கை விசாரித்து எதிர் வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(த-4)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நெ.ஜயாத்துரை சண்முக வடிவு



அத்தியடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சண்முக வடிவு நேற்று (16.12.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முக ஐயா-வள்ளி அம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், சண்முகநாதனின் (கனடா) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயமணியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2015) வியாழக்கிழமை இல.115(25), அம்பலவாணர் வீதி, அத்தியடியில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(67985) (10.17) தகவல்: ம.ஜெயராஜா

### திருமதி பிலோமினா வென்சஸ்லோஸ் (ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியை)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு - யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா வென்சஸ்லோஸ் நேற்று (16.12.2015) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னப்பிரகாசம் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அவுறாம் பிள்ளை - ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் திரு. ஸ்ரான்லி வென்சஸ்லோஸ் (ஓய்வு பெற்ற முதலியார் - மல்லாக நீதிமன்றம்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பீலிக்ஸ் ரட்ணராணி, பொலின், அருட்சகோதரி அன்ரனி ஜோசப் (ஓய்வு பெற்ற அதிபர் - யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்) அஞ்சலீனா, கிறிஸ்ரினா, மனோரஞ்சிதம், றெஜினா ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி ரியூலிப் மகேசனின் சிறியதாயாரும் மகேசனின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை பெனடேற், ஜோர்ஜ் மற்றும் சாள்ஸ்லின்ரா காலஞ்சென்ற சந்திரா மற்றும் சறோ, மரியதாஸ் ஸ்ரனில்லோஸ் (வைத்திய கலாநிதி - லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.12.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணிக்கு புனித அன்னம்மா ஆலயம் பாண்டியந்தாழ்வில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அச்சுவேலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

60/1. 2ஆம் விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர்.

### சுவாமிநாதர் மயில்வாகனம் (மயிலம்மான்)



மாரீசன் கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும், கொத்தாவத்தை அளவெட்டிமத்தி அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதர் மயில்வாகனம் 15.12.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதர்- நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம்- வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதி (அசலாம்பிகை) அவர்களின் ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், முத்தம்மா, நடராஜா, நவமணி ஆகியோரின் சகோதரரும் காலஞ் சென்றவர்களான சண்முகம், இரத்தினசிங்கம், மார்க்கண்டு, சந்திரசேகரம், திருநாவுக்கரசு, கமலாதேவி மற்றும் அமுதாம்பிகை, குமாரசாமி, வனஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.12.2015 புதன்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 300 6243
கொத்தாவத்தை, அளவெட்டிமத்தி,
அளவெட்டி.
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை விவேகானந்தன் (குணம்)



யாழ். காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத் துரை விவேகானந்தன் 14.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாதசிங்க பிள்ளை- கனகலச்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் ஆருயிர்க் கணவரும் உதயகரன், கிருபாகரன், சசிகரன், வினுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சச்சிதானந்தன்(கனடா), சதானந்தன்(கனடா), சிவானந்தன்(கொழும்பு -GIZ VTN), நிர்மலாதேவி, இந்திராதேவி, (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஷர்மினி, பிரதீபா, நிர்மலா, அஜந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் புஸ்பராஜா, ஜெயராணி, ஜெயராஜா, தேவராஜா, கருணராஜா, யோகராணி, யோகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் திவ்யன், நிதுஜா, ஆர்த்தி, ஆதி, சஞ்ஜே, சோனியா, நவீன், அடோரா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2015) வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவானந்தன்(சிவம்- சகோதரன்)
077 1920212

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 03 . 1951



இறப்பு 15 . 12 . 2015

### செல்வி அரியகுட்டி பூமணி (கிளி)

இலக்கம் 319, புங்கங்குளம் சந்தி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அரியகுட்டி பூமணி (கிளி) 15.12. 2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி-சின்னம்மா தம்பதிய ரின் அன்பு மகளும், சிரோன்மணி, சுசீலாதேவி, புஸ்பராணி (பவா- கனடா) அமுதலிங்கம் (கனடா) அழகுராணி (ராசாத்தி-கனடா) ஆகி யோரின் பாசமிகு சகோதரியும், கணேஸ், இரத்தினசிங்கம், சிவோதயன் (கனடா), பிறேம் (கனடா), இராசமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2015) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.319, புங்கங்குளம் சந்தி,
அரியாலை.
(67982) (10.17)
தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குப் பேரிடர்

வடக்கு அரசு, இந்த ஆண்டு முதல் இந்தத் தினம் கடைப்பிடிக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.

மேலும், இடர் தவிர்ப்பு – தணிப்பு நடவடிக்கைக்கான திட்டமிடல்களை மேற்கொள்வதற்கான ஆரம்பப் புள்ளியாகவும் இது அமையும் என்று, இந்தத் தினத்தைப் பிரகடனப்படுத்துவதற்கான பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில், விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் வரவு – செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் இடம்பெற்று வருகின்றது. இரண்டாம் நாளான நேற்று சபையின் ஆரம்பத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர், பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயற்கையின் சீற்றங்கள் புதியன அல்ல. பூமியில் வாழ்கின்ற உயிரிணங்கள் பூமியில் தாங்கள் தோன்றிய காலம் முதல் ஏதோ ஒருபரிமாணத்தில் இயற்கையின் சீற்றங்களை அனுபவித்தே வந்திருக்கின்றன. ஆனால், அண்மைக் காலமாக இயற்கைச் சீற்றங்கள் உலகையே உலுக்கும் பேரிடர்களாக உருவெடுத்து வருகின்றன.

வெப்பநிலை உயர்வு பூகோள ரீதியாகக் காலநிலையில் எதிரும் புதிருமான பல மாற்றங்களைக் கடுகதியில் ஏற்படுத்தி வருகிறது. ஒரு புறம் மழையால் வளம்கொழித்திருந்த பல பிரதேசங்கள் வரட்சியால் காயத்தொடங்க, இன்னொரு புறம் வரண்டிருந்த பல பிரதேசங்களை மழை வெள்ளம் மூழ்கடித்துக் கொண்டிருக்கிறது.

காலநிலை மாற்றங்களால் வருங்காலத்தில் இலங்கையும் பேரிடர்களைச் சந்திக்கும் என்று ஆய்வாளர்களால் எதிர்வு கூறப்பட்டுள்ளது. குறிப்பாக, வடக்கின் தலைப் பகுதியான யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கடல் காவுகொள்ளும் என்றும் எச்சரிக்கப்படுகின்றது.

இயற்கையின் சீற்றம் தவிர்க்க முடியாததொன்று. ஆனால், இயற்கைக்கு முரணான, எதிரான எமது நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் இயற்கையின் சீற்றத்தைத் தணிவித்துப் பேரழிவுகளிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். அவ்வாறு தணிப்பதற்குப் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசரமான அவசியம் ஆகும்.

இதற்கான ஒரு தொடக்கப் புள்ளியாக வடக்கு மாகாணத்துக்கென இயற்கைப்பேரிடர் தணிப்புத்தினம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி, ஆண்டுதோறும் கடைப்பிடிப்பது காலப் பொருத்தமானது.

சுனாமி, தாக்கிப் பதினொரு ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் அது ஏற்படுத்திய வலி இன்னமும் ஆறவில்லை. 'இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்' என்று இயற்கை எமக்கு உரத்துப் போதித்த, கடற்கோள் தாக்கிய தினமான டிசெம்பர் 26 ஆம் திகதியை வட மாகாண இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினமாகப் பிரகடனப்படுத்து வதற்கு பிரேரணையைச் சமர்ப்பிக்கிறேன் – என்றார்.

இதனை வழிமொழிந்த ஆளுங்கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன், நாம் இடர்கள் ஏற்பட்ட பின்னர் தான் நடவடிக்கைகளை எடுக்கின்றோம். பேரிடர்கள் ஏற்படாமல் இருப்பதற்கு – அதனைத் தடுப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை எடுப்பதற்கான குழு அமைக்கப்பட வேண்டும் – என்றார்.

ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினரான இ.ஆனோல்ட் தெரிவிக்கையில், மழையினால் யாழ்ப்பாணம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதற்கு நாம் – வடக்கு மாகாண சபையினால் என்ன செய்தோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது உதவிகளைச் செய்தோமா ? அப்படியிருக்கையில் இவ்வாறு தினங்களைப் பிரகடனப்படுத்தி என்ன பலன் ? எமது மாகாண சபையில் இவ்வாறான இடர்களைத் தடுப்பதற்கு – எதிர்கொள்வதற்கு ஓர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் – என்றார்.

எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவிக்கையில், பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றிக் கொண்டிருப்பதில் பலனில்லை. வடக்கு மாகாணத்தில் இன்று கழிவு முகாமைத்துவம் சீரழிந்து இருக்கின்றது. அதனை எதிர்கொள்ள – தடுக்கும் வகையில் எங்களிடம் திட்டம் இருக்கின்றதா ? பல வடிகால்கள் மூடப்பட்டுள்ளன. இதற்கு கடந்த கால அரசையும் – மாநாகரசபையையும் குறை கூறிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை. திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டும் – என்றார்.

இறுதியில் பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (த-5-ரி5)

## ஐரோப்பிய

தலைவரின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாட லின்போது புதிய அரசி யல் யாப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்கு–கிழக்கு மக்களின் காணிப் பிரச்சினை, மீள் குடியேற்றம், வீட்டுத்திட்டம், மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் , எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் ஐரோப்பிய ஒன்றிய தூதுவரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

அத்துடன் வடக்கு–கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆற்றும் பங்களிப்புக்கும் அவர் தமது நன்றியைத் தெரிவித்தார். (த–சி)

Galaxy Star
வெற்றி வாரம் 017 திகதி 16.12.2015
05 12 20 29 31
ரூ. 3,190, 700-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2713 திகதி 16.12.2015
03 44 60 62 K 01
ரூ. 15,362,125/-

தவறிவிட்டது
தொடர்பு: 077 519 7825
மகேந்திரன் விஜயகுமார் என்பவருடைய
தே. அ. அட்டை(812042351V). சாரதி
அனுமதிப்பத்திரம் அடங்கிய பேஸ் தெல்லிப்பழை
துர்க்கை அம்மன் கோயிலுக்கும் மருதனார்மடம்
அண்ணா பாமுக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தேவை
கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள எமது நிறுவனத்துக்கு Account Clerk தேவை.
தகைமை:
1. கணினி அறிவு (MS office)
2.கணக்கியல் அறிவு விரும்பத்தக்கது.
T.P: 077 3614 638

வேலையாள்கள் தேவை
தொடர்பு: 077 646 8452
அலுமினியம் "பிற்றிங்ஸ்"
வேலை செய்வதற்கு வேலை
தெரிந்தவர்கள் உடன்
தொடர்புகொள்ளவும். உணவு,
தங்குமிட வசதி செய்து
கொடுக்கப்படும்.

AMAAGE RESTURANT
(அமேஜ் ரெஸ்ரோரண்ட்)
உணவு பரிமாறுபவர்கள்
(ஆண்கள்- சப்ளையர்)தேவை.
Main Street
Point -Pedro
தொடர்குக்கு: 077 621 4224

சிங்களம்
3 மாத சனி ஞாயிறு பயிற்சிநெறி
அரச, தனியார் ஊழியர்கள், தொழில்தேடுவோர், இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள், வயதுவந்தோர் இணையமுடியும்!
இது ஒரு முழுமையான தமிழ்மூல சிங்களப்பயிற்சிநெறி என்பதால் சரளமாக சிங்களம் பேசவும், எழுதவும் பரீட்சைகளை எதிர்கொள்ளவும் முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 19.12.2015 சனிக்கிழமை
பிரிவு1. மாலை 03.00 பிரிவு2. மாலை 04.00
வாரநாள் (செவ்வாய் வியாழன்) பிரிவுகள் ஆரம்பம்-17.12.2015
1. மாலை.3.30 பிரிவு2. மாலை 04.30
SAAMSON
Experts in Language Training
279, ஆஸ்பத்திரி பின்புறம்,
யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

### 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1932 |  | 2015 |
| 12 | | 11 |
| 01 | | 27 |

கடந்த 27.11.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
ஈஸ்வரன் சிற்பஸ்தாபன ஸ்தாபகர், சோதிடர், பேரிவாத்ய விஸ்வ பிரமன்
விஸ்வசிரம்மஸ்ரீ

**கலாபூஷணம் அமரர் சின்னத்தம்பி நாகராசா**
**(சிற்பாச்சாரியார்)**

அவர்களின் சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (17.12.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் அனைவரையும் அன்னாரினது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நிகழும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது மறைவுச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி மூலமாகவும், இணையம் மூலமாகவும் கண்ணீர் அஞ்சலி மூலமும் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

ஆசாரி வீதி, தாவடி கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். குடும்பத்தினர்.

### 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 12 |  | 07 |
| 09 | | 01 |
| 1950 | | 2014 |

## கந்தன் தம்பித்துரை

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே ! அப்பாவே !
அன்பு எனும் மழையில் எமை நனைய வைத்து
பண்பு எனும் சோலையில் எமை அமரவைத்து
கருணை எனும் கரங்களால் எமை அரவணைத்து
அறிவு எனும் மணிகளைக் கோர்த்து
பாசமாய் வாழவே பாதைகள் காட்டி நின்றீர்கள் !
நீங்கள் எமை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் இரண்டு ஓடிவிட்டன
ஆறவில்லை அப்பா உங்கள் பிரிவின் துயர்..... !
மௌனமாய் மொழிபேசும் உங்கள் திருமுகம் – எங்கே?
மெலிதாய் உதட்டில் பூக்கும் உங்கள் புன்னகை – எங்கே?
பண்பாகக் கதை பேசும் உங்கள் வார்த்தைகள் எங்கே?
வெள்ளை உள்ளங்கொண்ட உங்கள் நல்லகுணம் – எங்கே?
எமைப் பிரியும் தருணங்களில் உங்கள் – பரிதவிப்பு எங்கே?
அனைத்தையும் மீண்டும் காணத்துடிக்கின்றோம் – அப்பா
உங்கள் பிள்ளைகள் ஈராண்டு அல்ல
இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களின் இனிமையான நினைவுகளே
நிழலாடிக் கொண்டிருக்கும் எம் நெஞ்சத்துள்....

குடும்பத்தினர்.

இல.533/11 ஆம் யூனிற், தருமபுரம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதநிலாவுக்கு இலகுவெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 17
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் வவுனியாமாவட்டஆட்டங்களில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் மருதநிலா அணி வெற்றிபெற்றுள்ளது.
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தால் ஏவ்.ஏ.கிண்ணத்துக்கான தொடர் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொடரில் வவுனியா மாவட்ட கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் கடந்த திங்கட்கிழமைபிற்பகல்3.30மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து ஏ.பி.சி. அணி மோதிக் கொண்டது. இதில் மருதநிலா அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## மெய்வன்மைப் பயிற்சி முகாம்

வலி வடக்கு, டிசெ. 17
வட மாகாணத்தின் மெய்வன்மைத்திறனை வளர்த்தெடுக்கும் வகையில் வடமாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் மாதகலில் நடைபெற்றுள்ளது.
கடந்த திங்கட்கிழமை முதல் நேற்றுவரை நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமில் வட மாகாணத்தின் அலுவலர்கள் 55 பேர் கலந்து கொண்டனர்.
வடமாகாண தேசிய சேவைகள் மன்றப் பணிப்பாளர் சந்திரா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண சபையின் உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ம-86)

# வடமாகாண மேசைப்பந்தாட்டத் தரப்படுத்தலில் பல்கலை, தெல்லிப்பழை யூனியன் முதலிடம்

கரணவாய், டிசெ. 17
யாழ். மாவட்ட மேசைப்பந் தாட்டச் சங்கத்தனால் நடத்தப்பட்ட தொடர்களில் வீர வீராங்கனைகள் வெளிப்படுத்திய பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கான தரப்படுத்தல்கள் அண்மையில் வெளியிடப்பட்டன.
ஒட்டுமொத்தத் தரப்படுத்தலில் (வயதுப் பிரிவுக்கான தரப்படுத்தல்களைத் தவிர்த்து) ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சஜீவன் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளார். பெண்கள் பிரிவில் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆர்.ஏ.பிரசாடி முதலாம் இடத்தைப் பிடித்துள்ளார்.




**ஆண்கள் பிரிவு**
ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவனான எஸ்.சஜீவன் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளார். எஸ்.கில்பேர்ட் (யாழ். பல்கலைக் கழகம்) இரண்டாம் இடத்தையும், எஸ்.ஜெனோசன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) எஸ்.மேசாக் (யாழ். மத்திய கல்லூரி) இருவரும் மூன்றாமிடத்தையும், எஸ்.துஸ்யந்தன் (ஆனைக் கோட்டை றோ.க.த.க. பாடசாலை), எஸ்.கிருசிகன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), எஸ்.சாமுவேல் (யாழ். மத்திய கல்லூரி) எஸ்.நந்தகோபி (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) ஆகிய நால்வரும் நான்காம் இடத்தையும் பகிர்ந்து கொண்டனர்.
தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களுக்குள் வந்தவர்களில் நால்வர் யூனியன் கல்லூரியைச் சேர்ந்தவர்களாவர்.

**பெண்கள் பிரிவு**
பெண்கள் பிரிவில் ஆர்.ஏ.பிரசாடி (யாழ். பல்கலைக் கழகம்) முதலாம் இடத்தையும், எஸ் சிவஜனனி (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை) இரண்டாம் இடத்தையும், எஸ்.நர்மதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), எஸ்.கிதுர்சனா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகிய இருவரும் மூன்றாம் இடத்தையும், எஸ்.நிதுசா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ்.மேரி ஆன் திரேசா (வல்வை மகளிர் கல்லூரி), எஸ்.கிரிஜா (வல்வை மகளிர் கல்லூரி), எஸ்.கேமா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகிய நால்வரும் நான்காம் இடத்தையும் கைப்பற்றினர். (ம-108)




வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சில விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்களை வழங்கியுள்ளார். (ம-23)

## இன்றைய மோதல்கள்

றோயல் வி.கழகத் தொடர்
யாழ்ப்பாணம், டிசெ. 17
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் காற்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து வளர்மதி அணி மோதவுள்ளது.
தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ் ஐக்கியம் அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி மோதவுள்ளது.

எவ்.ஏ. கிண்ணத் தொடர்
இலங்கை காற்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் ஏவ்.ஏ. கிண் ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில், வவுனியா மாவட்ட லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்மாதர் அணியை எதிர்த்து அம்மன் அணி மோதவுள்ளது. (ம-23)



## அடுத்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் சென்னை வீரர்களுடன் தொடர்வதில் மகிழ்ச்சி

## என்கிறார் மக்கலம்

சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்குப் பதிலாக அறிவிக்கப்பட்ட புனே, ராஜ்கோட் அணிகளில் மக்கலம் ராஜ்கோட் அணியில் இடம்பிடித்தார். இவருடன் ரெய்னா, ஜடேயா, பிராவோ போன்ற சென்னை வீரர்களும் இடம்பிடித்துள்ளனர். ராஜ்கோட் தெரிவுசெய்த 5 வீரர்களில் நால்வர் சென்னை அணியைச் சேர்ந்தவர்கள். இதனால் சென்னை வீரர்களுடன் அடுத்த வருட ஐ.பி.எல். தொடரைத் தொடர்வது தமக்கு மகிழ்ச்சி என்று தெரிவித்துள்ளார் மக்கலம்.
இது தொடர்பாக மக்கலம் தெரிவிக்கையில் - சென்னை அணி வீரர்களுடன் மீண்டும் இணைந்து விளையாடுவதில் மகிழ்ச்சி. ஐ.பி.எல். தொடர், கழகங்களுக்கு இடையிலான தொடர்களில் சிறப்பானது. அடுத்த வருடம் ராஜ்கோட் அணிக்காகக் களமிறங்குவதில் ஆர்வமாக உள்ளேன். சென்னை அணி இல்லாமல் போனது துரதிர்ஷ்டமானது. என்றார். ராஜ்கோட் அணியின் தலைவராக ரெய்னா அல்லது மக்கலம் இருவரில் ஒருவர் தெரிவாக வாய்ப்புக்கள் உள்ளன. (ம)

## பருத்தித்துறை லீக்கின் முடிவுகள்

பருத்தித்துறை காற்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 5 வீரர்கள் பங்குபற்றும் காற்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்
முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து விளையாடிய திக்கம் இளைஞர் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் தொண்டமானாறு ஒற்றுமை அணியை எதிர்த்து விளையாடிய உதய தாரகை அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் நெற்கொழு கழுகுகள் அணியை எதிர்த்து பொலிகை பாரதி அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால் சமநிலைத் தகர்ப்பு உதைகளில் நெற் கொழு கழுகுகள் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டோனியை எதிர்க்கத் தயார் என்கிறார் சுரேஸ் ரெய்னா

ராஜ்கோட் அணிக்காகத் தெரிவாகியுள்ள ரெய்னா, டோனியை, அவரின் சவால்களை சந்திக்கத் தயார் என்று தெரிவித்துள்ளார்.
ஐ.பி.எல். கிரிக்கெட் வரலாற்றில் அதிக ஓட்டங்களைக் குவித்தவரான சுரேஸ் ரெய்னா (3ஆயிரத்து 699 ஓட்டங்கள்), இதுவரை சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் எந்த ஆட்டத்தையும் தவறவிடாத வீரர் என்ற சிறப்புக்குரியவர். அது மட்டுமல்லாமல் இவரும் டோனியும் கடந்த 8 வருடங்களாக சென்னைக்காகவே விளையாடி வந்தனர். இந்த நிலையில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட அணிகளில் புனே டோனியையும், ராஜ்கோட் ரெய்னாவையும் தலா 12.5 கோடிகளுக்கு (இந்தி மதிப்பில்) எடுத்திருந்தன. இதனால் முதல் முறையாக அடுத்த சீசனில் அவர் டோனியை நேருக்கு நேர் எதிர்த்து மோத இருக்கிறார்.
இது தொடர்பாக ரெய்னா தெரிவிக்கையில் – "டோனி ஒரு மிகப்பெரும் தலைவர். அவருடன் நீண்ட காலமாக விளையாடிய அனுபவம், அவரை நேருக்கு நேராக எதிர்க்கக் கைகொடுக்கும். டோனிக்கு எதிராக விளையாட்டு வீரருக்குரிய முழு உத்வேகத்துடன் விளையாடுவோம். மாநிலங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் ராஜ்கோட்டில் விளையாடிய அனுபவம் எனக்குக் கைகொடுக்கும்." –என்றார். (ம)





## இறுதி டெஸ்ட் நாளை ஆரம்பம் தொடரைச் சமனாக்குமா இலங்கை?


இலங்கை– நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் நாளை நியூசிலாந்தின் கமில்டன் மைதானத்தில் ஆரம்பமாகிறது.
முடிவடைந்த முதல் டெஸ்ட்டில் இலங்கை அணி 122 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்திருந்தது. இதனால் தொடரில் 1:0 என்று முன்னிலை வகிக்கிறது நியூசிலாந்து. நாளை ஆரம்பமாகும் ஆட்டத்தில் வென்றால் மட்டுமே குறைந்த பட்சம் தொடரை சமன்செய்ய முடியும் என்ற இக்கட்டான நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. மாறாக ஆட்டம் சமநிலையில் முடிந்தாலோ அல்லது நியூசிலாந்து வெற்றிபெற்றாலோ கிண்ணம் அந்த அணியிடம் சென்றுவிடும். எனவே வென்றே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் இலங்கை களமிறங்குகிறது. முதல் டெஸ்ட்டில் களமிறங்கிய அதே வீரர்களே இந்த டெஸ்ட்டிலும் களமிறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## டெஸ்ட் ஆட்டங்களில் அரங்கு நிரம்ப வேண்டும்

### இது கோக்லியின் ஆசை

இந்தியக் கிரிக்கெட் அணி சரியான திசையில் சென்றுகொண்டிருக்கிறது என்று தெரிவித்த டெஸ்ட் அணித் தலைவர் கோக்லி, டெஸ்ட்டின் மகத்துவத்தையும் அதன் சிறப்பையும் தொடர்ந்து தக்க வைக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.
இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்; "சச்சின், ராகுல் ராவிட், வி.வி.எஸ். லக்ஸ்மன், வீரேந்திர சேவாக், சவுரவ் கங்குலி ஆகிய மூத்த வீரர்கள் எங்களுக்கான முன்னுதாரணங்களை உருவாக்கியிருக்கிறார்கள். இவர்களுடைய இடங்களை எப்படி நிரப்பப்போகிறோம் என்று எப்போதும் நான் மலைப்பதுண்டு. சில மாதங்களுக்கு முன்னர் எம்மிடையே தளம்பல் நிலை இருந்தது. ஆனால் இப்பொழுது அது பெருமளவில் குறைவடைந்துள்ளது. அணி சீரான திசையில் சென்றுகொண்டிருக்கிறது. எங்களால் எந்த அணியையும் வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.
டெஸ்ட் ஆட்டங்கள் படிப்படியாக அதன் முக்கியத்துவத்தை இழக்க ஆரம்பித்திருக்கின்றன. இது கவலைக்குரியது. கிரிக்கெட்டுக்கு அழகு டெஸ்ட் ஆட்டம் தான். அதைப் பலப்படுத்த வேண்டும். முன்னர் டெஸ்ட் ஆட்டங்களில் அரங்குகள் நிரம்பி வழிந்திருக்கின்றன. அது மீண்டும்நடைபெற வேண்டும்." – என்றார்.






இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அஸ்டன் விலாவை 2:0 என்ற கோல்கணக்கில் வீழ்த்திய ஆர்சனல் அணி குறித்த தொடரின் தரப்படுத்தலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. (ம)

## சிறந்த இந்திய டெஸ்ட் அணியை அறிவித்தார் ஆஸியின் வோர்ண்


தான் விளையாடிய சம காலத்தில் விளையாடிய வீரர்களை வைத்து சிறந்த அணிகளை அறிவித்து வரும் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் ஜாம்பவான் சேன் வோர்ண், இந்தியாவின் சிறந்த டெஸ்ட் அணியை நேற்று அறிவித்துள்ளார்.
இரண்டு முச்சதம் அடித்த சேவாக் மற்றும் நவ்ஜோத் சித்து இருவரையும் தொடக்க வீரர்களாக தெரிவு செய்துள்ளார். இந்திய அணியின் தடுப்புச்சுவர் ராகுல் ராவிட்டுக்கு வழக்கமான 3ஆவது இடத்தை வழங்கியுள்ளார். அதே போல் இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவான் சச்சினுக்கு 4ஆவது இடத்தை வழங்கியுள்ளார்.



வோர்ண் தெரிவு செய்த டெஸ்ட் அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் விவரம்:– வீரேந்திர சேவாக், நவ்ஜோத் சிங் சித்து, ராகுல் ராவிட், சச்சின் ரெண்டுல்கர், சவுரவ் கங்குலி, அசாருதீன், கபில்தேவ், மகேந்திர சிங் டோனி, அனில் கும்ப்ளே, ஹர்பஜன் சிங், ஜவகல் ஸ்ரீநாத், 12ஆவது வீரராக லக்ஸ்மன். (ம)

# என்னிடம் வெள்ளைச் சீருடை உள்ளது; உலக அணிகளை எச்சரிக்கிறார் கெயில்

தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருகின்ற காரணத்தினால் மேற்கிந்தியத் தீவுகள் மீது ஏகப்பட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. தீவுகளின் இந்தத் தோல்விக்கு கெயில் டெஸ்ட் ஆட்டங்களில் களமிறங்காமையும் முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது. இந்த விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக தன்னிடம் வெள்ளைச் சீருடை உள்ளது என்றும்– தான் டெஸ்ட் கிரிக்கெட்டை விட்டுச் செல்லவில்லை என்றும் கெயில் தெரிவித்துள்ளார்.
முதுகுவலியால் ஓய்வில் இருந்த கெயில் கழகங்களுக்கு இடையிலான ரி–20 தொடரில் தற்பொழுது விளையாடி வருகிறார். நீண்ட நேரம் [illegible] டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து சற்று விலகியுள்ளார். இதற்கு முதுகில் உள்ள வலி முழுமையாகக் குணமடையாததே காரணம் என்று சொல்லப்படுகிறது. தீவுகளும் தற்பொழுது ஏனைய அணிகளிடம் வாங்கிக் கட்டிக் கொண்டிருப்பதனால், கெயில் டெஸ்ட்டில் இருந்து விலகி இருப்பதுதான் தோல்விக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விமர்சனங்களுக்கு எதிராக கருத்துத் தெரிவித்துள்ள கெயில், "என்னிடம் வெள்ளைச் சீருடை உள்ளது. நான் டெஸ்ட் கிரிக்கெட்டை விட்டுச் செல்லவில்லை. எனது நாட்டை நான் மிகவும் நேசிக்கிறேன். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்று வரும் தொடரில் இடையில் களமிறங்க எண்ணவில்லை. ஏனெனில் எனது முதுகு வலி முழுமையாகக் குறைவடையவில்லை. டெஸ்ட் ஆட்டங்கள் ரி–20 ஆட்டங்களைப் போன்றவை அல்ல. டெஸ்ட்டில் விளையாட முழு உடற்தகுதி வேண்டும். அடுத்த வருடம் தீவுகளுக்காக டெஸ்ட்டில் களமிறங்குவேன்." என்று கூறியுள்ளார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### கந்தையா பரமு (ஓடலி சண்முகம்)



காரைநகர் களபூமி, விளானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பரமு (ஓடலி சண்முகம்) 14.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற விஜயலட்சுமியின் அன்புச் சகோதரனும் நாகேஸ்வரி காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் கெங்காதேவி, கிருபாலரட்ணம், கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுருநாதன், கமலேஸ்வரி, தனபால சிங்கம், தேவமலர் (சியா), தங்கேஸ்வரி (தயா) ஆகியோரின் மாமனாரும் சிவனேஸ்வரி, சிவமலர், சிவரூபி, இந்திரன், ஜனன்தீசன், மகிந்தீசன், தீபிகா, லவேந்திரன், கஜேந்திரன், உஷாந்தன், பிருந்தன், பிரசாந்தன், குகப்பிரியா, பிரியங்கா, அஜந்தன், ஜெயந்தன் ஆகியோரின் ஆசைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2015) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தில்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளானை, களபூமி,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

வடமாகாண
விளையாட்டுத்துறை
உத்தியோகத்தர்
இறுதிக்கருத்தரங்கு
வெள்ளி -(18/12)
காலை - 9.00 - 3.00 மணிவரை
T.P. 076 688 3394

வேலையாள்கள் தேவை
Photoshop, Corel Draw
தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்
கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.
[மக்கள் வங்கிக்கு அருகில்]
T.P :- 021 312 0688

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 29 . 04 . 1945



மறைவு 17 . 11 . 2015

கடந்த 17.11.2015 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்

### சின்னத்துரை தில்லைமகாராசன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (17.12.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்)

கிரிச்சோலை,
டச்சு வீதி, உடுவில், சுன்னாகம்.

குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.